www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16-31 அக்டோபர்

4-23

விலை ரூ.1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




## பீரங்கித் திருடன் ராஜீவின் அண்டப் புளுகு அம்பலம்!

படிப்பகம்

www.padippakam.com

# அறிவிப்பு!

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே, முகவர்களே!**

உங்களது உறுதியான ஒத்துழைப்பினாலும் ஊக்கமான ஆதரவினாலும் "புதிய ஜனநாயகம்" கடந்த நான்கு ஆண்டுகளாகத் தடையின்றி பீடுநடை போட்டு முன்னேறி வருகிறது. புற்றீசல்கள் போல் நாளும் பெருகிவரும் மஞ்சள் - மசாலா பத்திரிக்கைகளுக்கு மத்தியில் புரட்சிகர அரசியலைப் பரந்துபட்ட உழைக்கும் மக்களிடம் எடுத்துச் செல்லும் நோக்கில் நமது இதழைக் 'குறைந்த விலையில்' வெளியிட்டு வருவதும், புரட்சிகர சக்திகளிடம் நமது இதழ் கணிசமான வீச்சை ஏற்படுத்தியிருப்பதும் உங்களது அளப்பரிய உழைப்பினால்தான்.

ஆனாலும் ஒருபுறம் நிதி நெருக்கடியும், மறுபுறம் காகித விலையேற்றமும் நமது இதழைத் தொடர்ந்து அச்சுறுத்துகின்றன. விடாப்பிடியாகப் போராடி விற்பனையை உயர்த்தியும், நன்கொடைகள் - சந்தாக்கள் திரட்டியும் நாம் இந்நெருக்கடிகளை ஓரளவு சமாளித்து வந்தோம்.

இருப்பினும், பாசிச ராஜீவ் கும்பல் தொடர்ச்சியாக காகித விலையை அநியாயமாக உயர்த்தியுள்ளதன் விளைவாக, நமது பத்திரிக்கை மட்டுமின்றி அனைத்து சிறு பத்திரிக்கைகளும் குரல்வளை நெறிக்கப்பட்ட நிலையில் உள்ளன. கடந்த ஈராண்டுகளில் மட்டும் காகித விலை 200% உயர்ந்துள்ளது. தரமான அன்னிய செய்தித்தாள் காகிதத்துக்குத் தட்டுப்பாடும் நிலவுகிறது. கள்ளச் சந்தை வியாபாரிகள் வழக்கம்போல் பதுக்குவதால் தட்டுப்பாடு அதிகமாகி மீண்டும் விலை உயர்கிறது. காகித விலையேற்றம் ஒருபுறமிருக்க, மறுபுறம் ஈழப் போரைத் தொடர்ந்து பொதுவில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வின் காரணமாக, நமது பத்திரிக்கை மிகவும் நட்டப்பட்டு, நிதி நெருக்கடி முற்றி முறையாக கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது.

எனவே, நமது இதழை முறையாகவும் நட்டமின்றியும் கொண்டுவரும் நோக்கில், நவம்பர் 1 முதல் இதழ் விலையை ரூ.2 ஆகி உயர்த்துவது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம்.

தவிர்க்கவியலாத, நியாயமான இம்முடிவை ஏற்பீர்கள் என்று நம்புகிறோம். புதிய ஜனநாயகப் புரட்சிப் பணி தொடர உங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் என்றும் நாடுகிறோம்.

— ஆசிரியர் குழு.

# புதிய ஜனநாயகத்தின் புரட்சிப் பணி தொடர உதவுங்கள்!

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

அரசின் அடக்குமுறை, ஓட்டுக்கட்சிகளின் மிரட்டல் போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொண்டு தனது புரட்சிப்பணியைத் தொடரும் உங்களது "புதிய ஜனநாயகம்" இதழ், கடந்த சில ஆண்டுகளாக கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. உங்களது ஒத்துழைப்புடன் இதழைத் தடையின்றி நடத்திவரும் நாங்கள் குறிப்பாக, காகித விலையேற்றத்தின் காரணமாக இவ்வாண்டில் மட்டும் இதுவரை நான்கு முறை இதழை உரிய காலத்தில் கொண்டு வர முடியாமல் இரு இதழ்களாகச் சேர்த்து வெளியிட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

பெரும் மூலதனத்தைக் கொண்டு இலாப நோக்குடன் நடத்தப்படும் பத்திரிக்கை அல்ல "புதிய ஜனநாயகம்". இது மக்களைச் சார்ந்து இயங்கும் பத்திரிக்கை; புரட்சிப் பணியை மேற்கொண்டுள்ள மக்கள் இயக்கம். எனவே தான் எதிர்கொண்டுள்ள நெருக்கடியை முறியடிக்க பொதுமக்களின் நிதியுதவியையும், புரட்சிகர இயக்கங்களின் உழைப்பையும் சார்ந்து நிற்கிறோம்.

கடந்த நான்காண்டுகளாக இப் புதிய ஜனநாயகப் பயிரை உரமிட்டு வளர்த்த உங்களிடம் உரிமையுடன் கேட்கிறோம், உங்களால் இயன்ற நிதியுதவியைத் தாருங்கள் என்று. இந்தப் பத்திரிக்கையின் பணி தொடருவதில் உங்கள் பங்கைச் செலுத்த வேண்டியதன் கடமையையும் அவசியத்தையும் நீங்கள் உணர்ந்து ஏற்பீர்கள் என்று நம்புகிறோம்.

புதிய ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை உணர்ந்து மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய எமது தோழமை அமைப்புகளும், வாசகர் வட்டங்களும், தமிழகமெங்கும் வளர்ச்சி நிதி திரட்டும் இயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றன. இவ்வியக்கத்தில் பங்கெடுங்கள்! உங்களால் இயன்ற அளவு நிதி திரட்டிக் கொடுத்து உதவுங்கள்!

தோழமையுடன்,
ஆசிரியர் குழு.

# வளர்ச்சி நிதி திரட்டும் இயக்கம்: மக்களின் மனமுவந்த ஆதரவு!

புதிய ஜனநாயகம் ஏட்டிற்கு வளர்ச்சி நிதி திரட்டும் வகையில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி, துண்டுப் பிரசுரம், பத்திரிக்கையை வினியோகித்து நிதி வசூல் செய்வதென தீர்மானித்து, தோழர் வெங்கடேசன் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவாக நாங்கள் 3.10.89 அன்று எமது பிரச்சார இயக்கத்தைத் துவக்கினோம். பென்னாகரம் அஞ்சல் அலுவலகம் முன்பு தொடங்கிய எமது முதல் தெருமுனைக் கூட்டத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர் மாது சிறப்புரையாற்றினார். ஏறத்தாழ 200க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு தமது ஆதரவை நிதி மூலமும் பத்திரிக்கையை வாங்குவதன் மூலமும் தெரிவித்தனர்.

பின்னர், பேருந்து நிலையம், சந்தை ஆகிய இடங்களில் எமது பிரச்சாரத்தைத் தொடர்ந்தோம். சந்தையின் மையப்பகுதியில் — உசிதமான இடத்தில் நாட்டு வைத்தியர் ஒருவர் ஒலிபெருக்கி உதவியுடன் லேகியம் விற்றுக் கொண்டிருந்தார். அவரிடம் நாங்கள் "இந்த இடத்தில் நிகழ்ச்சி நடத்த எங்களுக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்" என்று கேட்டோம். "நான் இப்போதுதான் வந்தேன்; இந்த நேரத்தில்தான் வியாபாரம் ஆகும்; நான் என்ன செய்யட்டும்" என்று வருத்தப்பட்டார் அவர். பிறகு, சற்று தள்ளிப் போய் நாங்கள் நிகழ்ச்சியை ஆரம்பித்ததும், அவரே முன் வந்து ஒலிபெருக்கியில், "நம்நாட்டின் பாட்டாளிகளுக்காகப் பாடுபடக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கு கலைநிகழ்ச்சி நடத்த இருப்பதால், எனது வியாபாரத்தை இந்நிகழ்ச்சி முடிந்தபிறகு ஆரம்பிக்கிறேன்" என்று உளப்பூர்வமாக கூறிவிட்டு, நாங்கள் நிகழ்ச்சியை நடத்த உதவினார். நிகழ்ச்சியின் இறுதியில் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, சந்தையில் நிதியுதவி கேட்டோம். வியாபாரிகளும் மக்களும் ஆர்வமுடன் தம்மால் இயன்ற அளவு நிதியுதவியளித்தனர்.

அடுத்த நாள் தருமபுரி பேருந்து நிலையத்திலும், அரசு கலைக் கல்லூரி வாயிலிலும் பிரச்சாரம் - நிதி வசூல் இயக்கத்தை மேற்கொண்டோம். துவக்கத்தில் தயங்கினாலும், பின்னர் எமது பிரச்சாரத்தைக் கேட்டு மாணவர்கள் தமது உற்சாகமான ஆதரவைத் தெரிவித்தனர். அடுத்து நல்லம்பள்ளி என்ற சிறு நகரத்தில் தோழர் செல்வராஜ் தலைமையில் எமது பிரச்சார கலைநிகழ்ச்சியை நடத்தினோம். பெரும் அளவில் மக்கள் திரண்டு நிகழ்ச்சியை வரவேற்றனர். புரட்சிகர பாடலைப் பாடிக் கொண்டிருந்த நமது தோழரின் பனியனில் ஒருவர் 20 ரூபாயைக் கோர்த்து, தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மூன்றாவது நாளில் அரசம்பட்டி, புலியூர் ஆகிய கிராமப் பகுதிகளில் எமது பிரச்சார - நிதி வசூல் இயக்கத்தை மேற்கொண்டோம். மக்கள் வெகுவாக வரவேற்று, ஆதரித்தனர். புலியூரில் நிகழ்ச்சியின் முடிவில் ஒருவர் ரொட்டித் துண்டுகளையும், குளிர்பானங்களையும் கொடுத்து எம்மை மேலும் உற்சாகப்படுத்தினார்.

இம்மூன்று நாள் இயக்கத்திலும் மக்களது ஆதரவும் வரவேற்பும் எமது புரட்சிகர உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சின. இடையிடையே சில இடர்பாடுகளும், போலீசின் குறுக்கீடும் இருந்த போதிலும், அவை எமக்குத் தடையாகத் தெரியவில்லை. மக்களைச் சார்ந்து நிற்கும் எந்த ஒரு புரட்சிகர இயக்கமும் நிச்சயம் வெற்றி பெறும்; தருமபுரி மீண்டும் சிவக்கும் என்ற உண்மையை இப்பிரச்சார இயக்கம் தெளிவாகவே உணர்த்தியுள்ளது.

— இரா. கதிரவன் (வாசகர்)
அப்பு சமுத்திரம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

23

16-31 அக்டோபர்'89

உள்நாடு
தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : U S $11



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


## கிழக்கு ஐரோப்பிய நாடுகள் :

# பின்னோக்கி பெரும்பாய்ச்சல்! ...ஏன்

"கம்யூனிசம் தோற்றுப் போய்விட்டது. நாங்கள் அதைத் தூக்கி எறிந்துவிட்டோம்" என்று
பகிரங்கமாகவும் அதிகாரபூர்வமாகவும் அறிவித்துவிட்டுக் கலைந்து போனது ஹங்கேரியின் 'க
யூனிஸ்டு'க் கட்சி. மேற்கத்திய முதாளித்துவ பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், கல
புப் பொருளாதாரத்தையும் திட்டமாகக் கொண்ட சமூக ஜனநாயகக் கட்சியாக மாறிவிட்டது. ஏ
கெனவே போலந்தில் வலதுசாரி பிற்போக்குக் கட்சியான 'சாலிடாரிட்டி'யிடம் ஆட்சியை ஒப்
டைத்துவிட்டார்கள். ருசியாவில் ஒரு வீரிய ஒட்டுரக ஆட்சி தற்காலிகமாக நடந்து வருகிறத
விரைவிலேயே பல்கேரியா, செக்கஸ்லோவாகியா, யுகஸ்லாவியா, மங்கோலியா ஆகிய நாடு
ளிலும் இப்படி நடக்கும். சோசலிசப் பாவனைகளைக் கைவிட்டுத் தங்களைப் பின்பற்றும்ப
கிழக்கு ஜெர்மனியையும் ருமேனியாவையும் அவை நிர்பந்திக்கின்றன. இதற்குப் பதிலாக ஒ
கட்சி, இராணுவ சர்வாதிகார முதலாளித்துவப் பாதையை சீனா, அல்பேனியா, வியத்நாம், வ
கொரியா, கியூபா ஆகிய முன்னாள் சோசலிச நாடுகள் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளன.

"இந்த நாடுகளில் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தலைவிரித்தாடுகின்றன
அடிப்படைத் தேவைகள், வேலைவாய்ப்பு மற்றும் ஜனநாயக குடியுரிமை கோரி மக்கள் போரா
டங்கள் வெடிக்கின்றன. இத்தனைக்கும் காரணம் இந்த நாடுகள் கம்யூனிசக் கொள்கையைப் பி
பற்றியதுதான். குறிப்பாக ஸ்டாலின், மாவோ போன்ற சர்வாதிகாரிகளின் வறட்டுத்தன ஆட்
களே இதற்கு அடிப்படை. இப்போது அந்தத் தவறுகளை உணர்ந்து மேற்கத்திய ஜனநாயகத்தின்
மகிமை அறிந்து சரியான வழிக்குத் திரும்புகிறார்கள்" என்று உலகம் முழுவதும் பிரச்சாரம் செ
யப்படுகிறது இவை முழுக்கவும் பொய். உண்மையைத் தலைகீழாகப் புரட்டிச் சொல்வத
கும். ஸ்டாலின், மாவோவின் கொள்கைகளைக் கைவிட்டு

★ சோசலிசத்தின் அரசியல் ஆயுதமான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டனர்
அனைத்து மக்களின் கட்சி மற்றும் அரசு என்கிற பெயரில் அதிகாரவர்க்க பாசிச சர்வாதிகாரத்
நிறுவினர்.

★ பாட்டாளிவர்க்க சர்வ தேசியத்தைக் கைவிட்டனர். ருசியா சமூக ஏகாதிபத்தியமாகவும்
கிழக்கு ஐரோப்பிய 'சோசலிச நாடுகள்' அதன் தொங்கு சதை நாடுகளாகவும் சீரழிந்தன. பின்த
கிய நாடுகளில் புரட்சியைக் கைவிட்டு சமாதானப் பாதை மற்றும் ஏகாதிபத்தியங்களுடன் சம
தான சகவாழ்வு ஆகியவற்றைப் போதித்தனர். அதே சமயம் ஏகாதிபத்தியங்களுடன் போட்
போட்டுக் கொண்டு ஆயுதக்குவிப்பிலும், யுத்த தயாரிப்பிலும் ஈடுபட்டன. பாசிச இந்திரா
ராஜீவ் போன்ற உலகின் பிற்போக்கு பாசிச கும்பல்களுடன் இரகசிய இராணுவ ஒப்பந்தங்க
போட்டுக் கொண்டன. இராணுவத் தலைவர்களின் அரண்மனைப் புரட்சியின் மூலம் ஆஃப்கான்
தெற்கு ஏமன், எத்தியோப்பியா போன்ற போலி சோசலிச நாடுகளை உருவாக்கினர்.

★ அரசு மற்றும் கூட்டுச் சொத்துடமை என்ற சோசலிச உடமை உறவுகளைத் தகர்த்து தனி
சொத்துடமை லாபநோக்குடைய அதிகாரவர்க்க, முதலாளித்துவ நிர்வாகிகளின் பொறுப்பி
ஆலைகள் ஒப்படைக்கப்பட்டன. ஏகாதிபத்தியப் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனமிட்டு
கொள்ளையிடத் தேவையான சகல சலுகைகள், வசதிகளையும் செய்து தருகின்றனர்.

★ கம்யூனிச சித்தாந்தத்தால் உணர்வூட்டப்பட்ட, உத்வேகமடைந்த தொழிலாளர்கள் உற்ப
திப் பெருக்கம் என்ற சோசலிச முறைக்கு பதிலாக போனசு, ஊக்கஊதியம் போன்ற பொருளாத
ஊக்குவிப்பு, உற்பத்தி இலக்கு என்று முதலாளித்துவ முறையைப் புகுத்தினர். மையப்படுத்த
பட்ட திட்டமிடுதல், கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரம், அனைவருக்கும் வேலை, விலைக் க
டுப்பாடு ஆகிய சோசலிசக் கொள்கைகளைக் கைவிட்டு 'சுதந்திர'மான போட்டி பொருளாதார
என்ற முதலாளித்துவ முறைகள் திணிக்கப்பட்டன.

★ முதலாளித்துவ சந்தை மற்றும் கலாச்சார சீரழிவுகள் பரவின. கிரிமினல் குற்றங்கள், லஞ்
ஊழல் அதிகார முறைகேடுகள் பெருகின. விபச்சாரம், சூதாட்டம், இரவு இரகசிய ஆபாச, வக்கி
வாழ்வு ஆகிய கலாச்சார சீரழிவுகள் தலைவிரித்தாடின.


★ ஹங்கேரியில் வளர்ச்சி விகிதம் பூஜ்யமாகவும், பணவீக்கம் 47% ஆகவும் உள்ளது. போல
தில் பணவீக்கம் 100% ஐத் தாண்டி, மக்கள் வாழவே முடியாத வறுமையில் தள்ளப்பட்டு விட்
னர். சீனாவில் தற்காலிகமாக வளர்ச்சி விகிதம் அதிகமானபோதும் 40% பணவீக்கம், 3.5% வேலை
இல்லாத் திண்டாட்டம், சுற்றுச் சூழல், போக்குவரத்து, எரிசக்தி ஆகிய சகல துறைகளிலும் கடு
நெருக்கடி. 42,000 கோடி டாலர் அன்னியக் கடன், புதிய முதலீடு இல்லாத தேக்கநிலை. ருசிய
எப்போதோ இந்த நிலைக்கு வந்துவிட்டது. உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் ஆகி
வற்றிலும் கடன் கேட்டுக் கையேந்துகின்றன. போலந்து, ருசியா, ஹங்கேரி ஆகிய நாடுகளி
நடக்கும் தேர்தல்களில் ஆளும் கட்சிகளுக்குப் படுதோல்விகள். இன, மதக்கலவரங்கள் வெடித்
நூற்றுக்கணக்கானோர் கொல்லப்படுகின்றனர். 'பிரஸ்ட்ரோய்கா', 'கிளாஸ் நாஸ்ட்' போன்
புதிய சீர்திருத்தத் திட்டங்கள் அறிவிக்கப்பட்ட உடனேயே கருச்சிதைவடைந்து போகின்றன.

இத்தகைய பின்னடைவுகளுக்குக் காரணம் என்ன? கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக சீன
வும், 30 ஆண்டுகளுக்கு மேலாக ருசியா மற்றும் அதன் தொங்குசதை நாடுகளும் பின்பற்றிய
போலி சோசலிசப் பாதைதான்.

முதலாளித்துவ ஏகாதிபத்தியமே மீளமுடியாத பொது நெருக்கடியில் சிக்கியிருக்கும் கா
கட்டத்தில் முன்னாள் சோசலிச நாடுகள் அவற்றோடு சேர்ந்து கொண்டுள்ளன. எனவே, அ
நீண்டகாலம் தாக்குப் பிடித்துவிட முடியாது. தாங்கள் எதிர்பார்த்தபடி வாழ்வுக்கான தேவை
களை அவர்கள் கொடுக்க முடியாது என்று பாட்டாளி மக்கள் உணரும்போது மீண்டும் புரட்சியி
குதிப்பார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# முதல்வர் பதவியைக் குறி வைத்து ஜெயலலிதாவும் மு.க.ஸ்டாலினும்

# வசந்தசேனையும் சோழர் குலக் கொழுந்தும்!

தமிழ்நாட்டு முதல்வர் என்ற ஆட்சி உரிமைக்கான கடும் போட்டியில் இறங்கி விட்டார்கள் பிழைப்புவாத பொறுக்கி அரசியலின் இரண்டு வாரிசுகளான ஜெயலலிதாவும் மு.க.ஸ்டாலினும். வாய்ப்பைப் பறி கொடுத்துவிட்ட தவிப்பு, ஆத்திரம், அவசரம் ஜெயலலிதாவிடம் தெரிகிறது. வாய்ப்பை நழுவவிட்டு விடக்கூடாது என்கிற கவனம், ஏக்கம், தவிப்பு ஸ்டாலினிடம் தெரிகிறது.

பதவியைத் தக்கவைத்துக் கொள்வதோடு, வாரிசை வளர்த்துத் தலைவராக்கிவிடும் பொறுப்பு ஆகிய இரண்டு பொறுப்புகளையும் சுமக்கிறார் கருணாநிதி! பாவம்தான்!

சட்டமன்றத் தேர்தல் முடிந்த மூன்றாவது மாதமே சட்டசபை ஆபாச-அராஜகக் கூத்து அரங்கேறியது. அன்றிலிருந்து எதற்கெடுத்தாலும் ''தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்! சட்ட சபையைக் கலை! தேர்தல் வை!'' என்ற கூச்சலோடு ராஜீவே சரணென்று வீழ்ந்து கிடக்கிறார் ஜெயலலிதா!

கருணாநிதியின் அரசியல் வாரிசு, முதல்வர் பதவிக்குரிய தகுதிகள், தேவையான திறமைகள் தன்னிடம் இருக்கிறது என்று மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்; அதற்காக அரசு மற்றும் கட்சியின் அரவணைப்பில், தந்தையின் இயக்கத்தில் திட்டமிட்டு நிகழ்ச்சிகளும் பிரச்சாரமும் ஏற்பாடு செய்துவருகிறார் மு.க.ஸ்டாலின்.

நேரு - இந்திரா பரம்பரையின் வாரிசு உரிமை கொண்டாடி மத்திய அரசை ராஜீவ் காந்தி கைப்பற்றிக் கொண்டதன் விளைவினை இன்று நாம் காண்கிறோம். ஜெயலலிதாவானாலும் சரி; ஸ்டாலினானாலும் சரி யாருடைய வாரிசுரிமையை ஏற்று தமிழக ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தாலும் அதே கதிதான் ஏற்படும். தங்களுடைய அன்றாட நடவடிக்கைகளாலேயே அவர்கள் அதை நிரூபிக்கிறார்கள்.

◆ ◇ ◆

மாண்டு போன முதல்வர் எம்.ஜி.ஆரின் வைப்பாட்டியாக இருந்தவர் என்கிற தகுதியை வைத்து ஆட்சி மீதான வாரிசுரிமை கொண்டாடுகிறார் ஜெயலலிதா! அவருடைய கட்சித் தலைவர்கள் அவ்வளவு பேரும் நேரடியாக - பகிரங்கமாகச் சொன்ன இதையே ஜெயலலிதா மறைமுகமாகக் கூறிவருகிறார். 'வசந்தசேனை'கள் ஆண்ட வரலாறு ஒன்றும் புதிதல்ல என்பது மக்களும் அறிந்த கதைதான்!

தான் ஒரு பெண். அதுவும் அனாதையான பெண் என்பதால் எதிரிகளால் அவமானப்படுத்தப்படுவதாக நடித்து ஆதரவு திரட்டி ஆட்சியைப் பிடித்துவிட முயலுகிறார் ஜெயலலிதா! ஆனால் எந்த வகையில் பார்த்தாலும் அவர் ஒரு பாசிச அரக்கியாகவே இருக்கிறார். அண்ணாதுரை, பெரியாரின் திராவிட இலட்சியங்களையும் எம்ஜிஆரின் மனிதாபிமானக் கொள்கைகளையும் வரித்துக் கொண்ட ''புரட்சித் தலைவி''யாக தானே பட்டம் கட்டிக் கொண்டு பகட்டித் திரிகிறார். ஆனால் இலவசப் பிச்சை போட்டு மக்களை விலை பேசும் அகங்காரமே அவரது இலட்சியமும் கொள்கையும் ஆக இருக்கிறது.

திராவிட பாரம்பரிய உரிமை தவிர ஜெயலலிதா கட்சியிடம் ஏதாவது உருப்படியான திட்டமோ, இயக்கமோ, தகுதியோ இருக்கிறதா? ஏராளமான இலவசத்திட்டங்கள் தவிர மாநில சுயாட்சி போன்ற மோசடித் திட்டம் கூட கிடையாது. ஜெயலலிதா கட்சித் தலைமையேற்ற பிறகு, குறிப்பாக எதிர்கட்சித் தலைவியான பிறகு மக்களுடைய பிரச்சினைகள் எதன் மீதாவது இயக்கம் நடத்தியிருக்கிறாரா? சட்டசபை ஆபாச - அராஜகத்துக்காக கருணாநிதி மந்திரிகளுக்குக் கறுப்புக் கொடி - சட்டசபை வெளிநடப்புகள் தான் ஜெயலலிதா கும்பலின் ஒரே போராட்ட இயக்கம். பஸ்கட்டண உயர்வு, விலையேற்றம் போன்ற மக்கள் பிரச்சினைகள் மீது கருணாநிதிக்கு கண்டன அறிக்கை; பிறகு ஊழல் குற்றச்சாட்டுகள்; உதார்-சவால், சவடால்கள். இவற்றினால் கருணாநிதியின் எதிரி என்று காட்டிக்கொள்ளும் பத்திரிக்கை-கண்டன அறிக்கை அரசியல் மட்டுமே நடத்துகிறார்.

ஜெயலலிதா கட்சி ஒரு மக்கள் இயக்கமும் அல்ல; அவருக்கு முகஸ்துதிபாடி, அற்பத்தனமான ஆபாச-அசிங்கமான பிரச்சாரம் செய்யும் ஒரு ஒட்டுண்ணிக் கும்பலை மட்டுமே நம்பியிருக்கிறார். தான் காலால் இட்டதைத் தலையால் ஏற்றுச் செய்யும் எடுபிடிக் கூட்டமாக இருக்க வேண்டுமே ஒழிய முறையான, ஜனநாயகபூர்வமான கட்சியாக உருவாகிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார். அதற்காகத் தான், தனது கட்சித் தலைவர்களை பலமுறை நேரடியாகவே அவமானப்படுத்தி மட்டம் தட்டி வைக்கிறார். பதவிகள் கொடுத்தும், பதவிகளைப் பறித்தும் தன்னுடைய தயவுக்காக ஏங்கிக் கிடக்கும் அடிமைகளையும் விடக் கேவலமாக நடத்துகிறார். அடிமட்டம் வரை பிழைப்புவாதப் பொறுக்கிகளையே அணியாகக் கொண்டு இயக்குகிறார்.

எம்.ஜி.ஆரைப் போலவே, பாசிச ராஜீவ் கும்பலின் எல்லாப் பிற்போக்கு, மக்கள் விரோதக் கொள்கைகளையும், விசுவாசமாக ஆதரிக்கும் அதே சமயம், தனது சுய நலனுக்காக மட்டுமே பேரங்கள் பேசி, சமயத்தில் உருட்டி மிரட்டவும் செய்கிறார், ஜெயலலிதா. எம்.எல்.ஏ., எம்.பி. பதவிகள், கட்சி நிர்வாகப் பதவிகள் ஆகியவற்றைப் பகிரங்கமாகவே ஏலம் விட்டு வசூல் இயக்கம் நடத்துகிறார். கட்சிக்கும், அரசியலுக்கும் சம்பந்தமே இல்லாத திடீர் பணக்காரர்கள், அவர்களின் வாரிசுகளுக்கு வேட்பாளர் சீட்டுகளை விற்றுவிட்டு, தான் நிறுத்தும் யாருக்காகவும் பிரச்சார வேலை செய்யும்படி, கட்சித் தொண்டர்களை ஏவுவதோடு, மக்களையும் அவமானப்படுத்துகிறார். ஆட்சிக்கு வரும் முன்பே கட்சிப் பணத்தைக் கையாடல் செய்து - கட்சிச் சொத்துக்களை சூறையாடும் அப்பட்டமான ஊழல் பெருச்சாளி, ஜெயலலிதா!

பாசிச ராஜீவ் கும்பலுக்குத் தூது விடுவது, தானே காவடி தூக்குவது 'தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு எதிராக கோள் மூட்டுவது, பாசிச ராஜீவ் கும்பலின் நிழலில் நின்று கொண்டு சவால் விடுவது, அந்த அடிமைத்தனத்தையே தனது பலமாகவும் பெருமைக்குரிய செல்வாக்காகவும் சித்தரிப்பது - இவையெல்லாம் பாசிச ராஜீவ் கும்பலின் பாதம் தாங்கியே ஜெயலலிதா என்று காட்டுகின்றன. மாற்றுக்கட்சித் தலைவர்



படிப்பகம்

www.padippakam.com

கள், தொழிலதிபர்கள் மட்டுமல்ல சாராய உடைய[illegible] உலகப் பேர்வழிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டு சூழ்ச்சிகள்-சதிகள் செய்வதையே அரசியல் தந்திரம்-சாதுரியமாகக் காட்டிக் கொள்கிறார். எம்.ஜி.ஆரைப் போலவே இரகசிய கும்பல் மற்றும் அதிகாரிகள் கூட்டத்தின் கைப்பாவையாக இருந்து தமது மக்கள் விரோத கொள்கை - கொள்ளைக்குத் தகுந்த ஆட்சி புரிவார் என்கிறவகையில் ஆளும் வர்க்கத்தில் ஒரு பிரிவு ஜெயலலிதாவை ஆதரிக்கவும் செய்கிறது. தமிழ்நாட்டில் நேரடி ஆட்சியைப் பிடிக்க முடியாவிட்டால், ஜெயலலிதாவை வைத்து ஒரு பதிலி (Proxy) ஆட்சி நடத்த வசதியாக இருப்பார் என்று பாசிச ராஜீவ் கும்பலும் நம்புகிறது.

◆ ◆

"மு.க.ஸ்டாலினைத் [illegible]து வாரிசாக அரசியலுக்குள் திணித்துத் தலைவராக்கவில்லை. அவனை அரசியலுக்குக் கொண்டு வந்ததே இந்திரா தான். அவசர நிலையின் போது இழுத்துக் கொண்டு போய் அடித்து சித்திரவதை செய்து, மிசாவில் தள்ளினார்கள். அதனால்தான் அரசியலுக்கு வரும்படி நிர்பந்திக்கப்பட்டான்" என்று ஒரு திரைக்கதை எழுதுகிறார் கருணாநிதி. இது உண்மையா?

கோடி கோடியாகக் கொட்டி தனது மூத்த மகன் மு.க.முத்துவை சினிமா நடிகனாக்கி எம்ஜிஆரைப் போல அரசியலில் நுழைக்க முயன்றார், கருணாநிதி. கலப்புத் திருமணம் செய்துவித்து பத்திரிக்கை நிர்வாகப் பொறுப்புக் கொடுத்து மதுரையில் இருந்து கட்சியில் பெரிய மனிதனாக்கிவிட மு.க.அழகிரியை அனுப்பி வைத்தார். குடியும் கூத்துமாக அவர்கள் சீரழிந்து போகவே கருணாநிதியின் வாரிசு உருவாக்கக் கனவுகள் பொய்த்துப் போயின.

முரசொலி மாறன், அவர் மகன் செல்வம், மருமகன் சொர்ணம், அமிர்தம் என்று ஒரு குறுகிய குடும்ப சினிமா - அரசியல் - பத்திரிக்கை சாம்ராஜ்ஜியத்தை வளர்த்துக் கொண்டுள்ளார், கருணாநிதி. அதன் பின்பலத்தில் தான் திட்டமிட்டு மு.க.ஸ்டாலினது அரசியல் வாரிசுரிமை வளர்க்கப்படுகிறது.

அவசர நிலைக் காலத்தில் தனது குடும்பத்தினர் போலீசிடம் உதைபட்ட 'தியாகக்கதை'யை அடிக்கடி எடுத்துவிடுகிறார், கருணாநிதி. அதற்கு அரசியல் காரணம் மட்டுமல்ல. கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் செய்த அக்கிரமங்கள், அதற்குப் பலிவாங்கும் நடவடிக்கையாகவும் லஞ்சஊழல் இரகசியங்களைக் கறப்பதற்காகவும் சேர்த்துத் தான் நடந்தது. லஞ்சஊழல், அதிகார முறைகேடுகளால் சுகத்தை அனுபவித்த குடும்பம் இதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். எவ்விதக் காரணமும் இன்றி அப்பாவிகளும், மக்களுக்காக போராடியவர்களும் ஆக எவ்வளவோ பேர் அவசரநிலை அக்கிரமங்களுக்குப் பலியானார்கள். ஆனால் கருணாநிதி குடும்பமோ அதையே மூலதனமாக்கி அரசியல் ஆதாயம் தேடுகிறது.

மு.க.ஸ்டாலினைத் தலைமைக்குக் கொண்டு வருவதற்கான கொல்லைப்புற வழியாகத் திட்டமிட்டே தி.மு.க. இளைஞரணியை உருவாக்கினார் கருணாநிதி. பிறகு இளைஞர் அணியை கட்டிக்காத்த திறமையாளர் என்று புகழ்பாட வைத்தார். இதுவும் புதிய சாதனை அல்ல. இந்திராவை நேருவும், சஞ்சய், ராஜீவை இந்திராவும் இப்படித் தான் கட்சி நிர்வாகப் பொறுப்புகளைக் கொடுத்து அரசு, கட்சி பலத்தினால் அரசியல் வாரிசாக்கினார்கள். எழுச்சிமிகு இளைஞர்களின் தலைவர் சஞ்சய்காந்தி, அமைப்பு நிர்வாகத் திறமை வாய்ந்தவர் ராஜீவ்காந்தி என்று கட்சிக்காரர்களைவிட்டுப் புகழ் பாட வைத்தார்.

தொழிலாளர், மாணவர், மகளிர் என்று பல அணிகள் வைத்து இயக்கிய தி.மு.க.வில் ஸ்டாலினுக்காக அவற்றை முடக்கிவைத்து இளைஞரணிக்கு முக்கியத்துவமளிக்கும்படி பார்த்துக் கொண்டார், கருணாநிதி. தலைமைக் கழகப் பிரமுகர்களின் பயணத்தைத் தீர்மானிக்கும் கட்டுக்கோப்புடன் கட்சி இருப்பதால் எங்கும், எதற்கும் ஸ்டாலினை அழைக்கும்படி ஏற்பாடுகள் செய்தார். கருணாநிதியின் தயவைப் பெற வேண்டுமானால் ஸ்டாலினுக்குப் பாதந்தாங்கவேண்டும் என்ற நிலை இருப்பதைப் பல உள்ளூர் பிரமுகர்களும் உணர்ந்தனர். ஜனநாயகபூர்வமாக உட்கட்சித் தேர்தல் என்கிற பெயரில் தனது விசுவாசிகளை அடாவடித்தனமாகத் திணிப்பதில் பல ஆண்டுகளாகக் கைதேர்ந்த கருணாநிதி மகனைத் தலைமைக்குக் கொண்டுவருவது ஒன்றும் சிரமமான காரியமில்லை.

இப்போது ஸ்டாலின் மக்கள் ஏற்றுக் கொள்ளும் தலைவனாக்குவதற்காக ஆக. 30ந்தேதி பந்தின்போது ரயில் மறியல், எழுச்சிநாள், கோவைப் பேரணி என்று திட்டமிட்டு இயக்கங்களை நடத்துகிறார். அன்பழகன், மனோகரன், சாதிக் போன்ற கட்சித் தலைவர்களும் ஸ்டாலினைப் புகழும்படியான நிர்பந்தத்தை உருவாக்குகிறார். "ஸ்டாலின் நிர்வாக அமைப்புத் திறமையும் பேச்சாற்றலும் நிறைந்த இளைஞர் தலைவர்" என்று அவர்களும் புகழ்கிறார்கள்.




மு.க.ஸ்டாலினது நிர்வாக அமைப்புத்திறமை, பேச்சாற்றலின் உள்ளடக்கம் - கொள்கை கோட்பாடுகள் ஏதேனும் இருக்கிறதா? எதுவுமில்லை கிராமம் - வார்டு மட்டத்துக்கு வகுலைப் பிரதானமாகக் கொண்ட பிழைப்புவாதக் கண்ணோட்டமுடைய இளைஞர்களை உருவாக்கியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவின் ரசிகர் மன்றத்துக்கு மாற்று என்பதைத் தவிர வேறு என்ன அவர்களிடம் இருக்கிறது? இப்போது ஆட்சி அதிகாரமும் அவர்களிடம் இருப்பதால் வேலை வாய்ப்புகள், சலுகைகளைப் பகிர்ந்து கொள்வதற்குப் போட்டிபோட்டுக் கொண்டு கும்பல் சேருகிறது. எவ்வித இலட்சியமும் கொள்கையும் இல்லாது பிழைப்புவாத அடிப்படையில் திரட்டப்படும் இக்கும்பல், பின்னாளில் உழைக்கும் மக்களுக்கு எதிராகவே ஏவிவிடப்படும் பாசிச குண்டர் படையாகத்தான் பயன்படுத்தப்படும்.

தேசியம், காந்தியம் என்று பாரம்பரிய உரிமை கொண்டாடும் காங்கிரசும் சரி· இன உரிமை, வகுப்புரிமை என்று பாரம்பரிய உரிமை கொண்டாடும் திராவிட இயக்கமும் சரி. பாசிச, பிழைப்புவாத வாரிசுகளைத் தான் உருவாக்கியிருக்கின்றன. மிகப் பெரிய அளவில் கலாச்சார சீரழிவுகள் பரவி வரும் இன்றைய சூழலில் உழைக்கும் மக்களுக்கு எதிரான அடிமட்டம் வரையிலான ஒட்டுண்ணிக் கூட்டத்தை சமூக பலமாகக் கொண்டு அவர்கள் இயங்குகிறார்கள். குறிப்பாக, நகரப்புற, கிராமப்புற இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் புரட்சிகர அரசியல் உணர்வூட்டி பாசிச பிழைப்புவாத வாரிசுகளின் சமூக பலத்தைத் தகர்ப்பதன் மூலமாகத் தான் அவர்களை வீழ்த்த முடியும்.

— கரீம்.

படிப்பகம்

www.padippakam.com




# புகையும் பீரங்கிகள் வெடிக்கும்

"இதோடு ஒழிந்தது சனியன்!" என்று சகலவித சடங்குகளும் நடத்தி காத தூரம் கொண்டு போய் ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு வந்தாலும் வீடு திரும்புவதற்குள் வாசலிலேயே மீண்டும் வந்து நிற்கிறது போஃபார்ஸ் பூதம்! செய்வதறியாது விழிபிதுங்கித் திகைத்து நிற்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

போஃபார்ஸ் ஊழல் விவகாரம் குறித்து ஆய்வு செய்து அம்பலப்படுத்திவரும் "இந்து" இணை ஆசிரியர் என்.ராம் மற்றும் "இந்து"வின் ஐரோப்பா நிருபர் சித்ரா சுப்ரமணியம் ஆகிய குழு தனது நாலாவது தவணை கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளனர். சுவீடனின் போஃபார்ஸ் பீரங்கி பேரத்தில் நடந்த லஞ்ச ஊழல், அதை மூடிமறைப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள், லஞ்ச ஊழலை மறைப்பதற்கு முன்வைத்த வாதங்கள் அனைத்தும் தகர்ந்து போயுள்ளன. இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பாசிச ராஜீவ் கும்பல், அதன் பினாமிகள், ஆயுத பேரத் தரகர்கள் ஆகியோரைக் குறிவைத்து கயிறு இறுகுகிறது.

1987 ஏப்ரல் மாதம் போஃபார்ஸ் பீரங்கி பேரததில் லஞ்ச ஊழல் நடந்திருப்பதாக சுவீடன் ஒலிபரப்பு நிலையம் அம்பலப்படுத்தியது. அதன்பிறகு 1988 ஏப்ரல், ஜூன், மற்றும் நவம்பர் ஆகிய மூன்று தவணைகளில் ராம் - சித்ரா குழுவின் ஆழமான, விடாப்பிடியான ஆய்வு முயற்சியினால் லஞ்சஊழல் மற்றும் மூடி மறைப்பு முயற்சிகள் பற்றிய நூற்றுக்கும் மேற்பட்ட ஆவணங்களை இந்து நாளேடு வெளியிட்டது. இடையிடையே பாசிச ராஜீவ் கும்பல் செய்யும் தில்லுமுல்லு-மூடி மறைக்கும் முயற்சிகளை இந்தியன் எக்ஸ்பிரஸ் அம்பலப்படுத்தியது. பீரங்கியைத் தெரிவு செய்ததில் நடந்த தில்லுமுல்லுகளை தளபதி மாயாதாஸ் அறிக்கையை வெளியிட்டதன் மூலமும், தலைமைத் தளபதி சுந்தர்ஜியின் பேட்டியின் மூலமும் இந்தியா டுடே ஏடு அம்பலப்படுத்தியது. சுவீடனின் பீரங்கியைத் தெரிவு செய்ததில் ஏற்பட்ட முறைகேடுகளை பொதுத் தணிக்கைக் குழுவும் அம்பலப்படுத்தியது.

இவை அனைத்தும் (1) போஃபார்ஸ் பீரங்கியைத் தெரிவு செய்வதற்காக நடந்த முறைகேடுகள் (2) பாசிச ராஜீவ் கும்பல் - அதன் பினாமிகள், ஆயுத பேரத் தரகர்கள் லஞ்சஊழல் செய்தது (3) லஞ்சஊழல் அம்பலப்பட்டுப்போன பிறகு அதை மூடிமறைப்பதற்காக செய்த தில்லுமுல்லுகள் (4) அதற்காக அடுத்தடுத்து முன்னுக்குப் பின் முரணாகக் கூறிவரும் பொய்கள் (5) லஞ்சஊழல் குற்றச்சாட்டில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக அரசு எந்திரத்தைக் கேடான முறையில் பயன்படுத்தி வருவது ஆகிய பாசிச ராஜீவ் கும்பலின் கிரிமினல் குற்றங்களை நிரூபிக்கின்றன.


The Swedish National Audit Bureau
The Auditor General
1987-06-01
Regeringen
Utrikesdepartementet
Handelsavdelningen
Rapport till riksrevisionsverket
Regeringen gav 1987-04-29 riksrevisionsverket (RRV) i uppdrag att, efter samråd med krigsmaterielinspektionen, göra en revisionell granskning av underlaget till AB Bofors ...
Av det material RRV tagit del av framgår följande.
AB Bofors nuvarande verkställande direktör ...
Beslut i detta ärende har fattats av generaldirektören Mundebo i närvaro av revisionsdirektören Sandberg, föredragande.
Ingemar Mundebo

''இந்து'' பத்திரிக்கை வெளியிட்ட புதிய ஆதாரங்கள். உள்ளே: போபர்ஸ் தரகன் வின் சத்தா; சி.பி.ஐ. இயக்குனர் காத்ரே.

◆ ஆயுத - தளவாடங்களுக்கான பொது இயக்குனரிடமிருந்து, பீரங்கித் தரம் பற்றிய பரிசோதனை - சிபாரிசு அறிக்கை பெறப்படவில்லை; அது பிரெஞ்சு அல்லது ஆஸ்திரிய பீரங்கியை சிபாரிசு செய்தது; ஆனால் சிபாரிசு செய்யாத தரக் குறைவான போஃபார்ஸ் பீரங்கி வாங்கப்பட்டது; அதற்காக இராணுவத் தளபதிகளுக்கு பதவி மற்றும் லஞ்சம் கொடுத்து அவசர கோலத்தில் அதிகாரபூர்வ சிபாரிசு பெற்று ஒப்பந்தம் போட்டது.

◆ போஃபார்ஸ் கம்பெனியின் இந்தியத் தரகன் வின்சத்தாவுக்கு 3.25% லஞ்சமும், ராஜீவின் பினாமிகள் மற்றும் பிற தரகர்களுக்கும் 10.75% லஞ்சமும் தருவதாக இரகசிய பேரம் பேசி ஒப்பந்தம் போடப்பட்டது. 2100 கோடி ரூபாய் பேரத்தில் இப்படி 14% லஞ்சமாக மூன்று கம்பெனிகளின் பெயரில், சுவிசர்லாந்து வங்கியில் போடுவதாக ஏற்பாடு. விவகாரம் அம்பலமான 1987, ஏப்ரல் மாதத்துக்குள் 64 கோடி ரூபாய் லஞ்சம் கைமாறி விட்டது.

◆ லஞ்ச ஊழல் விவகாரம் அம்பலப்பட்டுப் போனவுடன், போஃபார்ஸ் நிறுவன பழைய சேர்மன் மார்டின் ஆர்டுபோ, பெரும் தரகு அதிகார முதலாளி இந்துஜா, வின்சத்தா, இந்திய இராணுவ இலாகா செயலாளர் பாட்நகர், சி.பி.ஐ. இயக்குநர் மோகன் கத்ரே போன்ற ராஜீவின் பினாமிகளும், எடுபிடிகளும் கூடி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சதிகளும் தில்லுமுல்லுகளும் செய்தனர். ராஜீவ் பினாமிகளின் கம்பெனியான மொரெஸ்கோ - பிட்கோ - சங்கம் ஆகியவற்றை மூடி மறைத்து மொய்



படிப்பகம்

www.padippakam.com

நியோ என்ற போலிக் கம்பெனியை உருவாக்கி போலி ஆவணங்களைத் தயாரித்தனர். பீரங்கி பேரத்துக்கான லஞ்சமல்ல, போஃபார்ஸ் கம்பெனியின் பழைய தரகர்களுடனான ஒப்பந்த முறிவுத் தொகை செலுத்தியதாக போலி ஆவணங்களைத் தயாரித்தனர்.

◆ பீரங்கி பேர லஞ்சஊழல் விவகாரம் அம்பலமானதும், "இடைத் தரகர்களே கிடையாது; லஞ்சஊழல் நடக்கவில்லை; ஆட்சியைக் கவிழ்க்க அந்நிய சதி" என்று எகிறியது ராஜீவ் கும்பல். பிறகு "லஞ்சமல்ல; ஒப்பந்த முறிவுத் தொகை; அதுவும் இந்தியர்கள் யாரும் பெறவில்லை" என்று புளுகியது. "போஃபார்ஸ் பீரங்கிதான் உயர்தரமானது; பாதுகாப்புக்கு அவசியமானது; இராணுவத் தளபதிகள் அதைத்தான் சிபாரிசு செய்தனர்; அதனாலேயே ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது" என்று நியாயப்படுத்தியது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, தண்டிப்பதற்கான சகல முயற்சிகளும் செய்து கொண்டிருப்பதாக நாடகமாடியது.



இந்து ஆசிரியர் தொடர்ந்து வெளியிட மறுத்த ஆதாரங்களை டெல்லி பத்திரிக்கையாளர் கூட்டத்தில் வெளிப்படுத்துகிறார் இந்து இணையாசிரியர் ராம்.

◆ லஞ்சஊழலை மூடி மறைப்பதற்காக இராணுவ மற்றும் நிதி இலாகா அதிகாரிகள், சி.பி.ஐ. மற்றும் நாடாளுமன்றக் கூட்டுக் கமிட்டி போன்ற நிறுவனங்களைக் கேடாகப் பயன்படுத்தியது. குற்றவாளிகளைத் தப்புவிப்பதற்காகவும், போலியான தடயங்களை உருவாக்குவதற்காகவும், அம்பலப்படுத்துபவர்களை மிரட்டுவதற்காகவும் அரசு எந்திரத்தை ஏவியது. லஞ்ச ஊழல் புகார் கூறுபவர்கள் மீது அவதூறு பொழிவதற்கும், குற்றவாளிகளைக் காப்பதற்கும் அரசு பிரச்சார சாதனங்களை கேடாகப் பயன்படுத்தியது.

— இவை அனைத்தும் அடுத்தடுத்து வந்த அம்பலப்படுத்துதல்கள் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டன.

இப்போது ராம் - சித்ரா குழுவினர் நான்காவது தவணையாக மேலும் முக்கியமான பல ஆவணங்களை வெளியிட்டுள்ளனர். போஃபார்ஸ் - இந்தியா பீரங்கி ஒப்பந்தத்தில் நடந்துள்ள லஞ்சஊழல், முறைகேடுகளை விசாரிக்க சுவீடன் தேசியத் தணிக்கை குழுவின் அறிக்கை மற்றும் சுவீடன் இரகசியப் போலீசு கைப்பற்றிய ஆவணங்கள் 1987 ஜூன் முதல் வாரத்திலேயே சுவீடன் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டன. வர்த்தக ரகசியத்தைக் காரணம் காட்டி அந்த அறிக்கையின் முக்கியமான பகுதிகளை இருட்டடிப்பு செய்துவிட்டு, இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டு வெளியிட்டனர். இப்போது அந்த இரகசியப் பகுதியை ராம் - சித்ரா குழுவினர் அம்பலப்படுத்தினர்.

(1) போஃபார்ஸ் - இந்தியா பீரங்கி பேரத்தை முடித்துக் கொடுத்ததற்காக 155கோடி ரூபாய் தரகு-லஞ்சம் தருவதாக ஒப்பந்தம் கையெழுத்தாகி, 64 கோடி ரூபாய் ஏற்கெனவே கை மாறி விட்டது. அதுவும் ஒப்பந்த முறிவுத் தொகை அல்ல; தரகு-லஞ்சத்தொகை தான்.

(2) ஐந்து பாதைகள் - நிறுவனங்கள் வழியாக லஞ்சத் தொகை செலுத்தப்படுவதாக ஒப்பந்தமாகியுள்ளது. கடந்த 10-15 ஆண்டுகளாக போஃபார்ஸின் இந்தியத் தரகனாக செயல்படும் வின்சத்தாவின் ஸ்வென்ஸ்கா அவற்றுள் முக்கியமானது.

(3) மிகப் பெருந்தொகை, பெயர் குறிப்பிடாத இரகசியக் கணக்கில் சுவிஸ் வங்கியில் போடப்பட்டுள்ளது. ஏ.ஈ. சர்வீசஸ் என்ற இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட கம்பெனி மற்றும் மொரெஸ்கா என்ற சுவிஸ் பதிவு பெற்ற கம்பெனிக்கு அவை செலுத்தப்பட்டதை தணிக்கைக் குழுவிடம் இருந்து மறைக்கப்பட்டிருக்கிறது.

(4) போஃபார்ஸ் லஞ்சஊழல் அம்பலமாவதற்கு நான்கு மாதங்கள் முன்பு போஃபார்ஸ் கம்பெனியின் வேறு பிற தில்லுமுல்லுகளுக்காக சுவீடன் தேசிய வங்கி விசாரணை நடந்தபோது போஃபார்ஸ் கம்பெனியின் இப்போதைய சேர்மன் பெர்ஓவே மோர்பெர்க் மேற்கண்டவாறு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

(5) சுவீடன் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையின் முக்கிய பகுதிகளை இருட்டடிப்பு செய்துவிடும்படி அந்நாட்டுப் பிரதமர் இங்க்வர் கார்ல்சன்னிடம் ராஜீவ் அங்கு போய் நேரில் கேட்டுக் கொண்டார். அதன்படிதான் மறைக்கப்பட்டது.

(6) 1987 ஜூலையில் சுந்தர்ஜி - அருண்சிங் கொடுத்த நிர்ப்பந்தம் காரணமாக நேரில் வந்து ரகசியங்களைச் சொல்வதற்கு போஃபார்ஸ் கம்பெனி சேர்மன் ஒப்புக் கொண்டார். சுவீடன் - ரஷ்யப் பயணம் முடித்துக்கொண்டு திரும்பிய ராஜீவ் அதைத் தடுத்துவிட்டார்.

(7) அதன்பிறகு பொய்ச்சாட்சிகளாக மோர்பெர்க் மற்றும் அவரது வக்கீல் கோத்லின் ஆகியோரை தயாரித்து, நாடாளுமன்றக் கூட்டுக் கமிட்டி முன்பு நிறுத்தினர். லஞ்சம் - தரகுத்தொகை அல்ல; ஒப்பந்த முறிவுத் தொகை தான்; அதற்கும் இந்தியா - போஃபார்ஸ் ஒப்பந்தத்துக்கும் தொடர்பில்லை என்று அவர்கள் புளுகினர்.

(8) அதே நாட்களில் இந்திய இராணுவச் செயலாளர் பாட்நகர் இணைச் செயலாளர் வோரா, (தளவாட) இணைச் செயலாளர் பேனர்ஜி, பிரதமரின் சிறப்புச் செயலாளர் கோபி அரோரா, சி.பி.ஐ. இயக்குநர் மோகன் கத்ரே ஆகியோருடன் நடந்த இரகசியக் கூட்டத்தில் லஞ்சம் பெற்ற கம்பெனிகள், நபர்கள் பற்றிய விவரங்களை மோர்பெர்க் மற்றும் கோத்லின் சொல்லிவிட்டனர். பிரதமருக்கும் தெரியும். ஆனால், நாடாளுமன்றக் கூட்டுக் கமிட்டி உட்பட யாருக்கும் அதைத் தெரிவிக்கவில்லை.

(9) போஃபார்ஸ் லஞ்சஊழல் பற்றிய தகவல்களும் ஆவணங்களும் சுவீடன் தேசிய தணிக்கைக் குழு அறிக்கையும், சுவீடன் பிரதமரிடம் இருந்தபோதும் அந்நாட்டு மந்திரிசபை, அரசியல் நிர்ணய நாடாளுமன்றக்குழு ஆகியவற்றிடம் இருந்து அவை மறைக்கப்பட்டன. "லஞ்சஊழல் அல்ல; ஒப்பந்த முறிவுத்தொகை தான்; இந்தியர்கள் அதைப் பெறவில்லை" என்று சுவீடன் பிரதமரும் தொடர்ந்து புளுகி வந்தார்.

(10) ராஜீவ் கும்பல், அதன் பினாமிகள், இந்தியத் தரகர்கள் தான் லஞ்சதரகுத் தொகை பெற்றனர் என்று சுவீடனின் இரகசியப் போலீசு மற்றும் தணிக்கைக் குழு ஆய்வுகள் நெருங்கிய உடனே விசாரணைகளைத் திடுதிப்பென்று நிறுத்திவிடும்படி சுவீடன் பிரதமர் தடுத்துவிட்டார்.

(11) வின்சத்தா, இந்துஜா ஆகியோர் தரகர்களாக இருந்து செயல்பட்டனர் என்பதை நிரூபிக்கும் 1988 ஏப்ரல், ஜூன், மற்றும் நவம்பர் மாதங்களில் ராம் - சித்ரா குழுவினர் இந்து நாளேட்டில் அம்பலப்படுத்திய ஆவணங்கள் உண்மையானவை தான் என்று சுவீடன் தணிக்கைக் குழு இந்திய சி.பி.ஐ.க்கு உறுதிப்படுத்திவிட்டது. இருந்தபோதும் விசாரணை நடப்பதாக அதன் இயக்குநர் மோகன் கத்ரே புளுகிவருகிறார்.

(12) இறுதியாக, சுவீடன் ரேடியோ ஆதிமுதலில் கூறியவாறு இந்தப் பேரத்தின் பெருந்தொகை இந்திய அரசு மற்றும் ஆளும் கட்சித் தலைமைக்குப் போயிருக்கிறது. அதை மறைப்பதற்காக வேண்டி வின்சத்தா - ஸ்வென்ஸ்கா கம்பெனியை மட்டுமே சாக்கு வைத்துவிட்டு, மொரெஸ்கோ மற்றும் ஏ.ஈ. சர்வீசஸ் என்ற ராஜீவ் கும்பல் மற்றும் அதன் பினாமிகள் தொடர்புடைய

படிப்பகம்

இரகசியங்களை மூடிமறைக்கிறது ராஜீவ் கும்பல்.

(13) வின்சத்தா - ஸ்வென்ஸ்கா கம்பெனி மீது கூட கிரிமினல் குற்றநடவடிக்கை எடுக்காது தப்புவிக்கிறது ராஜீவ் கும்பல். ஏனெனில் தரகு ஒப்பந்தப்படி வின்சத்தா - ஸ்வென்ஸ்காவிற்குக் கிடைக்கவேண்டிய லஞ்சத் தொகையிலும் பாதிக்கு மேல் ராஜீவ் கும்பல் நிர்பந்தித்துப் பிடுங்கிக் கொண்டுள்ளது.

—மேற்கண்ட உண்மைகளை ஆதார பூர்வமாக ராம் - சித்ரா குழு தயாரித்து இந்த அக்.9ந் தேதி இந்து நாளேட்டில் வெளியிட்டனர். அடுத்த பகுதி அக்.11ந் தேதி தொடர்ந்து வெளிவரும் என்று அறிவித்திருந்தனர். அப்படி வரவில்லை; அரசு கொடுத்த மறுப்பு அறிக்கையை வெளியிட்டு, ''இதுவரை எழுதியதே அரசு கூறி வரும் பொய்களையும், லஞ்ச ஊழல் மற்றும் அதை மூடிமறைப்பதற்கான நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்திவிட்டன. அதுவே போதும்'' என்று ஆசிரியர் குறிப்பு மட்டுமே வந்தது.

அடுத்த நாள் விவகாரம் இன்னும் பரபரப்பானது. புதுடில்லியில் பத்திரிக்கையாளர் கூட்டத்தைக் கூட்டிய இந்து இணைஆசிரியர் ராம், ''போ∴பார்ஸ் லஞ்சஊழல் பற்றிய ஆவணங்களைத் தொடர்ந்து வெளியிட அதன் ஆசிரியர் மறுத்துவிட்டார்; எனவே மற்ற பத்திரிக்கைகள் மூலம் தொடர்ந்து அம்பலப்படுத்தப் போகிறேன்'' என்று அறிவித்தார். இந்துவில் வெளியிடுவதற்காகத் தயாரித்திருந்த ஆவணங்கள், செய்திகளைக் கொடுத்தார். நாட்டின் பல ஏடுகளிலும் அவை வந்திருக்கின்றன.

இந்திய அரசு, சுவீடன் அரசு மற்றும் போ∴பார்ஸ் நிறுவனம் ஆகியவை கூட்டுச் சேர்ந்து போ∴பார்ஸ் பீரங்கி லஞ்சஊழலை மூடிமறைப்பதற்காக செய்த தில்லுமுல்லுகள், திரை மறைவு சதிகள் நிறைந்த ஆவணங்கள், செய்திகள் அவை. சுவீடன் இரகசியப் போலீசார் அவற்றைக் கைப்பற்றியிருந்தனர். கடிதப் போக்குவரத்துக்கள், சதிக்கூட்டங்களின் குறிப்புகள் போன்ற ஆதாரங்கள், போ∴பார்ஸ் கம்பெனிக்கும் தரகுக் கம்பெனிகளுக்குமிடையே போடப்பட்ட ஒப்பந்தங்கள்; குறிப்பாக ராஜீவ் கும்பல், அதன் பினாமிகளுக்குச் செலுத்தப்பட்ட லஞ்சம் மொய்நியோ - பிட்கோ - சங்கம் என்கிற இந்துஜா கம்பெனிகள் மூலமாகப் போயின. அதை மூடிமறைத்து மொய்நியோ என்கிற இல்லாத போலிக் கம்பெனிக்கு செலுத்தப்பட்டதாக போலியான ஆவணங்கள் தயாரித்து நாடாளுமன்றக் கூட்டுக் கமிட்டி உட்பட அனைவரையும் ஏமாற்றியதற்கான ஆவணங்கள் - ஆகியவை வெளியிடப்பட்டன.

இந்து நாளேடு ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக வெளிவரும் ஒரு குடும்பத்துக்குச் சொந்தமானது. காங்கிரசுக்கு விசுவாசமாக இருந்து வந்த - அரசு அதிகார பூர்வ ''கெஸட்'' ஏடு என்ற பெயர் பெற்றது. அதன் மூலமாக போ∴பார்ஸ் லஞ்ச ஊழல்கள் அம்பலபட்டு வந்ததால் நாடு முழுவதும் நம்பிக்கைக்குரியதாகவும், ராஜீவுக்கு எதிரானதாகவும் கருத்தைப் பரப்பியது. எனவே பயபீதியும், ஆத்திரமும் அடைந்த பாசிச ராஜீவ் கும்பல் இணைஆசிரியர் ராமிடம் பல வகையிலும், தொடர்பு கொண்டு மிரட்டி வந்திருக்கிறது என்பதும் இப்போது அம்பலமாகிவிட்டது.

போ∴பார்ஸ் அம்பலப்படுத்துதல் துவங்கியதும் இணை ஆசிரியர் ராமை அமிதாப் - அஜிதாப் பச்சன்கள், கோபி அரோரா, இந்துஜா, மோகன் கத்ரே, பிரதமரின் செய்தித்துறை செயலாளர்கள் சாரதா பி.,சாத், பார்த்தசாரதி போன்ற ராஜீவின் ஆட்கள் அடிக்கடி சந்தித்தனர். ராஜீவே நேரில் சந்தித்தார். லஞ்ச ஊழல் விவகாரத்தை அம்பலப்படுத்துவதை கைவிடுவதற்கான மறைமுக நிர்பந்தமளித்தனர்.

அவை பலிக்காது போகவே, நாளேட்டின் ''புகைப்பட செய்தி'' அனுப்பும் ''∴பாக்ஸ்'' முறை கட்டணத்தை ஏற்றியும், பொதுத்துறை விளம்பரங்களைத் தடை செய்தும், குடும்ப உறுப்பினர்களை மிரட்டியும், இந்து நாளேட்டிற்கு நிர்பந்தம் கொடுத்தது, ராஜீவ் கும்பல். இணை ஆசிரியர் ராமுவின் பங்காளிதான் ஆசிரியர் கஸ்தூரி; எக்ஸ்பிரஸ் கோயங்காவிற்கு நேர்ந்த கதி தனக்கும் ஏற்படும் என்று அவர் பயந்து போய் தொடர்ந்து ராம் - சித்ரா குழுவினரின் அம்பலப்படுத்தும் கட்டுரைகளை வெளியிட மறுத்துவிட்டார். இவையெல்லாம் டில்லி பத்திரிக்கையாளர் கூட்டத்தில் ராம் வெளியிட்ட தகவல்கள். இவை பொய்யானவை என்று கஸ்தூரி எழுதியுள்ளார். இதுவும்கூட பயபீதி - மிரட்டிலினால் வந்தது தான் என்பது பகிரங்கமான உண்மைதான்!

இந்த முறையும் பிரதமரை ராஜினாமா செய்யும்படியும் அவரை (டிஸ்மிஸ்) பதவி நீக்கம் செய்யும்படி அரசு ஆளுநர் வெங்கடராமனையும் கோரியுள்ளன, எதிர்க்கட்சிகள். வழக்கம்போல் நாடாளுமன்றக் கூச்சலோடு வெளிநடப்பும் செய்துள்ளன. ஆனால் இங்கே கருணாநிதியும், தமிழ் மொழி நாளேடுகளும் எருமை மாட்டின் மீது மழை பெய்தாற் போல மௌனம் சாதிக்கின்றனர். கோயங்காவின் தினமணி மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

போ∴பார்ஸ் லஞ்ச ஊழல்களை அம்பலப்படுத்துவதில் ராம் - சித்ரா குழுவினர் ஒரு சாதனை புரிந்துள்ளார்கள் என்று எதிர்க்கட்சிகளும் பத்திரிக்கைகளும் ஏகமனதாக பாராட்டுகின்றனர். ஆனால் அதுவும் ஆளும் வர்க்கப் பிரிவினர்களுக்கிடையிலான முரண்பாட்டின் ஒரு அங்கமாகவே உள்ளது. சுவீடன் நாட்டு அரசியலில் தனக்கு சாதகமாக பயன்படும் என்பதற்காக அந்நாட்டு எதிர்க்கட்சியான கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சி கொடுக்கும் ஆவணங்களையே ஆதாரமாகக் கொண்டு போ∴பார்ஸ் லஞ்ச ஊழல் விவகாரங்களை இவர்கள் அம்பலப்படுத்தி வருகிறார்கள். தேசத்தின் கௌரவம் பாதிக்கப்படுவதால் ''இந்து'' என்ற நான்கு சுவர்களை விட்டு வெளியேறியதாகக் கூறும் ராம் போலித்தனமான நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புக்குள்ளே தான் சிக்குண்டு கிடக்கிறார்.

பாசிச ராஜீவ் கும்பல் புரிந்துள்ள போ∴பார்ஸ் லஞ்ச ஊழல், அதைவிட முக்கியமான மூடிமறைக்கும் முயற்சி ஆகியவற்றைத் தான் ராமும் எதிர்க்கட்சிகளும் பெரிதாகக் கருதுகின்றன. நடுநிலையான, நீதிவழுவாத, உன்னதமான ஜனநாயக அமைப்பைக் கொண்டதாக அவர்கள் புகழ்ந்த சுவீடன் அரசும்கூட இந்த மோசடியில் நன்கு தெரிந்தே ஈடுபட்டுள்ளதை அவர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர். ராமும், எதிர்க்கட்சிகளும், பெரிய விவகாரமாகக் கருதும் லஞ்ச ஊழல், மூடிமறைப்புக்கே கூட இந்திய, சுவீடன் அரசுகள் முழுவதும் ஊக்கமாகப் பங்கேற்று உறுதுணையாக இருந்திருக்கின்றன.

இந்த உண்மைகள் எதைக் காட்டுகின்றன? குறிப்பிட்ட பாசிச ராஜீவ் கும்பல் மட்டுமல்ல, குறிப்பிட்ட லஞ்ச ஊழல் மற்றும் அதை மூடிமறைக்கும் தில்லுமுல்லுகள் மட்டுமல்ல. இவற்றைவிட முக்கியமாக இந்தக் குற்றங்களுக்கு அடிப்படையாக அரசியல் அமைப்பு முழுவதுமே பயன்பட்டு இருக்கிறது. குற்றங்கள் அம்பலமாகி 2 1/2 ஆண்டுகளுக்கு மேலாக இந்த கும்பல்கள் ஆட்சியில் நீடிக்க முடிகிறது. 'ஜனநாயக' எல்லைக்குள் சட்டபூர்வமான வழிகள் எதனாலும் அதை அசைக்க முடியவில்லை. ஒட்டுமொத்த அரசியல் அமைப்பே பாசிச ராஜீவ் கும்பல் போன்ற மக்கள் விரோத, தேசவிரோத, ஜனநாயக விரோத சக்திகளின் உறைவிடமாக உள்ளது என்பதையே போ∴பார்ஸ் லஞ்ச ஊழல் விவகாரம் நிரூபிக்கிறது.

○ பாலன்

## இந்து இணையாசிரியர் ராமின் முகவிலாசம்!

'மார்க்சிஸ்டு' கட்சியின் சென்னை - செங்கை மாவட்டக் கமிட்டி உறுப்பினராகவும் அதன் மாணவர் அமைப்பின் அனைத்திந்தியத் துணைத் தலைவராகவும் இருந்தவர் என்.ராம். 'நல்ல பிள்ளையாக மனந்திருந்தி' இந்து நாளேட்டின் குடும்பப் பாரம்பரியத்துக்குத் திரும்பியவர். அதன் ஆளும் வர்க்க ஆதரவு சாதி - மதவெறி பிற்போக்குக் கொள்கைகளோடு சமரசம் செய்து கொண்டதோடு பாசிச ராஜீவின் ஈழ ஆக்கிரமிப்பு துரோக ஒப்பந்தத்தை உருவாக்கிய, துணைபோன பிரமுகர்தான் இந்த என்.ராம். விடுதலைப்புலிகளின் நெருங்கிய ஆதரவாளர்களாக நடித்து ஏமாற்றி துரோகம் செய்த என்.ராம். இந்திய ராணுவம் யாழ்ப் போரில் நடத்திய மக்கள்திரள் படுகொலைச் செய்திகளை இந்து ஏட்டின் இலங்கை நிருபர் டி.பி.எஸ். ஜெயராஜ் அனுப்பியபோது அவற்றுக்கு ஆதாரமில்லை என்று கூறி பிரசுரிக்க மறுத்தவர். டி.பி.எஸ். ஜெயராஜை நிருபர் வேலையிலிருந்து நீக்குவதில் முன்னின்றவர். உண்மையில் ஈழ விவகாரத்தில் பாசிச ராஜீவ் - ஜெயவர்த்தனேவுக்கு இடையே தரகு வேலை பார்த்தவர். பின்பு ஜெயலலிதாவின் அரசியல் ஆலோசகராகக் கொஞ்ச நாளிருந்தார். கடைசியாக ஒப்பந்தத்தை மீறி பணம் சம்பாதிக்க அமெரிக்கா, கனடா நாடுகளுக்கு பயணம்போன கிரிக்கெட்டுகாரர்களுக்காக வககாலத்து வாங்கி வழக்காடியவர். எனவே என்.ராம் நீதிக்காகப் போராடுபவர் என்ற பிரமை தேவையில்லை.

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



**தோழர் மா சே துங் எழுதிய**

**ஹுனான் விவசாயிகள் இயக்க பரிசீலனை அறிக்கை (1927)**

புதிய ஜனநாயகம் வெளியீடு

விலை ரூ: 5

நூலை அஞ்சலில் பெற விரும்புவோர் ரூ. 5.60க்கு மணியார்டர் அல்லது அஞ்சற்தலைகளை அனுப்புக.

*காந்தி, காங்கிரசின் துரோகத்தையும், இந்திய முதலாளிகள் தரகு முதலாளிகளே என்பதையும் ஆதாரங்களுடன் நிறுவுகின்ற*

**இரண்டு ஆங்கில நூல்கள்.**

**India and the Raj**

**இந்தியாவும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும்**

**1919 - 1947**

**(முதல் தொகுதி)**

**சுனிதிகுமார் கோஷ்**

பக்கங்கள் : 396 விலை : ரூ.70

பதிவுத் தபாலில் அனுப்புவதற்கான அஞ்சல் செலவு ரூ.6.70ம் சேர்த்து அனுப்புங்கள்.

**The Indian Big Bourgeoisie**

**இந்தியப் பெருமுதலாளி வர்க்கம்**

**அதன் தோற்றம், வளர்ச்சி, தன்மை**

**சுனிதிகுமார் கோஷ்**

பக்கங்கள் : 311 விலை ; ரூ.50

பதிவுத் தபாலில் அனுப்புவதற்கான அஞ்சல் செலவு ரூ.6.70ம் சேர்த்து அனுப்புங்கள்.

*பிரதிகள் வேண்டுவோர் மணிஆர்டர் அல்லது டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி : எஸ்.மதியமகன், 21, பாலாஜி சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.*

## ...கட்டுப்பாடுடன் நின்ற முன்னோடி கிராமம்.

அண்மையில் சாதி வெறித் தீ கொழுந்து விட்டு எரிந்த மதுரை மாவட்டத்தில், தேவாரத்தின் அருகே உள்ள சிறிய கிராமம் தான் T.மீனாட்சிபுரம். கிட்டத்தட்ட 2000 பேர் வாழும் இக்கிராமத்தில் ஒரு சிலரைத்தவிர அனைவரும் 'தாழ்த்தப்பட்ட' வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்த வட்டாரத்தில் கலவரத் தீபற்றி எரிந்த போது, மீனாட்சிபுர மக்கள் ஒன்றுகூடி, "நாம் எக்காரணத்தைக் கொண்டும் பிற ஊர்களுக்குச் சென்று கலவரத்தில் ஈடுபடக்கூடாது" என்ற கட்டுப்பாடு விதித்து செயல்பட்டனர். அருகிலுள்ள கிராமங்களில் சிறுபான்மையினராக உள்ள மேல்சாதியினரை எதிரியாகக் கருதாமல் எப்போதும் போலவே பழகி வந்தனர். ஆனாலும் சாதி வெறியர்கள் தங்கள் கிராமத்தைத் தாக்கிவிடக் கூடாது என்பதற்காக ஊருக்குள் லாரி மற்றும் வண்டிகள் நுழைய முடியாதபடி மாட்டு வண்டிகளை சாலையின் குறுக்கே நிறுத்தி தடைகளை வைத்திருந்தனர்.

இந்நிலையில் செப்.16ந் தேதியன்று இரவு ஐ.ஜி.தேவாரம் தலைமையில் வந்த 200க்கும் மேற்பட்ட போலீசார் "நீங்கள் எல்லா கிராமங்களுக்கும் ஆயுத சப்ளை செய்கிறீர்களாமே" என்று மக்கள் மீது வீண்பழி சுமத்தி, ஒன்றரை மணி நேர சோதனைக்குப் பிறகு விவசாயத்திற்குப் பயன்படுத்தும் அரிவாள், கடப்பாறை போன்றவற்றைப் பறித்துச் சென்றனர். அதன் பின்னரும் இரவு பகல் பாராமல் அடிக்கடி போலீசார் பெரும் பட்டாளமாக வந்து சோதனை என்ற பெயரில் மக்களை பீதியூட்டுகின்றனர்.

உண்மை நிலவரம் இவ்வாறிருக்க, கலவரத்தைப் பற்றிய செய்தி வெளியிட்ட அரசியல் கிசுகிசு ஏடான "நக்கீரன்", ஆயுத சப்ளை செய்வது மீனாட்சிபுரம்தான் என்று அண்டப்புளுகை அவிழ்த்துவிட்டு அவதூறு செய்துள்ளது. இதனால் T.மீனாட்சிபுரத்தை கலவரக்காரர்களின் ஊராக, தவறாக கருதும் போக்கு இப்பகுதியில் பரவியுள்ளது. மேலும், 'நக்சலைட்டுகளிடம் ஆயுதம் உள்ளது; அவர்கள் ஆயுதம் ஏந்துவோம் என்று பிரச்சாரம் செய்வது இதனால்தான்; மீனாட்சிபுரத்திலிருந்து தான் அவர்கள் ஆயுதங்களை சப்ளை செய்கின்றனர்' என்றும் தவறான கருத்துக்கள் பரவி வருகின்றன. இதன் மூலம் அமைதியாக உள்ள மீனாட்சிபுரம் மக்களை ஆத்திரமூட்டி கலவரத்தீயை விசிறிவிட சாதிவெறியர்கள் முயற்சிக்கின்றனர்.

அண்டப்புளுகு செய்தியை வெளியிட்டு அவதூறு செய்த நக்கீரன் ஏட்டை கிராம மக்களின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

**— விவசாயிகள் விடுதலை முன்னணி, T.மீனாட்சிபுரம்.**

## சாதிவெறிக் கலவரத்தின் நடுவே சாதி எதிர்ப்புப் பிரச்சாரம்

மதுரை மாவட்டத்தில் சாதிவெறி கோரத்தாண்டவமாடிய போது, சாதி வெறிக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளின் சார்பில் சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டோம். 20.9.89 அன்று உசிலம்பட்டி நகரில் நாங்கள் ஒட்டியபோது இரண்டு பேர் தகராறு செய்தனர். பொறுமையாக நாங்கள் விளக்கியும்கூட அவர்கள் ஏற்கும் நிலையில் இல்லை. எனவே, "உங்கள் வீட்டில் நாங்கள் ஒட்டவில்லை; ஒட்டச் சொல்கிறவர்கள் வீட்டில் தான் ஒட்டுகிறோம்" என்று கூறிவிட்டு எமது பணியைத் தொடர்ந்தோம். இதற்கிடையே அந்த இரு சாதிவெறியர்களும் கண்டவர்களிடம் எல்லாம், "கள்ளனும் பள்ளனும் ஒண்ணுன்னு வி.வி.மு.காரங்க போஸ்டர் ஒட்டுறானுங்க! விடாதிங்க!" என்று வெறியூட்டினர்.

உசிலம்பட்டி மலையாண்டி திரையரங்கின் அருகில் நாங்கள் ஒட்டிக் கொண்டிருந்த போது, ஒரு சாதிவெறி கும்பல் வந்து "நீங்க கள்ளங்களா, பள்ளங்களா?" என்று கேட்டு வாய்க்கு வந்தபடி திட்ட ஆரம்பித்தது. நாங்கள் விளக்குவதைகாதில் கூட வாங்காமல் எம்மிடமிருந்த சுவரொட்டிகள் அனைத்தையும் பிடுங்கி அந்த கும்பல் கிழி[illegible]தெறிந்தது.

இதிலிருந்து படிப்பினைகளைக் [illegible]ற்று அடுத்த இரு நாட்களில் சுற்றுப்புற கிராமங்[illegible]ளில் சுவரொட்டி இயக்கத்தை நடத்தினோம். பி[illegible]னர் மீண்டும் உசிலை நகரில் சுவரொட்டிகளை ஒட்டினோம். இச்சுவரொட்டிகள் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. இரு நாட்களுக்கு இச்சுவரொட்டிகள் கிழிக்கப்படாமல் இருந்தது. அதன் பின்னர் பல சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டிருந்தன. அதேசமயம் புதிதாக ஒட்டப்பட்ட சாதிவெறியைத் தூண்டும் சுவரொட்டிகள் கிழிக்கப்படாமலிருந்தன.

ஊழலில் கொடிகட்டிப் பறப்பவரும், ரௌடித்தனத்தை ஆயுதமாகக் கொண்டவரும், சாதிவெறி பிடித்தவருமான உசிலை கல்லூரி முதல்வர் டாக்டர் போசும் மற்றும் சிலரும் சேர்ந்து சாதிவெறியூட்டும் சுவரொட்டிகளை ஒட்ட ஏற்பாடு செய்து கலவரத் தீயை மேலும் தூண்டிவிட்டனர். அதைத் தொடர்ந்து சாதி வெறியர்கள் தெருவிளக்கு, தந்திக் கம்பங்களை வீழ்த்தியும், தபால் பெட்டிகளை உடைத்தும், ஒரு சத்துணவுத் துறை "ஜீப்"பை தீவைத்து கொளுத்தியும், ஒரு வேனை கல்லால் அடித்து நொறுக்கியும் அட்டகாசம் செய்தனர்.

தாலுகா அலுவலக நுழைவாயிலிலேயே சாதி வெறியைத் தூண்டும் சுவரொட்டிகள் கிழிக்கப்படாமல் அனல்கக்கிக் கொண்டிருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால், சாதி வெறியைத் தூண்டும்படியான பிரசுரம், சுவரொட்டி ஒட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு வானொலி மூலம் எச்சரித்துக் கொண்டிருந்தபோது தான், இந்த வெறியூட்டல்கள் நடந்தன. போலீசுப் புலிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கைகட்டி நின்றனர்.

**— விவசாயிகள் விடுதலை முன்னணி, உசிலை வட்டம்.**



படிப்பகம்

பஞ்சாபில் பல சதி வேலைகளைக் கிளறிவிட்டு ஏற்கெனவே அம்பலமாகிய இரத்தவெறி பிடித்த இந்திய உளவுப்படை 'ரா' இப்போது, அஸ்ஸாமில் பாடோ பழங்குடியினரின் போராட்டத்திற்குள் ஊடுருவி, மேலும் பல சதிகளையும், கொலைகளையும் அரங்கேற்றி வருகிறது.

ஏறத்தாழ ஈராண்டுகளுக்கு முன் தனி மாநிலம் கோரி கிளர்ந்தெழுந்த அனைத்து பாடோ மாணவர் சங்கத்தின் போராட்டங்கள் அண்மைக்காலமாக பயங்கரவாத தாக்குதல்களாகப் பரிணமித்துள்ளது. அசாமிய சாதி இந்துக்களைத் தாக்கி படுகொலை செய்வது, பேருந்துகளில் குண்டு வைத்து, அப்பாவி பயணிகளைக் கொல்வது, கண்ணி வெடிகள் வைத்து போலீசாரைத் தாக்கி அழிப்பது, கேந்திரமான பாலங்களை குண்டு வீசித் தாக்கி போக்குவரத்தை நிலைகுலையச் செய்வது முதலான தீவிரவாத தாக்குதல்களால் அசாம் மாநிலமே நிலைகுலைந்து போயுள்ளது.

''அசாம் மாநிலத்தை ஒரு அங்குலம் கூட பிரிக்க அனுமதிக்கமாட்டோம்'' என்று கொக்கரித்துக் கொண்டு, அடுத்தடுத்து அடக்குமுறையையும், பயங்கரவாத தடைச் சட்டம், கலவரப்பகுதி தடைச்சட்டம், ஆயுதப்படையினருக்கான சிறப்பு அதிகார சட்டம் முதலான கருப்புச் சட்டங்களை ஏவியும், பாடோ பெண்கள் மீது போலீசாரின் பாலியல் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டும் போராட்டத்தை ஒடுக்க எத்தனிக்கும் இனவெறி பிடித்த மகந்தா அரசுக்குப் பாடம் புகட்டும் எதிர்த்தாக்குதல்களே இவை என்று பார்வையாளர்கள் கருதினர். ஆனால் கடந்த ஆகஸ்ட் 28ம் தேதியன்று டெல்லியில் மத்திய அமைச்சர் ராஜேந்திரகுமாரி பாஜ்பாய் முன்னிலையில் அசாம் முதல்வர் மகந்தாவும், பாடோ மாணவர் இயக்கத் தலைவர் பிரம்மாவும் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தி இருதரப்பினரும் வன்முறைத் தாக்குதல்களை கைவிடுவதென முடிவான பின்னரும் கூட, தொடர்ச்சியாக பாடோ போராளிகளின் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்தேறி வருகின்றன. பேச்சு வார்த்தை நடந்து முடிந்த அடுத்த நாளே பார்பெட்டா மாவட்டத்தில் பாடோ போராளிகள், 12 பேரை குண்டு வீசிக் கொன்றனர். பைரபில் நகரில் பேருந்தில் குண்டு வெடித்து 9 பேர் மாண்டனர்.

நல்பாரி, பார்பெட்டா மாவட்டங்களில் ஆகஸ்ட் 29லிருந்து செப் 8ந் தேதிக்குள் 65 பேர் படுகொலை செய்யப்பட்டனர். போக்ராஜுலி கிராமத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 35 பேர் மிருகத்தனமாக தலை வெட்டப்பட்டு கோரமாக கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சியான இப்படுகொலை வெறியாட்டங்களைக் கண்டு நாடே அதிர்ச்சியடைந்தது. சமரசப் பேச்சு வார்த்தையை ஏற்காத பாடோ போராளிகளில் ஒரு பிரிவினர் இவ்வாறு தமது அதிருப்தியைத் தெரிவிப்பதாக திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் இப்படுகொலை வெறியாட்டங்களும் பயங்கரவாதத் தாக்குதல்களும் இந்திய உளவுப்படை 'ரா'வின் கைவரிசையே என்று இப்போது ஆணித்தரமாக வெளிப்பட்டுள்ளது.

## ★ அசாமில் ரத்தக் களறி
## ★ போடோ தலைமையின் துரோகம்
# மீண்டும் 'ரா'வின் கைவரிசை



செப். 8 அன்று போக்ராஜுலி கிராமத்தில் போடோ தீவிரவாதிகள் நடத்திய காட்டுமிராண்டித்தனமான கொலைவெறியாட்டம்.

★ பாடோ - போராட்டத்தைக் கவனிக்க ''ஜும்ஜும்'' நடவடிக்கை என்ற புனைபெயரில் 'ரா'வின் செயலாளர் ஏ.கே.வர்மா தலைமையில் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டது.

★ 'ரா'வின் விமானப் பிரிவு முதன்மை இயக்குனர், சாமிநாதன், அசாம் மற்றும் அருணாசலப் பிரதேசத்துக்கு பறந்து சென்று, சிறப்பு பாதுகாப்புக்குழு (SSB), சிறப்பு எல்லைப் புறபடை (SFF) ஆகியவற்றின் கமெண்டோ பிரிவினரை அசாமில் திரையரங்கங்கள் பேருந்துகளில் குண்டு வீசுமாறு ஏவியுள்ளார். அடுத்த சில நாட்களிலேயே அசாமின் பல பகுதிகளில் குண்டு வெடிப்பு நடந்துள்ளது. கௌரங்கா ஆற்றுப்பாலம் குண்டு வீசி தகர்க்கப்பட்டது.

★ பாடோ போராளிகளுக்கு ரகசியமாக ஆயுதங்களும் பயிற்சியும் அளிக்கப்பட்டன. மத்திய ரிசர்வ் போலீஸ் படை மற்றும் எல்லை பாதுகாப்புப் படை ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை இருக்கக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் இவை அளிக்கப்பட்டன.

★ கடந்த ஈராண்டுகளாக ''ஜும்ஜும்'' நடவடிக்கையை மேற்பார்வையிட 'ரா'வின் பல துறை இயக்குனர்களும் செயலர்களும் அசாமுக்கும் டெல்லிக்கும் பல முறை பறந்துள்ளனர். 'ரா'வின் விமான பிரிவு இயக்குனர் சாமிநாதன், கமேண்டோ படையினருக்கான திட்டங்களை வகுத்தளிப்பதற்காகவே பலமுறை சென்றுள்ளார்.

★ கௌஹாத்தி, தேஜ்பூர், ஷில்லாங், டிப்ருகார் ஆகிய நகரங்களில் பல வீடுகளை வாடகைக்குப் பிடித்து பிரம்மா உட்பட பல பாடோ தலைவர்களுக்கு 'ரா' புகலிடம் அளித்தது. அவர்களை ரகசியமாக விமானம் மூலம் டெல்லிக்கு கொண்டு சென்று சதித் திட்டங்களைத் தீட்டியது. அசாம் மாநில போலீசார் இச்சதிகளைக் கண்டு கொள்ளாமல் இருக்க, உயர் போலீஸ் அதிகாரிகளுக்கு சீமைச் சாராய விருந்துகளை ரா ஏற்பாடு செய்தது.

— அதிர்ச்சியூட்டும் இந்த உண்மைகளை ரா நிறுவனத்திலுள்ள சில ஊழியர்கள் நிறுவியுள்ள சிவில் உரிமைக்கான குழு அண்மையில் அம்பலப்படுத்தியுள்ளது. இதுபற்றி விரிவாக பிரதமர் ராஜீவுக்கும் கடிதம் எழுதியுள்ளது. மேலும் அக்கடிதத்தில், ''ராவின் சதிகார நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், பாடோ போராட்டம் தொடர்பான ராவின் கிரிமினல் சதிகளை உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் கமிஷன் அமைத்து விசாரிக்க வேண்டும்; ராவுக்கு ஒதுக்கப்படும் ரகசிய நிதி மற்றும் செலவினங்களை பாராளுமன்றத்தின் பொதுகணக்கு கமிட்டி தணிக்கை செய்யப்பட வேண்டும்; இதன்மூலம் மட்டுமே ராவின் தேசவிரோத நடவடிக்கைகளும், உயரதிகாரிகளின் ஊழலும் நாட்டு மக்களுக்குத் தெரியவரும்; பிரதமர் உடனடியாக இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதுதவிர, கைது செய்யப்பட்ட பாடோ போராளிகளிடமிருந்து அசாம் போலீசார் கைப்பற்றிய ஆயுதங்கள் பலவற்றில் இந்திய ராணுவ முத்திரை இருந்துள்ளது. ''டைம்பாம்'' தயாரிப்பதற்கான திட்ட வரைபடங்கள்கூட ராவினால் கொடுக்கப்பட்டுள்ளது. திபெத்தில் சீனாவின் ஆட்சியை சீர்குலைக்க ''காம்பாஸ்'' எனப்படும் கூலிப்படையை உருவாக்கி தாக்குதல்களை ஏவிவிடும் சிறப்பு எல்லைப் புறபடை (SSF), இப்போது அந்த ''காம்பாஸ்'' கூலிப்



www.padippakam.com
படிப்பகம்

படையினரை பாடோ போராளிகளுக்கு உதவி செய்ய ஏவியுள்ளது — முதலான உண்மைகளை அசாம் போலீசார் ரகசிய கடிதம் மூலம் அமைச்சக செயலகத்துக்கு தெரிவித்துள்ளனர்.

இதோடு, அருணாசல பிரதேச காங்கிரசு முதல்வரும், உயர்போலீசு அதிகாரிகளும், கோப்பூரில் பாடோ பயங்கரவாதிகள் படுகொலையைக் கட்டவிழ்த்து விட்ட போது, ஊரடங்கு தடையை மீறி ரகசியமாக வந்து அவர்களைச் சந்தித்துச் சென்றுள்ளனர் என்ற அதிர்ச்சியூட்டும் தகவலும் இப்போது வெளியாகியுள்ளது.

இத்தனைக்கும் பிறகு பாசிச ராஜீவ் கும்பல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது ரா மூலம் அரங்கேற்றிவரும் சதிகளின் நோக்கம் மிகத் தெளிவானது: முதலாவதாக, பாடோக்களின் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அசாமில் படுகொலைகளையும், பயங்கரவாதத் தாக்குதல்களையும் தீவிரப்படுத்துவது; அதைக்காட்டி அசாமில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக கூறி, சட்டப்படி 1990 வரை நீடிக்க வேண்டிய மகந்தா அரசை டிஸ்மிஸ் செய்வது; வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலுடன் சேர்த்து அசாமில் சட்டமன்றத் தேர்தலையும் நடத்தி ஆட்சியைக் கைப்பற்றுவது என்ற நோக்கத்துடன் ராவின் சதிவலைகள் முடுக்கி விடப்படுகின்றன.

இரண்டாவதாக, இப்படி பாடோ பிரச்சினை தீராமல் நீடித்துக் கொண்டே போவது பாசிச கும்பலுக்கு வசதியானதுதான். உள்நாட்டு நெருக்கடிகள் முற்றும் போதெல்லாம் முன்பு ஈழப் பிரச்சினை, பஞ்சாப் பிரச்சினையைக் காட்டி, திசை திருப்பி வந்ததைப் போல இப்போது பாடோ பிரச்சினையை அதற்குப் பயன்படுத்துகிறது. குறிப்பாக, ஆயுத பேர ஊழல்களில் ராஜீவ் கும்பலின் கிரிமினல் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு அம்பலமாகியுள்ள நிலையில், இதிலிருந்து தப்பிக்க அசாமில் ரா மூலம் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடுகிறது.

தேசத்தை இன்னொரு நெருக்கடிக்குள் தள்ளுவதற்கான சதிகளில் ராஜீவ் கும்பல் இறங்கியுள்ளதையே இவை தெளிவாகக் காட்டுகின்றன. இதுநாள் வரை மதவெறிக் கலவரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு குளிர் காய்ந்த வந்த பாசிச கும்பல் இப்போது தேசிய இன சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களிலும், பழங்குடி மக்களின் சுயாட்சி உரிமைப் போர்களிலும் ஊடுருவிச் சீர்குலைக்கத் தொடங்கி விட்டது. தேசிய இனங்களின் சிறைக்கூடமாக உள்ள இந்தியாவில் அண்மைக்காலமாக தேசிய இனங்களின், பழங்குடி மக்களின் உரிமைப் போராட்டங்கள் ஆங்காங்கே பற்றிப் படர்ந்து வருகின்றன. குறுகிய வெற்றி மீது நம்பிக்கை வைத்துள்ள குட்டி முதலாளித்துவ வர்க்க ஊசலாட்டத் தலைமையின் காரணமாக நியாயமான இப்போராட்டங்கள், விரைவிலேயே மக்கள் திரள் பாதையிலிருந்து விலகி ஒருபக்கம் சமரச சரணடைவுக்கும், மறுபக்கம் பயங்கரவாத சகதிக்குள்ளும் சிக்கி பாசிச கும்பலின் சதி நோக்கங்களுக்கு பலியாகின்றன. பாட்டாளி வர்க்க சித்தாந்த தலைமையும், ஜனநாயக மத்தியத்துவ ரீதியிலான அமைப்பு முறையும் இல்லாத எந்த ஒரு தேசிய இன இயக்கமும் ஆதிக்க வெறியர்களால் சீர்குலைக்கப்படும் என்ற எதிர்மறை அனுபவத்தையே பாடோ இயக்கத் தலைமையின் துரோகம் நிரூபித்துக் காட்டுகிறது.

தனது விசுவாச ஏவல் நாயான ரத்த வெறி பிடித்த ரா உளவுக்கும்பல் மூலம் நாடும் மக்களும் அறிந்து கொள்ள முடியாதபடி அடுத்தடுத்து பல சதிகளை அரங்கேற்றி வருகிறது பாசிச ராஜீவ் கும்பல். நாட்டையும் மக்களையும் பேரழிவிற்குள் தள்ளிவிட்டு தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள ராஜீவ் கும்பல் மேற்கொண்டுள்ள சதிகளுக்கு குடிமக்கள் யாரும் துணைபோக முடியாது. உழைக்கும் மக்கள் எச்சரிக்கையுடனிருந்து பாசிச கும்பலின் தேசவிரோத மக்கள் விரோத சதிகளை விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டும்.

■ மனோகரன்.

## கோரிக்கைகளை விளக்கி பிரச்சார இயக்கம்

விவசாயிகள் விடுதலை முன்னணியின் பட்டுக்கோட்டை வட்ட அமைப்புக் கமிட்டியின் சார்பாக, பாசிச ராஜீவின் ஜவஹர் வேலை வாய்ப்பு மற்றும் பஞ்சாயத்து ராஜ் திட்டங்களை அம்பலப்படுத்தியும், விவசாயிகள் விடுதலை முன்னணியின் உடனடி இரண்டு அம்சக் கோரிக்கைகளான, 1. அத்தியாவசியப் பொருட்களுக்கு ஒரே விலையைத் தீர்மானம் செய்; அவை உடனே கிடைக்க ஏற்பாடு செய்! 2. அனைத்து கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கும் மானியத்துடன் கடன் வழங்கு! ஆகியவற்றை விளக்கியும் பிரச்சாரம், தெருமுனைக் கூட்டம், கலை நிகழ்ச்சிகள் பட்டுக்கோட்டையைச் சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த 21.9.89 முதல் 3.10.89 முடிய நடத்தப்பட்டது.

2.10.89 அன்று பட்டுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சந்திரசேகரன், ராஜமாணிக்கம், துரைமாணிக்கம், காளியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். திருச்சி மக்கள் கலை இலக்கியக் கழக கலைக்குழுவினர் வழங்கி "ஐயோ சாராயம்!" என்ற கலை நிகழ்ச்சி மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

அதைத் தொடர்ந்து 3.10.89 அன்று துவரங்குறிச்சியில் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது. "இதுபோன்ற அமைப்புகள் இன்றுதான் எங்களுக்கு அறிமுகமாகிறது; இனி இத்தகைய அமைப்புகளில்தான் நாங்கள் சேருவோம்" என்று நிகழ்ச்சிக்கு வந்திருந்த உழைக்கும் மக்கள் உற்சாகத்துடன் கூறுமளவுக்கு இப்பிரச்சார இயக்கம் மக்கள் மத்தியில் சிறப்பானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

— விவசாயிகள் விடுதலை முன்னணி,
பட்டுக்கோட்டை வட்டம்.

## இந்திய கடத்தல் படை?!




சென்னை - தாம்பரம் விமானப் படை தளம் கள்ளக் கடத்தல்காரர்களின் மையமாக மாறி விட்டது. அன்றாடம் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நவீன எலக்ட்ரானிக் சாதனங்கள் கடத்தி வரப்பட்டு சென்னை பர்மா பஜாரில் விற்பனைக்கு வருகின்றன. இந்தக் கடத்தல் பேர்வழிகள் வேறு யாருமல்ல. ஈழத்திலிருந்து திரும்பிவரும் இந்திய 'அமைதிப்படை' வீரர்கள்தான்!

ஜப்பானிய கலர் டி.வி., வி.சி.ஆர்., வீடியோ காசெட்டுகள், ஒலிபெருக்கிக் கருவிகள், காமிராக்கள் முதலானவை கடத்தி வரப்படும் பொருட்களில் முக்கியமானவை. சென்னை பர்மா பஜார் வியாபாரிகள், எம்.எல்.ஏ. விடுதியின் கீழ்தளத்திலுள்ள 'அமைதிப்படை' முகாமுக்குச் சென்று தேவையானவற்றை சுலபமாக வாங்கி வந்து விற்பனை செய்கின்றனர். "எங்களுக்கு என்னென்ன பொருட்கள் தேவை என்பதை அமைதிப்படை முகாமில் சொல்லிவிட்டால் அடுத்தவாரம் சரக்கு வந்துவிடும்" என்கிறார், பர்மா பஜார் வியாபாரி கலிய பெருமாள். "ஈழபடையெடுப்புக்குப் பிறகு கடத்தல் பொருட்கள் எங்களுக்கு மிகச் சுலபமாகக் கிடைக்கிறது" என்றார் அஜீஸ் எனும் வியாபாரி.

அண்மையில் ஈழத்திலிருந்து திரும்பிவந்த ராணுவத்தினரின் ஆயுத தளவாடப் பெட்டிகளுக்குள் கடத்தல் பொருட்கள் இருந்ததைக் கையும் களவுமாக சுங்க இலாகாவினர் பிடித்தும் கூட எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அப்பொருட்கள் திருப்பித் தரப்பட்டன. 'அமைதிப்படை' விவகாரத்தில் யாரும் தலையிட வேண்டாம் என ராணுவ மற்றும் நிதி அமைச்சகங்கள் ரகசிய உத்தரவு போட்டுள்ளதால், சுங்க இலாகா அதிகாரிகள் கைகட்டி வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கடத்தல் பெருகியதால், இராமேஸ்வரம் - மண்டபம் துறையை கடந்த ஆகஸ்ட் இறுதியில் இந்திய ராணுவம் மூடிவிட்டது.

உலகிலேயே எல்லா ஆக்கிரமிப்பாளர்களையும் விஞ்சும் வண்ணம் படுகொலை, பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட மிகக் கேவலமான கிரிமினல் பேர்வழிகள் வேறு எப்படி இருப்பார்கள்?



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# 'நீதி'பதிக்கு நேர்ந்த கதி!

''தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்'' என்று சொல்வது உண்மைதான் என்று நீதிதேவன்கள் உணர்ந்திருப்பார்கள்! நீண்டகாலமாகவே மயக்கத்தில் இருக்கும் நீதிதேவன்களை உலுக்கி அதை உணரவைத்து விட்டது சென்ற மாதம் குஜராத்தில் நடந்த ஒரு சம்பவம். எழுந்து உட்கார்ந்த நீதிதேவன்கள், ''ஐயோ! எங்களுக்குமா இந்தக் கதி!'' என்று ஒப்பாரி வைக்கத் துவங்கிவிட்டார்கள்.

''ஆமாம்! உங்களுக்குந்தான்! உங்களுக்கு மட்டுமல்ல; எங்கள் அதிகாரத்துக்குக் கீழ்படிய மறுக்கும் எவருக்கும் இதே கதிதான்!'' என்று கொக்கரிக்கிறது வானளாவிய அதிகாரம் படைத்த போலீசு ரௌடிக் கூட்டம். அதன் அதிகாரத்தை ஏற்க மறுத்த ஒரு நீதிபதிதான் ஏதோ ஒரு கிரிமினல் குற்றவாளியைப் போல விலங்கு மாட்டி, கயிறு கட்டி போலீசு ரௌடிகளால் இங்கே இழுத்துக் கொண்டு போகப்படுகிறார்.

இவர் குஜராத் மாநிலம் நதியாத் நகரத் தலைமை குற்றவியல் நீதிபதி என்.எல்.பட்டேல். கடந்தமாதம் 25ந் தேதி தனது உயர்நீதிபதியுடன் பூப்பந்தாடிவிட்டு மாலை வீடு திரும்பினார். உடனடியாக உள்ளூர் போலீசு நிலையத்துக்கு வரும்படி ஒரு துண்டுக்கடிதம் காத்திருந்தது. சந்தேகப்பட்டு அவர் போகவில்லை. அரைமணிக்குப் பிறகு ஒரு போலீசு ஜீப் வந்து நீதிபதி பட்டேலை வாரிப் போட்டுக் கொண்டு போலீசு நிலையத்துக்குப் போனது.

அங்கே ஒரு கிரிமினல் குற்றவாளிக்குரிய மரியாதைகள் எல்லாம் நீதிபதிக்குக் கிடைத்தது! ஆபாசமாகப் பேசி நையப் புடைத்து பாய்ந்து குதறினார் சப்-இன்ஸ்பெக்டர் சர்மா. பிறகு இரண்டு போலீசுக்காரன்களை ஏவித் தாக்கினார்கள். ஒரு புட்டி கள்ளச்சாராயத்தைக் கொடுத்துக் குடிக்கும்படி நிர்பந்தித்தனர். பட்டேல் மறுக்கவே நாற்காலியோடு சேர்த்துக் கட்டிப் போட்டு சாராயத்தால் குளிப்பாட்டினர். வாயைப் பிளந்து சாராயத்தை ஊற்றினார்கள். விலங்கு மாட்டி, கயிறு கட்டி போலீசு நிலையத்துக்கு வெளியே இழுத்து வந்து, தயாராய் இருந்த பத்திரிக்கைகாரனைக் கூப்பிட்டு படமெடுத்தார்கள்.

''குடித்துவிட்டு போலீசு நிலையத்துக்குள் புகுந்து சப்-இன்ஸ்பெக்டரைத் தாக்கிய நீதிபதி படேல் கைது!'' என்ற செய்தி மறுநாள் கைவிலங்குடன் பட்டேல் இழுத்துப் போகப்படும் படத்தோடு வெளிவந்தது. அப்படியே அரசு மருத்துவமனைக்கு இழுத்துப் போய் மதுவிலக்குச் சட்டத்தை மீறி நீதிபதி பட்டேல் குடித்திருந்ததாக பொய்ச் சான்றிதழ் பெற்றார்கள். மீண்டும் போலீசு நிலையத்துக்கு இழுத்து வந்து இரு கிரிமினல் குற்றவாளிகளுடன் சேர்த்துப் பூட்டி வைத்தார்கள். உயர் நீதிபதி குறுக்கிடவே அதிகாலை மூன்றரை மணிக்கு மேல் பட்டேல் விடுவிக்கப்பட்டார். உடனே, தான் குடிக்கவில்லை என்று மருத்துவர்களிடம் சான்றிதழும் பெற்றார்.

குஜராத் வக்கீல்களும், நீதிபதிகளும் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தனர். சட்டசபையில் எதிர்க்கட்சியினர் கேட்டபோது போலீசுக்காக வக்காலத்து வாங்கினார் முதல்வர். நாடு முழுவதும் வக்கீல்களும் நீதித் துறையினரும் ஆத்திரமடைவதை அறிந்தபிறகு நீதிவிசாரணை செய்வதாகக் கூறினார். நீதிபதிகள் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததோடு போராடவும் துவங்கியது. உடனடியாக அந்தப் போலீசுக்காரன்களைக் கைது செய்யும்படி சுப்ரீம் கோர்ட்டு உத்திரவு போட்டும் குஜராத் அரசும் போலீசும் அதை அமுலாக்க மறுத்துவிட்டது. இரண்டு நாள் இழுபறிக்குப் பிறகு 60 போலீசுக்காரன்கள் புடை சூழ, சஃபாரி சூட்டுடன் ஊர்வலமாகப் பவனி வந்து கோர்ட்டில் 'சரணடைந்தனர்' — பட்டேலைத் தாக்கிய போலீசு - கிரிமினல் குற்றவாளிகள். உடனே ஜாமீனில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். ''என்னை என்ன செய்துவிட முடியும் என்ற அகங்காரப் பார்வையுடன் வக்கீல்களைப் பார்த்து ஏளனச் சிரிப்போடு, போலீசு மரியாதையோடு வெளியேறினார்கள். முதல்நாள் நதியாத் நகரில் கடையடைப்பு நடத்திய வக்கீல்கள் பீதியடைந்து போயினர்.

இதற்கெல்லாம் காரணம், போலீசின் கைத்தடியாக செயல்படும் நீதிபதிகள் மத்தியிலே பட்டேல் கொஞ்சம் தைரியமானவராய் இருக்க முயன்றதுதான்! வங்கி ஊழியர் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கில் போலீசுக்கெதிராக கண்டனம் தெரிவித்தார். மதுவிலக்குக் குற்றத்தில் கைதான இன்ஸ்பெக்டர் ஜாலா மீது ஜாமீன் மறுப்பு கைது உத்திரவு போட்டார். கடைசியாக, சப்-இன்ஸ்பெக்டர் சர்மா குடியிருந்த வீட்டுக்காரரின் உறவினர் கொலை வழக்கு — அதில் கைதானவர் தன்னை சித்திரவதை செய்வதாக புகார் கூறவே, போலீசு காவலில் வைக்கும் அனுமதியை மறுத்து நேரே சிறைக்கு அனுப்பும்படி பட்டேல் உத்திரவு போட்டார். இவைதான் நீதிபதி பட்டேலுக்குப் போலீசார் 'பாடம்' கற்பித்தற்கான காரணங்கள்.

இதுவும் புதிதல்ல. ஜாலாவின் வழக்கின்போது போலீசுக்காரன்களும் அதிகாரிகளும் கோர்ட்டுக்குள் புகுந்து மேசை, நாற்காலிகளை நொறுக்கி நீதிபதி பட்டேலைச் செருப்பால் அடித்தார்கள். பின்புற வழியே ஓடி அவர் தப்பித்தார். ''நீதிபதிகள் மட்டும் புனிதமானவர்களா? கடந்த ஓராண்டில் 12 பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனரே!'' என்கிறார்கள் போலீசுக்காரன்கள்.

இந்த வழக்கை ஒரு மாதத்திற்குள் விசாரிப்பதற்கான கமிசன் ஒன்றை சுப்ரீம் கோர்ட் நியமித்துள்ளது. குஜராத்தில் பணி புரியும் நீதிபதிகள் பய பீதியில் உள்ளதால் உ.பி. அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். அதற்குப் பாதுகாப்பு, விசாரணை உதவிக்கு குஜராத் போலீசை நம்பமுடியாது என்பதால் மத்திய ரிசர்வ் படையை ஏற்பாடு செய்துள்ளனர்.

ஒரு குற்றமும் செய்யாத அப்பாவிமக்கள் மீது இதே போலீசு வெறிநாய்க் கூட்டம் பாய்ந்து குதறிய சம்பவங்கள் நாடெங்கும் நாள்தோறும் நடக்கின்றன. அவற்றைக் கண்டு ரசிப்பதோடு, தப்பித்தவறி அம்மாதிரியான வழக்குகள் வந்தபோதும் இதே நீதிபதிகள் போலீசு வெறிநாய்களுக்கு ஆதரவாகத்தான் தீர்ப்புச் சொன்னார்கள். அவர்களின் அக்கிரமங்களுக்கு நியாயம் கற்பித்தார்கள். அதற்காகவே உருவாக்கப்பட்டவர்கள். உழைக்கும் மக்களுக்கு எதிராக இரட்டைக் குழல் துப்பாக்கி போல போலீசும் நீதித்துறையும் செயல்பட்டவரை எல்லாம் சரியாகத் தான் இருந்தது! ஆனால், அவை தங்களுக்குள்ளாகவே பலம் பார்க்கும் போதுதான் யாருக்குமே அடங்காத வெறிநாய்க் கூட்டமாக போலீசு வளர்ந்துவிட்ட உண்மை தெரிகிறது!

■ குணசேகரன்.



படிப்பகம்

www.padippakam.com

## தேர்தல் ஆதாயம் கருதி ஓட்டுக் கட்சிகள் தூண்டிவிடுகின்றன

# வடமாநிலங்களில் பரவும் மதவெறிக் கலவரங்கள்

வடமாநிலங்களில், குறிப்பாக இந்தி பேசும் மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார் ஆகிய நான்கு மாநிலங்களில் மதவெறி - வகுப்புக் கலவரங்களின் புயல் வீசுகிறது. அது பிற மாநிலங்களுக்கும் பரவும் அபாயம் எழுந்துள்ளது. கடந்த இரு வாரங்களில் மட்டும் அதிகாரபூர்வ அறிவிப்பின்படி 60க்கும் மேற்பட்டவர்கள் மதவெறிக் கலவரங்களுக்குப் பலியாகியுள்ளனர். கோட்டா, கார்கோன் மகோவ், ரத்லம், பதுன், ஹசாரிபாக் ஆகிய நகரங்களில் பிணவாடை அடிக்கிறது; பல நாட்கள் ஊரடங்கு உத்திரவின் கீழ் இருண்டு போய்க் கிடக்கின்றன.

அனைத்தும் இந்து - முஸ்லீம் கலவரங்கள். அனைத்தும் பொதுத் தேர்தல்களின் இறுதி முடிவைத் தீர்மானிக்கும், இந்திரா காங்கிரசு ஆளும் மாநிலங்களில் நடந்துள்ளன. அடுத்தடுத்து பல லஞ்ச ஊழல் குற்றங்கள் அம்பலமாகி தனிமைப்பட்டுப் போன பாசிச ராஜீவ் கும்பல் பல தேர்தல் தோல்விகளையும் சரிவுகளையும் சந்திக்கும் மாநிலங்கள்; சரிவைச் சரிக்கட்டுவதற்காக திட்டமிட்டு மதக் கலவரங்களைத் தூண்டிவிட்டு ஆதாயம் தேடுவதில் அது முழு மூச்சாக இறங்கியிருக்கிறது.

பாசிச ராஜீவ் கும்பலுடன் போட்டி போட்டுக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதாவின் முன்னணி அமைப்பான விஸ்வ இந்து பரிஷத் இந்துமத வெறிக்குத் தூபமிடுகிறது. இவர்களின் அதிகாரப் பேராசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகின்றன; கடைகள், வீடுகள், கொளுத்தப்படுகின்றன; சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன.

உத்திரப் பிரதேசம் அயோத்தி நகரில் ஒரு வழிபாட்டுத் தலம் உள்ளது. அது மொகலாயப் பேரரசர் பாபரின் மசூதி என்று முஸ்லீம்கள் உரிமை பாராட்டுகின்றனர். இல்லை, அது ராமர் அவதரித்த புண்ணிய பூமி; அங்கிருந்த கோவிலை இடித்துவிட்டு மசூதி கட்டிக் கொண்டார்கள்; எனவே எங்களுக்கே சொந்தம் என இந்துக்கள் சொந்தம் கொண்டாடினார்கள். நானூறு ஆண்டுகளாக நடந்துவந்த இந்தத் தகராறு காரணமாக பல ஆண்டுகளாக அந்த பாபரின் மசூதி / ராமஜென்ம பூமி பூட்டிக்கிடந்தது. மக்களைப் பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடுவதில் ருசிகண்ட பாசிச ராஜீவ் கும்பல் ஆட்சிக்கு வந்ததும் ஒரு கோர்ட்டு உத்திரவைக் காட்டி அந்த வழிபாடுதலத்தை இந்துக்களுக்காக திறந்துவிட்டது.

அன்று முதல் நாடு முழுவதும் பல இந்து - முஸ்லீம் மதக் கலவரங்களுக்குக் கொள்ளிவைக்கும் விவகாரமாக இந்த ராமஜென்ம பூமி / பாபரி மசூதி தகராறு பயன்படுகிறது. பாபரி மசூதி மீட்புக் கமிட்டி என்ற பெயரில் முஸ்லீம் மத வெறியர்களும், விஸ்வ இந்து பரிக்ஷத் தலைமையில் இந்து மத வெறியர்களும் தொடர்ந்து தூபம் போட்டு வளர்க்கிறார்கள். பாசிச ராஜீவ் கும்பலோ கடந்த நான்காண்டுகளாக இந்த விவகாரத்தைத் தீர்ப்பதற்குப் பதில் இரு தரப்பையுமே தூண்டிவிட்டு நீட்டித்து வருகிறது.

''பாபரின் பிள்ளைகளே, இந்துஸ்தானத்தை விட்டு ஓடுங்கள்'' என்று கூச்சல்



டெல்லி போட் கிளப் மைதானத்தில் விராட் இந்து சம்மேளனத்தில் இந்துமதப் பண்டாரங்கள். மேடையின் பின்னணியில் இந்து வெறியர்கள் அயோத்தியில் உருவாக்கப் போகும் கோயிலின் மாதிரிப் படம்.

போடுகிறார்கள், இந்து மதவெறியர்கள். பாபரி மசூதி / ராம ஜென்ம பூமி விவகாரத்தை தேர்தலுக்குப் பணயம் வைத்து ''பாபர் மசூதியைக் கொடுங்கள், எங்கள் ஓட்டுக்களை வாங்கிப் போங்கள்'' என்று பேரம் பேசுகிறார்கள் முஸ்லீம் மதவெறியர்கள்.

உருது மொழியை அதிகாரபூர்வ மொழியாக்கியதை எதிர்த்து இந்துவெறி சிவசேனையின் ஆர்ப்பாட்டம்.



விவகாரம் இன்னமும் உயர் நீதிமன்றத்தில் இருக்கும் அதே சமயம், நாட்டின் பல இடங்களில் இருந்தும் ''புனித செங்கல்'' கொண்டுவந்து, அயோத்தியில் பிரம்மாண்டமான ராமர் கோவில் கட்டும் நடவடிக்கையில் விஸ்வ இந்து பரிக்ஷத் இறங்கிவிட்டது. இதற்காக சங்கராச்சாரிகள் போன்ற பண்டாரங்களை வைத்து ராமஷீலா பூசைகள் நடத்தி நாடெங்கிலும் இருந்து ஊர்வலமாக செங்கற்கள் எடுத்து வருகிறார்கள். இந்த ஊர்வலங்கள் போகும் இடங்களில் எல்லாம் இந்து முஸ்லீம் கலவரங்கள் மூளுகின்றன.

இதுபோதாதென்று, இன்னொரு 'கொள்ளியையும்' பாசிச ராஜீவ் கும்பல் பற்ற வைத்துள்ளது. உருதுவை இரண்டாவது அதிகாரபூர்வ மொழியாக்குவதாக 1980 தேர்தலிலேயே இந்திரா காங்கிரசு வாக்குறுதி கொடுத்திருந்தது. 1982 முதல் 84 வரை பல முறை அதற்கான அவசரச் சட்டங்கள் போட்டும் சட்டமன்றத்தில் நிறைவேற்றாது காலாவதியாகும்படி விட்டுவிட்டார்கள். 1984 தேர்தலிலும் வாக்குறுதி கொடுத்திருந்தும், இப்போதுதான் சட்டமாக்கியுள்ளனர். இப்போதும் எந்தெந்த மாவட்டங்களில், எப்படி அதை அமுலாக்கப் போகிறார்கள் என்பதில்லை. பீகாரில் ஏற்கனவே சில மாவட்டங்களில் மட்டும் உருது இரண்டாவது அதிகாரபூர்வ மொழியாக உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

இப்போது அனைத்து மாவட்டங்களுக்கும் அதை விரிவாக்கியுள்ளனர்.


உருது அதிகாரபூர்வ மொழிகளில் ஒன்றாக்குவது நியாயமானதே. குறிப்பாக வட மாநிலங்களில் எல்லா மதத்தினரும் உருது பேசுகிறார்கள். ஆனால் உருது முஸ்லீம்களின் மொழி என்றும், அது கட்டாயமாக்கித் திணிக்கப்படும் என்றும் மத ரீதியிலானதாக மாற்றிப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. ''பாகிஸ்தானில் இந்தி அதிகாரபூர்வ மொழியாக ஏற்றுக் கொள்வார்களா?'' என்று கேட்டு வெறியூட்டப்படுகிறது. எனவே ராம ஜென்ம பூமி பாபுரி மசூதி விவகாரத்தோடு இதுவும் இந்து - முஸ்லீம் மதக் கலவரத்துக்குக் கொள்ளி வைப்பதாகிவிட்டது. தேர்தல் சமயத்தில் வேண்டுமென்றே பாசிச ராஜீவ் கும்பல் இதைச் செய்துள்ளது.

அயோத்தியில் ராமர் ஜென்மபூமி கோவில் கட்டும் செங்கல் எடுப்பதற்காக பீகாரில் மட்டும் 28188 ராமஷீலா பூசைகள் நடந்துள்ளன. மருத்துவமனைகள், மசூதிகளுக்கு அருகருகே, இடுகாடுகள், அரசு அலுவலகங்கள், நடைபாதைகள், பஸ் - ரயில் நிலையங்கள் என்று மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கில் திடீரென்று அனுமார் கோவில்கள் எழுப்பப்படுகின்றன. கடந்த இரண்டு மாதங்களில் ஆறு பெரிய மதக்கலவரங்கள் நடந்துள்ளன. 20க்கும் மேற்பட்டவர்கள் பலியாகி, பலர் காணாமற் போய் விட்டனர். ஒவ்வொரு கிராமத்திலும் பஸ்ராங்தளம் என்கிற மதவெறி அமைப்பின் கிளைகள் துவங்குகிறார்கள். அரசு அதிகாரிகளும், போலீசுமே இந்து மதவெறிக்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

ஹசாரிபாக் நகரில் ராமநவமி ஊர்வலத்தின் மீது பட்டாசுகளைக் கொளுத்திப் போட்டதாலும், கோபால் கஞ்சின் கத்தாயா கிராமத்தில் ஒரு கிணற்றில் பசுக்கன்றுவின் தலையை வெட்டிப் போட்டதாலும் மதக்கலவரங்கள் துவங்கின. திட்டமிட்டே இவை தூண்டப்பட்டுகின்றன என்று நிரூபணமாகி றது. அனுமார் கோவில்களைக் கட்டிக் கொண்டு கட்டாய வசூலில் ஈடுபடும் பேட்டை ரௌடிகளான சமூக விரோதிகளே முன்னின்று கலவரங்களை நடத்துகின்றனர்.

மதக்கலரங்கள் அதிகமாக நடக்காத மத்தியப் பிரதேசம் மகோவ் நகரில் மிகப்பெரிய ராமஷீலா பூசை ஊர்வலம் நடந்தது. அது பக்கி மொகல்லா, ஹம்மல் மொகல்லா என்ற இடத்தை அடைந்த போது யாரோ கற்களை வீசியதால் கலவரம் மூண்டு போலீசு துப்பாக்கி சூட்டில் நாலு பேர் பலியாகினர். அதுவே மதக்கலவரமாக மாறி கார்கான், ரத்லாம் ஆகிய நகரங்களுக்குப் பரவியது. பலர் பலியாகி, கடைகள், வீடுகள் கொளுத்தப்பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

ராஜஸ்தானில், மின் அணு உலை உள்ள கோட்டா நகரில் வழக்கமான ஆனந்த் சதுர்தாஷி விழா ஊர்வலம் நடந்தது. வீட்டுக் கூரை மீதிருந்து ஊர்வலத்தை யாரோ தாக்கியதால் கலவரம் மூண்டு பலர் மாண்டுபோயினர். மாக்பாரா போலீசு நிலையத்தைச் சூறையாடி, போலீசாரும் தாக்கப்பட்டனர். கடைகளும் வீடுகளும் சூறையாடப்பட்டன. இராணுவம் அழைக்கப்பட்டு துப்பாக்கிச்சூடும் நடந்துள்ளது.




உருதுவை இரண்டாவது அதிகார பூர்வ மொழியாக்கியதை எதிர்க்கத் துவங்கி விட்ட பதூன் நகரக் கலவரம்தான் மிகவும் கோரமானது. இச்சட்டத்துக்கு எதிராக ஸ்ரீகிருஷ்ணா இடைநிலைக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம் போய் கலெக்டரிடம் மனுக் கொடுத்தனர். அதற்கு எதிராக இஸ்லாமிய இடைநிலைக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம் கிளம்பினர். சமூக விரோதிகள் அந்த ஊர்வலத்துக்குள் புகுந்து கொண்டு தீவைப்பு, கொள்ளையிடுதலில் ஈடுபட்ட போது கலவரம் வெடித்தது. பெட்ரோலும், திராவகமும் சரளமாகப் பயன்படுத்தப்பட்டன.

கலவரத்துடன் சம்பந்தமே இல்லாத பார்வையாளர்கள், பஸ் - ரயில் பயணிகள் அடித்துக் கொல்லப்பட்டனர். ரயிலுக்குள் இருந்த கர்ப்பிணிப் பெண் - வயிற்றுக் குழந்தையோடு கொல்லப்பட்டாள். ரயில் நிலையத்தில் காத்திருந்தவர்கள் தாக்கப்பட்டனர். பலருடைய முகத்திலே திராவகத்தை ஊற்றிச் சிதைத்துக் குருடாக்கினர். அதிகாரபூர்வ அறிவிப்பின்படி 22 பேர் மாண்டனர். கலவரம் துவங்கி ஆறு மணி நேரமாகியும் போலீசு தலையிடவே இல்லை. தலையிட வேண்டாம், கலவரம் நடக்கட்டும் என்று மேலிடத்தில் இருந்து குறிப்பான உத்திரவு போட்டிருக்கிறார்கள். திட்டமிட்டே தூண்டிவிட்டு இந்தக் கலவரங்கள் நடத்தப்பட்டதாக மாவட்ட அதிகாரிகளே இரகசியமாக ஒப்புக் கொள்கின்றனர்.



கலவரத்தீயில் மத வெறியர்கள் குளிர் காய, தீயால் உடல் வெந்துபோன ஒரு உழைப்பாளி.

சீக்கிய மதவெறி பயங்கரவாதத்துக்கு எதிராக இந்துமதக் காவலனாக நடிப்பது, ராமஜென்ம பூமி, மகாபாரதம், இராமாயணம் என்று இந்துமத வெறிக்கு தூபம் போடுவதன் மூலம் இந்துக்களின் ஓட்டுகளைப் பொறுக்கும் அதே சமயம், பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். மதவெறிக்கு எதிராக சிறுபான்மையினரின் காவலனாக நடிப்பது. வடகிழக்கே கிறித்துவர்களின் கட்சியாகக் காட்டிக் கொள்வது என்று இரட்டை வேடம் போட்டு ஆதாயம் தேடுகிறது பாசிச ராஜீவ் கும்பல்.

அதைவிட முக்கியமாக தற்போது அம்பலமாகிவரும் ஆயுத பேர லஞ்ச ஊழல் புகார்கள் மற்றும் விலையேற்றம் போன்ற நெருக்கடிகளில் இருந்து திசை திருப்பிவிட மதக்கலவரங்களைத் தூண்டுகிறது.

இந்துமத வெறியை முற்றாக நம்பி அரசியல் நடத்தும் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கும்பல், எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தல் கூட்டுகளில் மற்ற கட்சிகளுடன் பேரம் நடத்தவும், தேர்தல் பிரச்சாரத்தை முடுக்கிவிடவும், மதக்கலவரங்களைத் தூண்டுகிறது - நடத்துகிறது. சாதி அடிப்படையில் தேர்தல் கணக்குகளைப் போடும் ஜனதா தளம் இந்து மதவெறி - இஸ்லாம் மதவெறி ஆகிய இரண்டு சக்திகளுக்கும் இடையே சந்தர்ப்பவாத சாகசம் புரிந்து ஆதாயம் தேடுவதற்காக அவர்களுடன் கூடிக்குலாவுகிறது.

ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் குறுகிய சுயநலன்களுக்கும், மதவெறிக்கும் பலியாகி உழைக்கும் மக்கள் பிளவுபட்டு மோதிக்கொண்டு சாகிறார்கள். வர்க்கரீதியிலான ஒற்றுமையை உருவாக்கி இந்த நாசகரச் சக்திகளை முறியடிக்க வேண்டும். இதைச் சொல்லிக்கொண்டே ஒருபுறம் முஸ்லீம் லீக் மற்றும் பாரதீய ஜனதாவுடன் மறைமுக இடப்பங்கீடு போடுவதும், மறுபுறம் பாசிச ராஜீவுக்குப் பரிந்து போய் துரோகமிழைப்பதுமாக போலிக் கம்யூனிஸ்டுகள் நடத்தும் சந்தர்ப்பவாதப் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்த வேண்டும்.

● மணி.



படிப்பகம்

www.padippakam.com

# நிர்வாகத்தின் சதி! சங்கங்களின் துரோகம்!

திருச்சி - துவாக்குடி பகுதியில் ஜோதி மாலியபல்ஸ் என்ற உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை உள்ளது. இந்த ஆலை நிர்வாகத்தின் சுரண்டலுக்கும் அடக்குமுறை வெறியாட்டத்திற்கும் எதிராக தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட செய்தி ஏற்கனவே புதிய ஜனநாயகம் ஆகஸ்ட் 15 இதழில் வெளிவந்துள்ளது.

இந்த ஆலையில், போலிக் கம்யூனிஸ்டுகள் வழிநடத்தும் சி.ஐ.டி.யு. சங்கத் தலைமையின் கீழிருந்த பெரும்பாலான தொழிலாளர்கள், முன்னறிவிப்பின்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால், ''இப்போராட்டத்தை யாரோ பின்னால் இருந்து இயக்குகின்றனர்'' என்று கூறி போராட்டத்தைக் கைவிட்டு ஓடியது சி.ஐ.டி.யு.

இந்நிலையில், ''தொழிலாளர்கள் அனைவரையும் வேலைக்குச் சேர்த்துவிடுகிறோம்; சம்பள உயர்வு பெற்றுத் தருகிறோம், எங்களுடன் சேருங்கள்'' என்று உறுதிகூறி தி.மு.க. தொழிற்சங்கம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, தொழிலாளர்கள் அச்சங்கத்தில் இணைந்தனர்.

இதே நேரத்தில், தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கும் அதேசமயம், இதர அலுவலக ஊழியர்களை வைத்து ஆலையை இயக்க நிர்வாகம் முயற்சித்தது. இதனைப் போராடும் தொழிலாளர்கள் வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தினர். ஆத்திரமடைந்த நிர்வாகம், கதவடைப்பு செய்வதாக அறிவித்து ஆலையை மூடியது.

பின்னர் தொழிற் கோர்ட்டில் போராட்ட முன்னணியாளர்கள் 6 பேரை வேலைநீக்கம் செய்ய ஒப்புக் கொண்டால்தான் ஆலையைத் திறக்க முடியும் என்று நிர்வாகம் சண்டித்தனம் செய்தது. இதை எதிர்ப்பதாக தி.மு.க. சங்கம் ஒருபக்கம் நாடகமாடிக் கொண்டே, மறுபக்கம் தி.மு.க. எம்.எல்.ஏ. மலர்மன்னன் மூலம் நிர்வாகத்துடன் ரகசிய பேரம் நடத்தியது.

போராட்ட முன்னணியாளர்கள் 6 பேரையும் அவர்களது பணிக்காலத்திற்கேற்ப ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதம் கொடுத்து வேலைநீக்கம் செய்வது; இதர தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தை சற்றே அதிகரிப்பது; உற்பத்தியுடன் இணைந்த ஊதியம் என்ற முறையின்கீழ் ஒரு நாளைக்கு 300 பெட்டிகள் உற்பத்தி செய்ய வேண்டுமென குறியீட்டளவை நிர்ணயிப்பது (தினசரி 280 பெட்டிகளே போட இயலும்) முதலான நிர்வாகத்தின் பகற்கொள்ளை திட்டத்தை தி.மு.க. சங்கம் ஏற்றுக் கொண்டு, இதை தொழிலாளர்கள் மீதும் திணித்தது.

இதனை ஆகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் எதிர்த்தனர். உடனே தி.மு.க. தொழிற்சங்க தலைமை, ''எங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கையில்லை. எனவே நாங்கள் எங்களது பழைய உறுப்பினர்களைக் (கருங்காலிகளை) கொண்டு ஒப்பந்தத்தை முடித்துக் கொள்கிறோம்'' என்று மிரட்டினர். மேலும் ''முதல்வர் கருணாநிதி திருச்சி வருவதற்குள் ஆலையைத் திறக்க வேண்டும். நீங்கள் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் ஆலை திறக்கப்படும். வேலைக்குப் போகிறவர்கள் போகலாம்'' என்று திமிராகப் பேசினர்.


பின்னர் மீண்டும் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நாடகமாடி, முன்னர் குறிப்பிட்ட நிர்வாகத்தின் ஆலோசனைகளை அப்படியே ஏற்று, துரோக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதில் கொடுமை என்னவென்றால் இந்த துரோக ஒப்பந்தம் இன்னும் 4 ஆண்டுகளுக்கு நீடிக்கும்.

பேச்சு வார்த்தையின் போது, ''இந்த 6 பேர் தான் பிரச்சினை. மற்றவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ளலாம்'' என்று எம்.எல்.ஏ. மலர்மன்னன் கூறியபோது, வர்க்க உணர்வுள்ள ஒரு தொழிலாளி மற்றவர்களுக்கு மட்டும் என்ன உத்திரவாதம் என்று திருப்பிக் கேட்டார். எரிச்சலடைந்த மலர்மன்னன், ''எங்கள் சங்கத்தில் இப்படித்தான். இஷ்டமிருந்தால் இருங்கள். இல்லையேல் வேறு சங்கம் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று ஆணவமாக கூறினார்.

கடைசியில், 60 நாட்களுக்கு மேல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு போராடிய தொழிலாளர்கள் பெற்றதோ துரோக ஒப்பந்தம்தான்! 6 தொழிலாளர்களின் வேலை இழப்புதான்!

இனியும் ஓட்டுக்கட்சிகளின் தலைமையின் கீழான துரோக தொழிற் சங்கங்களை தொழிலாளர்கள் நம்பிக் கொண்டிருந்தால் அது அவர்களை ஏமாற்றிக் கொள்வதாகும். நிர்வாகத்துக்கு நிர்ப்பந்தமளிக்கும் போராட்டங்கள், தொழிற்சங்க - அரசியல் பயிற்சி, இதர ஆலைத் தொழிலாளர்களுடன் கூட்டு முதலான புதிய வழிகளைக் கொண்ட புரட்சிகர தொழிற் சங்கத்தை தொழிலாளர்கள் நிறுவிப் போராடுவதன் மூலமே, துரோகத் தனத்திற்கும், நிர்வாகத்தின் சுரண்டலுக்கும் நிரந்தரமாக முடிவுகட்ட முடியும். ஜோதி மாலியபல்ஸ் ஆலையில் நடந்த போராட்டம், இப்படிப்பினையை மீண்டும் தொழிலாளி வர்க்கத்துக்கு உணர்த்தியுள்ளது.

— தகவல்: இராமன்



## ரஷ்ய போலீசாருக்கு இந்தியக் குண்டாந்தடி ஏற்றுமதி!

ரஷ்யாவில் ஒருபக்கம் உணவுப் பஞ்சமும் மறுபக்கம் தேசிய இனங்களின் கலகங்களும் தொழிலாளர்களின் போராட்டங்களும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்து கோர்ப்பச்சேவ் கும்பலைக் கதிகலங்க வைக்கின்றன. ஜியாஜியாவில் போராடும் மக்கள் மீது விஷவாயுவைச் செலுத்தி பலரைக் கொன்றும், ஆர்மீனியாவை சுற்றி வளைத்து அம்மக்களைப் பட்டினி போட்டுக் கொன்றும் கூட தேசிய இனக் கலகங்களைக் ''கோர்பி'' கும்பலால் அடக்க முடியவில்லை. இப்போது புதிதாக, பால்டிக் குடியரசுகள் சுயநிர்ணய உரிமை கோரி கலகம் செய்கின்றன. இருமாதங்களுக்கு முன் நடந்த ரயில்வே தொழிலாளர் போராட்டத்தைத் தொடர்ந்து இப்போது அனைத்துப் பிரிவு தொழிலாளர்களும் ஆங்காங்கே போராட கிளம்பிவிட்டனர். ஆத்திரமடைந்த ''கோர்பி'' கும்பல், முதலாளித்துவ நாடுகளைப் போல வேலைநிறுத்தம் செய்யும் உரிமையையும் தொழிலாளிகளிடமிருந்து பறித்து, தடைச் சட்டம் போட்டுள்ளது.

இந்த நெருக்கடிகள் ஒருபுறமிருக்க, மறுபுறம் ரஷ்ய சமுதாயமே சீரழிந்து நாடெங்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருட்டு என குற்றங்கள் புழுத்துப் போய்விட்டன. அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளை விட ரஷ்யாவில் குற்றங்களின் விகிதம் அதிகரித்துவிட்டதாக ரஷ்யாவிலிருந்து வெளிவரும் நியூ டைம்ஸ் (எண்:35) பத்திரிக்கையே ஒப்புக் கொள்கிறது. அதன் கூற்றுப்படி கடந்த ஆண்டு மட்டும் ரஷ்யாவில் 16,716 கொலைகள் நடந்துள்ளன.

இப்புதிய நெருக்கடிகளைக் கண்டு விழிபிதுங்கி நிற்கும் கோர்பி கும்பல் இப்போது இந்திய பாசிஸ்டுகளிடம் பாடம் படிக்கத் தொடங்கியுள்ளது. சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையை எப்படிக் கையாள்வது, கலவரம் - ஆர்ப்பாட்டங்களை எப்படி அடக்குவது, தேசிய இனங்களை எப்படி ஒடுக்குவது என்பதைக் கற்றறிய ரஷிய உயர்மட்டக் குழு அண்மையில் இந்தியாவுக்கு வந்து உள்துறை அமைச்சகம் மற்றும் போலீஸ் உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. போராட்டங்களை முறைப்படுத்துவதற்கான விதிமுறைகள் பற்றி - அதாவது அடக்குமுறை உத்திகள், கருப்புச் சட்டங்கள், ஊடுருவி சீர்குலைக்கும் முறைகள் பற்றி அவர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டுள்ளதாம்! இதுமட்டுமன்றி, சட்டம் - ஒழுங்கைக் காக்கும் ரஷிய போலீசாருக்கு இந்தியாவிலிருந்து ஐ.எஸ்.ஐ. தரக்கட்டுப்பாடு முத்திரை பெற்ற லத்திகளும், பிரம்புகளும், மூங்கில் தடுப்புகளும் ஏற்றுமதி செய்து உதவுவதென முடிவாகியுள்ளது. இனி ரஷிய பாட்டாளி மக்கள் இந்திய குண்டாந்தடியால் வதைபடுவார்கள்!

இத்தனைக்கும் பிறகும் போலிக் கம்யூனிஸ்டுகள் ரஷியாவை சோசலிசநாடு என்று பிதற்றித் திரிகின்றனர். அவர்களது அகராதியில் இந்திய - சோவியத் நட்புறவு என்பது இதுதானோ?



படிப்பகம்

# அரசு நிதிநிறுவனங்களில் அம்பாணியின் கொள்ளை!

தூங்குபவன் தொடையில் கயிறு திரிப்பது எல்லாம் மலையேறிவிட்டது! விழித்திருப்பவன் தொடையில் வடக்கயிறு திரிக்கும் கும்பல்தான் இப்போது அரியணையில் இருக்கிறது. தரகு முதலாளிகளில், அதற்கு மிகச் சிறந்த உதாரணம் திருபாய் அம்பாணி. இந்திய தரகு முதலாளித்துவத்தின் இன்றைய கதாநாயகன். இன்றைய தேதிககு ஏறக்குறைய 3,700 கோடி ரூபாய்க்கு அதிபதி. ஆண்டுக்கு 3000 கோடி ரூபாய்க்கு வரவு செலவு செய்யும் தொழிலுலக சக்கரவர்த்தி! கடந்த 10 ஆண்டுகளுக்குள் இந்த அசுர வளர்ச்சி! டாட்டா, பிர்லா, மஃபட்லால், மோடி போன்ற பழம்பெருச்சாளிகள் எல்லாம் மிரண்டுபோய் நிற்கின்றனர்.

'லார்சன் அன்டு டூப்ரோ' (L&T) 650 கோடி ரூபாய் சொத்துள்ள மிகப் பெரும் கூட்டுபங்கு நிறுவனம். ஓராண்டுக்கு முன் பலத்த போட்டிக்கு நடுவில் இதை 'லாவகமாக' கைப்பற்றினார், திருபாய் அம்பாணி. இப்போது இக்கம்பெனியின் சார்பில் 820 கோடி ரூபாய்க்கு பொதுமக்களிடம் பங்கு மற்றும் கடன்ஈட்டுப் பத்திரங்கள் வெளியிட அரசிடம் அனுமதி வாங்கியுள்ளார். தற்போது அப்பத்திரங்களின் விற்பனையும் வேகமாக நடக்கிறது.

பங்கு, கடன் பத்திரங்கள் வெளியிட அனுமதி என்ற பெயரில் கூட்டுபங்கு வரலாற்றிலேயே காணாத அம்பாணியின் மிகப்பெரும் மோசடிக்கு ராஜீவ் அரசு சட்டப்பூர்வமாக அங்கீகாரம் வழங்கியுள்ளது. வரும் தேர்தல் சூதாட்டத்தில் அம்பாணி போன்ற தரகு முதலாளிகளின் 'அனைத்து' ஆதரவும் பெறுவதற்காக அரசு நிதி நிறுவனங்களின் பெரும் நிதியை அவர்களுக்கு வேகமாக வாரிவாரிக் கொடுக்கிறது.

முன் எப்போதும் கண்டிராத வகையில், அம்பாணியின் பங்கு, கடனீட்டு பத்திரங்களுக்கு தவறானமுறை சலுகைகளை வழங்கியுள்ளது ரிசர்வ் வங்கி. தவணை சலுகையில் வாங்கும் பங்கு, கடனீட்டு பத்திரங்களுக்கு உடனடியாக முழுப்பணத்தை கொடுக்க, சட்டப்பூர்வ உறுதிமொழி கொடுத்துள்ளன, அரசின் நிதிநிறுவனங்கள்.

அதாவது அம்பாணி வெளியிட்டுள்ள பங்கு, கடன்ஈட்டு பத்திரத்தின் மொத்த மதிப்பில் வாங்குவோர் வெறும் 25 சதம் செலுத்தினால் போதும் 100 சதம் பங்கு, கடன்ஈட்டுப் பத்திரம் கிடைக்கும். உதாரணத்திற்கு 8000 ரூபாய் பங்கு, கடன்ஈட்டு பத்திரத்தை 2000 ரூபாய் கொடுத்து வாங்கி, அதை உடனடியாக வங்கியில் வைத்து 8000 ரூபாய் பெற்றுக் கொள்ளலாம். பாக்கி 75 சதவிகிதம் பணத்தை பங்கு, கடன் ஈட்டு பத்திரம் வாங்கியவர் செப்டம்பர் '90 ஆம் ஆண்டுக்குள் 3 தவணைகளில் செலுத்தினால் போதும். இவ்வாறு ஒருவர், ரூ.3 லட்சம் வரை பங்கு, கடன்ஈட்டு பததிரங்களை பணமாக்கிக் கொள்ள அனுமதி அளித்துள்ளது ரிசர்வ் வங்கி. தவணை முறையில் 'டி.வி'யை வாங்கிவிட்டு மாதசம்பளத்தில் கொடுப்பது மாதிரி. பங்கு, கடன்ஈட்டு பத்திரங்களை சந்துமுனை சீட்டு வியாபாரமாக்கி கொள்ளையடிக்கிறது அம்பாணி கும்பல்.

உபரி வருமானத்தில் திளைக்கும் லஞ்ச ஊழல் அதிகாரிகள், கருப்புப்பண புள்ளிகள், கள்ளமார்க்கெட் பேர்வழிகள் தான் அதிகமாக இதுவரை பங்குகள், கடன்ஈட்டு பத்திரங்களின் வாடிக்கையாளர்களாக இருந்தனர். நடுத்தரவர்க்கத்தின் மேல்மட்டத்தினர் பலர் தங்கள் சேமிப்புகளை இவ்வாறு இதில் போட்டு வைத்திருந்தனர். தவணை முறை சலுகையின் மூலம் புதிதாக பெருந்திரளான நடுத்தர வர்க்கத்தை இந்த பங்கு மார்க்கெட் சூதாட்டத்தினுள் இழுக்கிறது அம்பாணி கும்பல். இதன் மூலம் தனது நிதிமூலதன ஊற்று மூலத்திற்கு அவர்களது அற்ப சேமிப்புகளையும், உடமைகளையும் தட்டிப்பறிக்கிறது.

மேலோட்டமாகப் பார்த்தால் மிகவும் பகட்டாக தெரியும் இந்த முன்மதிப்பு தவணை முறை பங்கு, கடன்ஈட்டு பத்திரங்கள் மூலம் ஒரே நேரத்தில் இரண்டு கொள்ளைகள் அடிக்க தங்களது கதவை திறந்து விட்டுள்ளன, அரசின் நிதி நிறுவனங்கள். ஒருபுறம் பெருந்திரளான மக்களிடம் தன் பங்குகளை விற்பது என்ற போர்வையில் பினாமிகள் மூலம் தானே பங்குகளை வாங்கி, வங்கியில் வைத்து நிதியை சுருட்டுவது; மறுபுறம் லட்சக்கணக்கான அப்பங்குகள் மூலம் தன் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் 'லார்சன் அன்ட் டூப்ரோ' கூட்டுபங்கு நிறுவனத்தை மேலும் மேலும் தன்பிடியின் கீழ் கொண்டு வருவது.

அதாவது கூட்டுப் பங்கு நிறுவனம் என்பது தனியொரு முதலாளியின் மூலத னத்தால் இயங்குவது அல்ல. கூட்டுறவு நிறுவனங்கள் போன்று அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் சொந்தமானது. ஒரே ஒரு வித்தியாசம், உயிராதாரமானது என்னவென்றால் கூட்டுறவு நிறுவனத்தில் அனைவருக்கும் ஒரு ஓட்டு. ஒருவர் எத்தனை பங்கு எடுத்திருந்தாலும் அவருக்கு ஒரு ஓட்டுதான். மேலும், தன் பங்குகளை வேறொருவருக்கு மாற்றவோ, விற்கவோ முடியாது. ஆனால், கூட்டுபங்கு நிறுவனத்தில் ஒரு பங்குக்கு ஒரு ஓட்டு. ஒருவர் ஒரு லட்சம் பங்கு வைத்திருந்தால் அவருக்கு ஒரு லட்சம் ஓட்டு உண்டு. அதை வேறொருவர் பெயருக்கு மாற்றவோ, விற்கவோ உரிமை உண்டு. இதனடிப்படையில், பங்குகள் அதிகம் வைத்திருப்பவர்கள் அங்கு நிர்வாகத்தை கட்டுப்படுத்தலாம். நாடு முழுக்க உதிரியாக சில நூற்றுக்கணக்கில் பங்குகள் வாங்கும் லட்சக்கணக்கான பொதுமக்களுக்கும் நிர்வாகத்திற்கும் நேரடியாக எந்த சம்மந்தமும் இருக்காது. இயல்பாகவே அவர்கள் ஒன்றுகூட வாய்ப்பில்லை.

70 சதவிகித ஓட்டுக்களை பல கட்சிகள் பிரித்துக் கொள்ள, 30 சதவிகிதம் ஓட்டு வாங்கும் ஒரு கட்சி அரியணை ஏறுவது போல ஒரு சில தரகு முதலாளிகளே திரும்பத் திரும்ப அந்நிறுவனங்களை கட்டுப்படுத்துவார்கள். கட்டுப்பாடு செலுத்துவதில் தரகு முதலாளிகளுக்குள் மோதல் வரும் போது நிர்வாகத்தில் இருக்கும் தரகு முதலாளிகள் குறுக்குவழியில் தங்கள் எதிரியின் காலை வாருகின்றனர். புதிதாக பல லட்சம் பங்குகளை பங்கு சந்தையில் விற்கின்றனர். பினாமிகள் பெயரில் அதை தாங்களே சுபளீகரம் செய்வது அல்லது உதிரியாக நாடு முழுக்க பொதுமக்களிடம் விற்றுவிடுவதும் செய்கின்றனர். இதன் மூலம் எதிரியிடம் இருக்கும் பங்கு வலிமை குறைவதால், இயல்பாக நிர்வாகத்தில் அவனது பிடி தளர்வுறும். பொதுமக்களை பொருத்தவரையில் அவர்கள் லாப ஈவுக்காகவே பங்குகள் வாங்குகின்றனர். அவர்களுக்கு இதில் எந்த சூட்சமமும் தெரியாது. தெரிந்துக் கொள்ளவும் விரும்புவதில்லை.

இதேபோல்தான் இப்போது, அம்பாணியின் 820 கோடி ரூபாய் பங்கு, கடன் ஈட்டு பத்திர விற்பனையும் வேலை செய்யப் போகிறது. 'லார்சன் அன்ட் டூப்ரோ' நிறுவனத்தில் இப்போது அரசு நிதிநிறுவனங்களின் பங்கு 33லிருந்து 22 சதவிகிதமாக குறையும். அம்பாணியின் பங்கு 7லிருந்து 35 சதவிகிதமாக உயரும். ஆக, அரசின் நிதி நிறுவனங்கள் அம்பாணியின் கடன்ஈட்டுப் பத்திரங்களுக்கு முன்மதிப்பாக 820 கோடி ரூபாய் கொடுப்பதோடு, அந்நிறுவனத்தில் தங்களுடைய கட்டுப்பாட்டையும் தாரை வார்த்துக் கொடுக்கின்றன.

பங்கு, கடன்ஈட்டு பத்திரங்களுக்கு பணம் கொடுக்க பொறுப்பெடுத்துக் கொண்ட வங்கிகள்: பஞ்சாப் நேஷனல் பேங்க் ரூ.100கோடி, அலகாபாத் பேங்க் ரூ.100கோடி, விஜயா பேங்க் ரூ.50 கோடி, யுனைடெட் கமர்ஷியல் பேங்க் ரூ.50 கோடி, பேங்க் ஆப் இன்டியா பைனான்ஷியல் லிமிடெட் ரூ.100 கோடி, பேங்க் ஆப் பரோடா நிதி ஆதாரதுறை ரூ.100 கோடி, கனரா

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

பேங்க் பைனான்ஷியல் லிமிடெட் ரூ.100 கோடி.

நலிவடைந்தவர்களுக்கு, சிறுதொழில் துவங்குபவர்களுக்கு, விவசாயிகளுக்கு அரசு வங்கிகள் உதவுவதாக ஓட்டுக்கட்சிகளின் தலைவர்கள் கூப்பாடு போடுவதோடு இதை ஒப்பிட்டுப் பாருங்கள்! சிறு விவசாயிகள் சிறிதளவு உடைமை உடையவர்கள், ஆயிரம் ஆதாரங்கள் கொடுத்து 5000 ரூபாய் கடன் பெறுவதே குதிரை கொம்பு! சாமன்ய மக்களைப் பற்றி சொல்லவே வேண்டாம்.

5000 ரூபாய் கடன் என்றால், அதில் மான்யத்தொகை ரூ.1000மோ, ரூ.1500றோ எவ்வளவோ அதை மட்டும் கொடுத்து விட்டு, மீதிப்பணத்தை தங்கள் வங்கி இருப்புகளிலேயே, வைத்துக் கொண்டு விவசாயிகளை துரத்தியடிக்கின்றன அரசு வங்கிகள். பெரும்பாலான இடங்களில் இப்போது இது நடக்கிறது. ''மான்யத்தொகை திருப்பி வாங்க வேண்டியதில்லை. கடன் பணத்தை திருப்பி வாங்குவது சிரமம்! கொடுத்து விட்டு பின்னால் ஏன் ஓடவேண்டும்? எனவே நாங்களே அப்பணத்தை இருப்பில் வைத்துக் கொண்டு கடன் காலம் முடியும் போது அவர்கள் கடன் கணக்கில் வைத்து நேர் செய்துவிடுகிறோம்'' என்கின்றனர் வங்கி அதிகாரிகள்.

எவ்வளவு பெரிய மோசடி! விவசாயிகளுக்கு கொடுக்காத கடனை கொடுத்ததாக கணக்கெழுதுவது ஒருபுறம், எல்லா சட்டவரம்புகளையும் மீறி தரகு முதலாளிகளின் காலில் 820 கோடி ரூபாய் கொட்டுவது மறுபுறம்! 'சேமியுங்கள்! சேமியுங்கள்!' என்று குழந்தைகள் உண்டியல்கள் முதல் வயதானவர்களுக்கு 'பென்சன்' திட்டம் என்பது வரை பலகோடி மக்களிடம் இருக்கும் 5 பைசா, 10 பைசாவையும் சேமிப்பு என்ற பெயரில் வங்கிகள் பிடுங்கிக் கொள்கின்றன. ''உங்கள் சேமிப்பு, நாளைக்கு உங்களுக்கு கைக்கொடுப்பதோடு, நாட்டின் வளர்ச்சி திட்டங்களுக்கும் இன்று அது தோள் கொடுக்கும்'' என்று காதில் பூ சுற்றிவிட்டு அப்பணத்தை தரகு முதலாளிகளின் காலடியில் கொட்டுகின்றன அரசின் நிதிநிறுவனங்கள்.

அதேபோல் இன்சுரன்ஸ் நிறுவனங்கள் போன்று அரசு பல நிதிநிறுவனங்களை திறந்து வைத்துக்கொண்டுள்ளன. இறந்தால் இவ்வளவு பணம் இலவசம் என்று நமது பாடைக்கு பணம் கொடுப்பதாக மாதம் மாதம் நம்மிடம் பணத்தைக் கறந்துக் கொண்டு தரகு முதலாளிகளுக்கு பல்லக்கு வாங்க அப்பணத்தை செலவழிக்கின்றன. அரசு வங்கிகள், இன்சூரன்ஸ் நிறுவனங்கள் நாடு முழுக்க மக்களிடமிருந்து 50,000 கோடி ரூபாயை சேமிப்புகளாக பெற்றுள்ளன. இவ்வளவும் அம்பாணி போன்ற தரகு முதலாளித்துவ கும்பலுக்குத்தான் கொட்டப்படுகின்றன.

. பங்கு, கடன்ஈட்டுப் பத்திர வெளியீட்டுக்கு பங்குகள் வெளியீட்டு நெறி நிறுவனம் (CCI) அம்பாணியின் 820 கோடி ரூபாய் பங்கு, கடன்ஈட்டு பத்திரங்கள் வெளியீட்டுக்கு அனுமதி வழங்க முதலில் தயக்கம் காட்டியது. காரணத்தை பணிவாக சுட்டிக் காட்டியது. பத்திர வெளியீட்டுக் கடனுக்கான போதுமான ஈடுகளை நிறுவனம் உத்திரவாதம் காட்டவேண்டும் என்றது. கடைசி நேரத்தில், அதற்கான வேலையை அம்பாணிக்கு பதிலாக அரசு நிறுவனமே எடுத்துக் கொண்டது. 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ந்தேதி, தொழில் முதலீடு மற்றும் கடன் நிறுவனம் (ICICI) மேற்கூறிய, 7 அரசு வங்கிகளுக்கும் தானே தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதி பொறுப்பெடுத்துக் கொள்ள வைத்தது.

வரலாறு காணாத வகையில் மறுநாளே, செப்டம்பர் 9ந் தேதியே சாதகமான பதிலையும் கோரிப்பெற்றது. அதே 'லார்சன் அன்ட் டுப்ரோ' நிறுவனத்தில் ஏற்கெனவே பங்கு வாங்கியவர்கள் அதை அவசரஅவசரமாக விற்றனர். அப்பணத்தை அந்நிறுவனத்தின் புதிய பங்கு, கடன்ஈட்டு பத்திரங்களில் போட்டு முதலீட்டை நான்கு மடங்காக உயர்த்துகின்றனர். அம்பாணியின் இன்னொரு பெரும் நிறுவனமான 'ரிலையன்ஸ்' பங்குகளும் இவ்வாறு 'சரண்டர்' செய்யப்பட்டு அதிகமான 'புதிய' முதலீடுகளாக மாற்றப்பட்டன. மக்களின் பணம் மக்களுக்கே வேட்டு வைக்கிறது!

தொழிற்துறை நிறுவனங்களில் திட்டமிட்ட வளர்ச்சி சீர்குலைக்கப்படுகிறது. பங்கு மார்க்கெட் சூதாட்டத்தில் சிக்கி சீரழிகிறது. ஆலைமூலதன பிடியில் தொழிலாளர்கள் கொடூர சுரண்டலுக்கு ஆளாவதைவிட அதிகமாக நிதிமூலதனத்தால் குரல்வளையே நெறிக்கப்படுகின்றனர்.

லார்சன் அண்ட் டுப்ரோ நிறுவனத்தின் நிர்வாகக்குழு கூட்டத்தில் அம்பாணியும் அவரது வாரிசும்.



உள்ளூர் தீப்பெட்டி தொழிற்சாலை முதலாளிகளுக்கும் அம்பாணி போன்ற தரகு முதலாளிகளுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். தீப்பெட்டி தொழிற்சாலை முதலாளி தன்னுடைய தொழிலாளர்களின் உழைப்பை மிகக்கொடுமையான முறையில் அடிமட்ட கூலிக்கு சுரண்டிக் கொழுப்பதால் தான் உயிர்வாழ்கிறான். ஆக தொழிலாளர்களை சுரண்டுவதற்கு குறைந்தபட்சம் தொழிலாளர்களை உயிரோடு வைத்திருக்க வேண்டிய தேவை அவனுக்கு இருக்கிறது. ஆனால் அம்பாணி போன்ற தரகு முதலாளிகள் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டலால் பிரதானமாக உயிர் வாழவில்லை. எனவே தொழிலாளர்கள் உயிர் வாழ வேண்டிய அவசியம் பற்றியும், அக்கும்பலுக்கு அக்கரை இல்லை.

போட்டியில் இருக்கும் தொழில் நிறுவனங்களை வீழ்த்தினால் மட்டுமே, அவனது பிரச்சினையும் தீரும்! இதற்காக பங்குமார்க்கெட் சூதாட்டத்தில் வெறியுடன் ஈடுபடுவது.

அதாவது, ஏகாதிபத்திய நாடுகளுடன் கூட்டு வைத்துக்கொண்டு, தொழில்நுட்ப இறக்குமதி, நிதிஉதவி என்ற பெயரில் அந்நாட்டு பகாசூர நிறுவனங்களுடன் கூட்டு வைத்துக் கொண்டு, அதோடு உள்நாட்டு அரசாங்கங்களை ஊழல், கொள்ளையில் பங்கு கொடுத்து விலை பேசுவது. அரசு துறைநிதி சேமிப்புகளை சட்டப்பூர்வமாக சூறையாடுவது. தானே தனியாக கவர்ச்சியான பங்கு ஈவு, வட்டி விகிதம் கொடுத்து மக்களிடம் கடன் எழுப்ப அரசிடம் உரிமை பெறுவது.

இவ்வளவு நிதிகளையும், பிரதானமாக புதிய தொழிற் நிறுவனங்கள் துவங்க பயன்படுத்துவது கிடையாது. மாறாக, ஏற்கெனவே தனக்கு போட்டியாக இருக்கும் தொழிற் நிறுவனங்களை அப்படியே கபளீகரம் செய்வது. அதற்காக, அந்நிறுவனத்தின் பங்குகளை செயற்கையாக வீழ்ச்சியுற செய்ய, தன் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் நிறுவனங்களின் பங்குகளின் சந்தை மதிப்பை செயற்கையாக அதிகரிப்பது. இதற்காக பினாமிகளை வைத்து தனது நிறுவன பங்குகளை பெருமளவில் வாங்குவது. அதேபோல், போட்டி நிறுவனத்தின் பங்குகளை ஒரே நாளில் பெருமளவில் திருப்பிக் கொடுத்து அதன் மதிப்பை வீழ்ச்சியுற செய்கின்றனர். இதற்காகவே எதிரி நிறுவனங்களின் பங்குகளை பினாமிகளை வைத்து பெருமளவில் வாங்கி வைத்துக் கொள்கின்றனர். தேவையானபோது அதை துருப்புச் சீட்டாக பயன்படுத்துகின்றனர், அம்பாணி போன்ற தரகு முதலாளிகள். இதனால் குறிப்பிட்ட நிறுவனங்கள் தடலடியான உற்பத்தி குறைப்புக்கும் இழுத்து மூடப்படும் அபாயத்திற்கும் ஆளாகின்றன.

'லார்சன் அண்ட் டுப்ரோ' நிறுவனத்தின் மூலம் இப்போது பங்கு, கடனீட்டு பத்திரங்கள் வெளியிடும் அம்பாணி அந்நிறுவனத்தை கைப்பற்றியதே ஒரு மிகப்பெரும் மோசடி.

★ '89 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தான் இக்கம்பெனி அம்பாணியின் கைக்கு வந்தது! ஆனால் 1988 ஆம் ஆண்டின் மத்தியிலேயே, அரசு நிதிநிறுவனங்கள் தங்கள்

படிப்பகம்

www.padippakam.com

கைவசம் இருந்த 39 லட்சம் பங்குகளை அம் பானிக்கு மாற்றும் ரகசிய ஏற்பாடுகளை செய்யத் துவங்கின.

★ இந்நிறுவனத்தை அம்பானியின் கரங் களுக்கு கடத்துவதற்கு ஒரு படகாக மே '88 ஆண்டு அரசு துறை நிறுவனமான பேங்க் ஆப் பரோடாவின் நிதி ஆதாரத்துறை (BOB Fiscal) என்று ஒரு துணை நிறுவனம் உரு வாக்கப்பட்டது.

★ 10 கோடி ரூபாய் மூலதனத்தில் தனி யார் நிறுவனமாக துவக்கப்பட்ட மேற்கூறிய துணை நிறுவனம் ஒரே மாதத்தில் '88 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பொது நிறுவனமாக மாற்றப்பட்டது.

★ அரசுத்துறை நிதிநிறுவனங்களிடம் இருக்கும் கூட்டுப்பங்கு நிறுவனங்களை தனியார் நிறுவனங்களுக்கு விற்கக்கூடாது என்பது அரசின் சட்டம். இன்னொரு சட்ட மும் இருக்கிறது. அரசு நிதி நிறுவனங்களிட மிருக்கும் கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பங்குகளை அதே கூட்டுப் பங்கு நிர்வாக இயக்குநர்களுக்கு விற்கலாம். ஆனால், இரு மடங்கு விலைக்குத்தான் விற்கவேண் டும். அதன் சந்தை மதிப்பு எவ்வளவு குறை வாக இருந்தாலும், ஒரு பங்கின் விலை 100 ரூபாய் என்றால் அதை 200 ரூபாய்க்கு விற்க வேண்டும். அரசின் இந்த இரண்டு சட்டங்க ளையும் உடைப்பதற்காக அரசு நிதிநிறுவ னங்களே அடுக்கடுக்காக பல தில்லுமுல்லு களை செய்தது.

★ இதுநாள் வரையில் கண்டுபிடிக்க முடி யாத அம்பானியின் ஒரு பினாமி முதலீட்டு நிறுவனம், புதிதாக துவக்கப்பட்ட பேங்க் ஆப் பரோடாவின் நிதி ஆதார பொது நிதி நிறுவனத்தில் '88 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ந் தேதி அதாவது, அது துவங்கப்பட்ட இரண்டு மாதத்தில் 30 கோடி ரூபாயை முத லீடு செய்தது.

★ அடுத்த 3 மாதத்தில் '88 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ந் தேதி ஒரே நாளில், 39 லட்சம் லார்சன் அண்ட் டூப்ரோ பங்கு களை அதே மதிப்புக்கு அரசு நிறுவனங்கள் 'BOB Fiscal'க்கு விற்கிறது. யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா (UTI), லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா (LIC), ஜென ரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் (GIC) இத் தனை நிறுவனங்களும் ஒரே நாளில் 'தற்செ யலாக' பங்குகளை விற்க நினைத்திருப்பது உலக மகா அதிசயம்!

★ 'திருஷ்ணா இன்வஸ்மெண்ட் அண்ட் லீசிங் பிரைவேட் லிமிடெட்' '88 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ந் தேதி வரை வெறும் 11,000 ரூபாயை மூலதனமாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருந்த ஒரு முகம் தெரியாத ஆசாமிக்கு சொந்தமான நிறுவனம். அடுத்த ஒரு வாரத்தில் இதில் 33,000 ரூபாய்க்கு பங்குகள் வாங்கி அதை தனது கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பினாமி நிறுவனமாக்கிக் கொண்டார் திருபாய் அம் பானி. அடுத்த சில நாட்களிலேயே '89 ஆம் ஆண்டு ஜனவரி 6ந்தேதி 40 கோடி ரூபாய் மதிப்புள்ள, அரசு நிதி நிறுவனங்களிடமி ருந்து தான் வாங்கி வைத்திருந்த 39 லட்சம் லார்சன் அண்ட் டூப்ரோ பங்குகளை ஒரே நாளில் அந்நிறுவனத்துக்கு அதே மதிப்புக்கு விற்றது. பேங்க் ஆப் பரோடாவின் நிதி




பங்கு கடன் ஈட்டு பத்திரங்கள் விற்பனைக்கு அம்பானி வெளியிட்ட விளம்பரம். இது ஒரு ரிலையன்ஸ் குருப் நிறுவனம் என்று பெருமையோடு பல இடங்களில் குறிப்பிட்டிருந் தது. உள்ளே கோயங்கா

ஆதாரத்துறை (BOB Fiscal). 44,000 ரூபாய் மூலதனம் மட்டுமே கொண்டு இயங்கிக் கொண்டி ருந்த அந்நிறுவனம் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகள் வாங்க எங்கிருந்து பணம் பெற்றது?

★ '88 ஆம் ஆண்டு மத்தியில் இந்த மோசடி ஆரம்பிக்கும் போதே, அம்பானி யின் இன்னொரு மிகப் பெரிய கூட்டுப்பங்கு நிறுவனமான 'ரிலையன்ஸ் பெட்ரோ கெமிக்கல் லிமிடெட்' தேவைக்கு 594 கோடி ரூபாய்க்கு பங்குகள் விற்க அரசு அனுமதி கொடுத்தது. அத்தொகையில் 185 கோடி ரூபாய் மற்ற நிறுவனங்களில் முதலீடு போட வும் அரசு முன் அனுமதி அளித்தது. 'ரிலை யன்ஸ்' நிறுவன'த்திற்காக கடன் பெற்ற அத் தொகையைத்தான் இப்படி 'லார்சன் அண்ட் டூப்ரோ' பங்குகள் வாங்க கடத்தியிருக்கிறது அம்பானி கும்பல். இவ்விவரம் 'ரிலை யன்ஸ் பெட்ரோ கெமிக்கல்' நிறுவனத்தின் 31.3.89 நிதிநிலை அறிக்கையில் கண்டுபி டிக்கப்பட்டது. அதில் மற்ற நிறுவனங்களில் முதலீடு செய்த வகையில் 185 கோடி ரூபாய் என்று கணக்கு எழுதியிருக்கிறது!

★ ஆக, 650 கோடி ரூபாய் மதிப்புள்ள 'லார்சன் அண்ட் டூப்ரோ' நிறுவனத்தை கைப்பற்றுவதற்கு அம்பானி கும்பல் தன் 'பாக்கெட்'லிருந்து 5 பைசாகூட செலவழிக் கவில்லை! மூன்று சீட்டு குத்துபவர்கள்கூட ஏதாவது கொஞ்சம் பணத்தோடு போய் தான் சூதாட்டத்தில் உட்கார்வார்கள்! அம் பானி போன்ற தரகு முதலாளித்துவ கும்ப லின் பங்குமார்க்கெட் சூதாட்டத்திற்கு இந் திய அரசும் அதன் நிதிநிறுவனங்களும் பக் கத்தில் நின்றுகொண்டு அல்லவா பணத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

★ குறிப்பாக, பேங்க் ஆப் பரோடாவின் இயக்குநர், பிரம்ஜித்சிங் அரசுக்கும் அம்பா னிக்கும் தரகுவேலை செய்து இம்மோச டியை பகிரங்கமாக செய்து முடித்தார். அவர், ஏற்கனவே, 'கிரிஸ்டல் பாலி-பேப்' என்ற பினாமி ஆலைக்கு சொந்தக்காரர். ஆண்டொன்றுக்கு வெறும் 2646 ரூபாய் மட் டுமே லாபம் காட்டிய அவ்வாலையின் மூலம், 1.8 கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்தி ரங்களை அரசு நிதி நிறுவனங்கள் மூலம் கட னாக வாங்கியவர். இப்போது, அம்பானி யின் கருணையால், ஆண்டொன்றுக்கு 55 லட்சம் ரூபாய் அவ்வாலையில் லாபம் ஈட்டு கிறார். ரிலையன்ஸ்சில் தயாரிக்கும் பாலி யஸ்டர் நூலிழைகளை மெருகுபடுத்திக் (Texturise) கொடுக்கும் வேலையை இப் போது ஏகபோகமாக செய்து கொண்டிருக்கி றார்.

மத்திய புலனாய்வுத் துறை. சி.பி.ஐ. இயக்குநர் மோகன் காத்ரே மகனுக்கு 'ஸ்கை லேப் டிட்டர்ஜெண்ட் லிமிடெட்' என்ற கம் பெனியை உருவாக்கிக் கொடுத்தார் அம் பானி. தன் நிறுவனத்தின் பாலியஸ்டர் கழி வுகளை கொள்முதல் செய்யும் மொத்த ஏஜெண்டாக அவரை நிறுமனம் செய்தார். நிதித்துறையில் அதே மாதிரி பிரம்ஜித் சிங்கை வளைத்து வைத்திருக்கிறார் திரு பாய் அம்பானி.

அம்பானியின் தொழில் முறை எதிரி தரகு முதலாளி நுஸ்லிவாடியாவின் கூட்டாளியான கோயங்கா எக்ஸ்பிரஸ் குருப் நாளேடுகள் அம்பானிக்காக அரசு நிதிநிறுவனங்கள் செய்த மோசடிகளை கடந்த 3 மாதங்களாக தொடர்ந்து அம்பலப் படுத்தி வந்தன.

ஆய்ந்தறிந்த தகவல்கள், நேரடி விசார ணைகள், குறிப்பான ஆவணங்கள் மூலம் அம்பாணி - அரசு நிறுவனங்களின் மோசடி களை நிரூபித்தன. எப்படியும் அம்பாணி யின் 820 கோடி ரூபாய் பங்கு கடன் ஈட்டுப் பத்திரங்களின் வெளியீட்டு அனுமதியை தடுத்து நிறுத்தி விடுவது என கங்கணம் கட் டிக் கொண்டு களத்தில் இறங்கின. அம் பானி கும்பலும் அரசும் எதற்கும் அசைய வில்லை. பங்கு கடன் ஈட்டு பத்திரங்களின் விற்பனை மும்முரமாக தொடர்ந்தன. அக் டோபர் 16ந் தேதியோடு அதன் விற்பனை முடிவடைகிறது என்று செய்தி வெளியா னது.

பதறியடித்துக் கொண்டு கோயங்கா கும்பல் அம்பலப்படுத்துவதிலிருந்து அர சின் மீது வழக்கு தொடுக்க தாவியது. 'லார் சன் அண்ட் டூப்ரோ' பங்குதாரர்களையே வைத்து அந்நிறுவனத்தின் மீது பம்பாய் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. அம்பாணியோடு, அரசு மற்றும் அதன் நிதிநி றுவனங்களான CCI, IDBI, UTI, LIC, GIC, IFCI, BOB Fiscal, மற்றும் BSE, L&T, TILPL, குறிப்பாக CCI, BOB Fiscal இயக்கு நர்கள் மீது நேரடியாக குற்றம்சாட்டி மனு தாக்கல் செய்தது.

இவ்வழக்கு சார்பாக, பிரபல வழக்கறி ஞரும், நாடாளுமன்ற மேல்சபை உறுப்பின

குழு கோயாங்கா ஆதரவாளருமான ராம் ஜெத்மாலானி ஆஜரானார். மேலும் அரசின் தொழில்துறை சட்டங்கள், கொள்கைகள் இம்மோசடிக்கு எப்படி வளைக்கப்பட்டுள்ளன என்பதையும் சுட்டிக் காட்டியது.

கடந்த செப்டம்பர் 29ந்தேதி பம்பாய் உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

☆ இதன் மீது தீர்ப்பு வழங்கிய வி.எஸ். கொத்வால், '''லார்சன் அண்ட் டுப்ரோ'' நிறுவனம் அம்பாணியால் நிர்வகிக்கப்படுவது அல்ல. அது ரிலையன்ஸ் நிறுவனத்தின் ஒரு பிரிவும் அல்ல'' என்று வரலாற்று காணாத வகையில் புளுகினார்.

ஆனால் 'லார்சன் அண்ட் டுப்ரோ' நிறுவனமே தனது பங்கு கடன்ஈட்டு பத்திர வெளியீடு விளம்பரம், தகவல் அறிக்கைகளில் ''இது ஒரு ரிலையன்ஸ் குருப் நிறுவனம்'' என்று பல இடங்களில் திரும்பதிரும்ப குறிப்பிட்டுள்ளது. அதன் மூலம் 'லார்சன் அண்ட் டுப்ரோ' கூட்டுப் பங்கு கம்பெனிகளின் வரலாற்றிலேயே அதிக பங்குதாரர்களைக் கொண்டு வெற்றிநடைபோடும் ரிலையன்ஸ் நிறுவனத்தின் சகோதர நிறுவனம் என்று பொதுமக்களை கவர்ந்திழுத்தது. அந்த விளம்பரங்களை ஆதாரமாகக் காட்டியபோதும் நீதிபதி கொத்வால் தன்னுடைய அண்டப் புளுகுக்காக வெட்கப்படவில்லை.

☆ அம்பாணியின் மோசடிக்கு, பங்கு கடன்ஈட்டு பத்திர வெளியீட்டுக்கு அனுமதியளித்த பங்கு வெளியீட்டு நெறிநிறுவனம் (CCI) மற்றும் அரசு நிதி நிறுவனங்கள் சார்பாக வாதாடிய அரசு கூடுதல் சொலிசிடர் ஜெனரல், இது ஒரு இயல்பான ''வணிக பரிமாற்றம்'' அதற்குமேல் இதில் வேறு எந்த நோக்கமும் இல்லை என்றார்.

☆ அரசு நிதி நிறுவனங்கள், 'லார்சன் அண்ட் டுப்ரோ' பங்குகளை விற்கவில்லை. வழக்கம்போல் அவை பங்குகள்('a basket of Shares') விற்பனையைத் தான் செய்தன. அதில் 'லார்சன் அண்ட் டுப்ரோ' பங்குகள் இருந்திருக்கின்றன! ''நாங்கள் அம்பாணிக்கு விற்கவில்லை'' ''அப்பங்குகள் அம்பாணிக்கு போகும் என்பதுகூட எங்களுக்கு தெரியாது'' என்றார். அனைத்து பங்குகளும் ஒரே நாளில் விற்கப்பட்டது. 48 மணி நேரத்தில் அது, அம்பாணியின் கைக்கு சென்றது எல்லாம் இயல்பானது. முறை இது தான்! என்று அம்பாணியின் பக்கம் நின்று வாதித்திட்டன அரசின் நிதி நிறுவனங்கள்.

☆ பங்கு கடன்ஈட்டுப் பத்திரங்கள் வெளியீடு ஆட்சேபனை மனு 3 மணிநேரத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. வாலாறு காணாத வகையில் 3 மணிநேரத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பு சொல்லப்பட்டது.

☆ மனு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து மீண்டும் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் டிவிஷனல் பெஞ்ச்க்கு அப்பீல் செய்த பின், அம்மனு மீண்டும் கிடப்பில் போடப்பட்டது.

☆ பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி கொத்வால் தீர்ப்பை கிண்டல் செய்து இந்தியன் எக்ஸ்பிரஸ், பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கைகளின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தொடுத்தது, அம்பாணி கும்பல்.

www.padippakam.com

மேலும், பம்பாய் உயர்நீதி மன்றத்திலிருந்து டில்லி உச்சநீதிமன்றத்திற்கு மாற்றக்கோரும் அம்பாணியின் மனுவையும் சிலமணி நேரங்களிலேயே விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, காந்தி ஜெயந்தியன்றே உச்ச நீதிமன்ற நீதிபதி சபையசாட்சி முகர்ஜி வீட்டிலேயே விசாரித்தனர். எக்ஸ்பிரஸ் நிறுவனத்துக்கு அம்பாணியின் மனு மீது விளக்கம் கோரும் நோட்டீசோ, அந்த மனு நகல் விபரங்களோ அனுப்பப்படவில்லை.

★ வழக்கை பம்பாய் உயர்நீதிமன்றத்திலிருந்து டில்லி உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்காக சென்னை உயர்நீதி மன்றத்தில் பினாமியை வைத்து தன் மீதே ஒரு வழக்கு தொடுத்துக் கொண்டது லார்சன் அண்ட் டுப்ரோ நிறுவனம். இதை வைத்து, தம் மீதான வழக்கு இரண்டு மாநிலங்களில் நடப்பதால், டில்லிக்கு மாற்றவேண்டும் என்று கோரியது.

★ சென்னை மனுதாரர் அம்பாணியின் பினாமி என்பதை ஒலிபதிவு நாடா சாட்சியம் மூலம் (அம்பாணிக்கும் பினாமிக்கும் இடையே நடந்த உரையாடல் பதிவு) ஜெத்மாலானி சமர்பித்ததை ஏற்க மறுத்தது, உச்ச நீதிமன்றம்.

★ எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் வாதாடிய அம்பாணி கும்பல், இனிமேல் எக்ஸ்பிரஸ் நிறுவனம், 'லார்சன் அண்ட் டுப்ரோ' நிறுவனத்தைப் பற்றி எந்த ஒரு செய்தியோ, விமர்சனமோ, தலையங்கமோ எழுதக் கூடாது என்று இடைக்கால உத்திரவு உடனடியாக விதிக்க வேண்டும் என்று வாதிட்டது. அரசு நிதிநிறுவன வக்கீல் ஜி.ராமசாமி அவ்வழக்கிலும் வெட்கமில்லாமல், அம்பாணி கும்பலை ஆதரித்து, ''இடைக்கால உத்திரவு போட வேண்டும்'' என்று வெறியோடு வாதிட்டார். அம்மனு விவாதத்துக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது.

★ 'லார்சன் அண்ட் டுப்ரோ'வின் பங்கு கடன் ஈட்டு பத்திரங்கள் விற்பனை அக்டோபர் 16ந் தேதியோடு முடிவடைவதால், அதற்குள் இவ்வழக்கின் மீதான தீர்ப்பை வெளியிட கோரியும், அதை நீதிமன்றம் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. அம்பாணி கும்பலின் அற்ப மனுக்களுக்கு எல்லாம் விடுமுறை நாட்களை பயன்படுத்திய நீதிமன்றம் பொதுமக்கள் பணம் சம்மந்தப்பட்ட 820 கோடி ரூபாய் வழக்கு விசாரணையை, அற்ப காரணங்களுக்கு பலமுறை ஒத்திவைத்தது. அக்டோபர் 18ந் தேதி மீண்டும் விசாரணைக்கு நாள் குறித்திருக்கிறது!

★ அரசு நிதிநிறுவன வக்கீல் ஜி.ராமசாமியும், லார்சன் அண்ட் டுப்ரோ வழக்கறிஞர் கே.கே.வேணுகோபாலும் வெட்கமின்றி நீதிமன்றத்திற்கு பொய் தகவல் கொடுத்தனர். பங்கு கடன் ஈட்டு பத்திரங்கள் ஒரு பிரிவு விற்பனை டிசம்பர் 22ந் தேதி தான் துவங்கும். வெளியீட்டு தேதியை நிறுவனம் தள்ளிவைத்துவிட்டது என்று கூசாமல் புளுகினார்கள். அவர்களின் அண்ட புளுகை வேதவாக்காக எடுத்துக் கொண்டது நீதிமன்றம். வழக்கை அக்டோபர் 18ந் தேதிக்கு தள்ளிவைத்தது. உணவு இடைவேளைக்கு கலைந்தபோது உண்மை வெளிவந்தது. அந்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ தகவலறிக்கைப்படி பங்குகள் மறுநாளே விற்பனைக்கு வருவது தெரியவந்தது.

★ ஆனால் 17ந் தேதி 'இந்து' பத்திரிக்கையில் 820 கோடி ரூபாய் பங்கு விற்பனையை முறைப்படி வெற்றிகரமாக முடித்துவிட்டதாக பெருமையுடன் விளம்பரப்படுத்திவிட்டது, அம்பாணி கும்பல்.

★ பங்குமார்க்கெட் சூதாட்டம், கூட்டுப் பங்கு நிறுவனங்கள் கபளீகரம் அரசு நிதிநிறுவனங்களை சூறையாடல் - நேற்று வரை இவையெல்லாம் தரகு முதலாளிகளுடன் ஒட்டிப்பிறந்த தொழில் திறமைகள் என்று புகழப்பட்டன. அவர்களுக்குள் ரகசியமாக பேணிப் பாதுகாக்கப்பட்டுவந்தன. இன்று ஒன்றதன் அசிங்கத்தை மற்றொன்று உருவி காண்பிக்கிறது. வேடிக்கைப் பார்ப்பதல்ல நமது வேலை. அசிங்கங்களின் ஊற்றுமூலத்தை—தரகு முதலாளித்துவத்தை—அதற்கு துணைபோகும் அரை நிலப்பிரபுத்துவத்தை வேறொடும் வேறடி மண்ணோடும் வெட்டியெறிவது நமது முன்னுள்ள வேலை.

● **பச்சையப்பன்**

---

புதிய ஜனநாயகம்

## ஐந்தாவது ஆண்டுவிழா

**நவம்பர் 7-ம் தேதி தஞ்சையில்**

**இடம்: திலீபன் திடல்**
**நேரம்: மாலை 6 மணி**

**அன்பார்ந்த வாசகர்களே,**

*புதிய ஜனநாயகத்தில் வெளிவந்துள்ள கட்டுரைகள் அதன் அரசியல் கண்ணோட்டம் குறித்த உங்களது விமர்சனங்கள், ஐயங்களை அக்டோபர் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். அன்றைய நிகழ்ச்சியில் ஆசிரியர் அவற்றுக்குப் பதில் அளிப்பார். தவறாமல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுங்கள்! புதிய ஜனநாயகத்தின் வளர்ச்சிக்குக் கருத்தால் உதவுங்கள்!*

ஆசிரியர் குழு

---



படிப்பகம்

www.padippakam.com

# ஐரோப்பிய தமிழ் அகதிகள் மீது புதிய நாஜிக்கள் தாக்குதல்

# துயரம் துரத்துகிறது!

இன்னும் எத்தனை கொலைவெறிக் கூட்டங்களுக்குத் தான் இலங்கைத் தமிழர்கள் தம் உயிரைக் காவு கொடுக்க வேண்டியிருக்கும்? சிங்களக் காடையர்களின் இனப் படுகொலைகள்; இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு மக்கள் திரள் கொலைகள்; இன விடுதலை முழக்கமிட்டுக் கிளம்பிய போராளி அமைப்புகள் துரோகத்தாலும், பாசிசத்தாலும் நஞ்சாகிப் போய் நடத்தும் அழித்தொழிப்புகள் - இவற்றில் இருந்து எப்படியோ தப்பித்து அந்நியதேசங்களில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழர் வாழ்க்கை எப்படி உள்ளது?

உலகத் தமிழர்களின் தாயகம் என்று இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தமிழ் நாடு சொல்லப்படுகிறது. உலகத் தமிழினத் தலைவர்கள், காவலர்கள், தளபதிகள் என்று பட்டம் சூட்டிக்கொண்ட திராவிடக்கட்சிகள் மாறிமாறி ஆளும் மாநிலம் தமிழ்நாடு. இங்குதான் உலகிலேயே மிகக் கேவலமாக இலங்கைத் தமிழர்கள் நடத்தப்படுகிறார்கள்.

ஏற்கனவே, ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மலையகத் தமிழர்களில் பெரும்பாலானோர் 'தாயகம்' - தமிழ்நாட்டிலே கொத்தடிமைகளாக்கப்பட்டு விட்டனர். அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய் நிதியை, சேவை நிறுவனங்களையும். அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிழைப்புவாதிகள் சுருட்டிக் கொண்டனர். ஆலைகள் துவங்கி, மலையகத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிப்பதாகச் சொல்லி தமிழக ஆலை முதலாளிகள் கோடி கோடியாக ஏப்பம் விட்டனர்.

1983 ஜூலை இனப்படுகொலையைத் தொடர்ந்து லட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர். ஏற்கனவே 'தாயகம்' திரும்பிய மலையகத் தமிழர்களைக் கொத்தடிமைகளாக்கிய தமிழ் நாட்டில் பிறகு வந்த ஈழ அகதிகளுக்கு மட்டும் கௌரவமான வாழ்க்கை கிட்டுமா? திராவிடக் கட்சிகளின் பிழைப்புவாத அரசியலுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள்; ஈழப் போராளி அமைப்புகளிலேயே துரோகிகளாகவும், பாசிஸ்ட்டுகளாகவும் சீரழிந்த பிரிவினரின் வேட்டைக்கு இலக்கானார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தெற்கு ஆசிய ஆதிக்க, ஆக்கிரமிப்பு - விரிவாக்க நோக்கங்களுக்கான பணயக் கைதிகளாக - பகடைக் காய்களாக ஈழத் தமிழ் அகதிகளை பாசிச ராஜீவ் கும்பல் பயன்படுத்துகிறது.

உலகத் தமிழர்களின் தாயகம் என்று சொல்லப்படும் தமிழ்நாட்டிலேயே ஈழத்தமிழர்களுக்கு இந்தக் கதி என்றால் நிறவெறி - இனவெறி பிடித்த காலனி ஆதிக்க, ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளவார்களின் நிலை என்ன? ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் அரபுநாடுகளிலும், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அவர்களிலே பலரும் இன விடுதலை உணர்வும், புரட்சிகர உணர்வும் உள்ளவர்கள். ஈழப் போராளி அமைப்புகளின் துரோக, பாசிச நடவடிக்கைகள் காரணமாகவும் சிங்கள பேரின ஒடுக்குமுறை, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவக் கொலைவெறி ஆகியவை காரணமாகவும் ஈழத்திலிருந்து விரட்டப்பட்டவர்கள். தற்காலிகமான வேலைவாய்ப்புகளினால் ஒப்பீட்டு ரீதியில் வசதியாக' வாழ்பவர்கள். ஆனாலும், இன விடுதலை உணர்வும், புரட்சிகர உணர்வும் குன்றாத அவர்களில் சிலர் சாத்தியமான அளவு சிறு அமைப்புகளாக இயங்குகின்றனர்.

அவற்றிலே ஒன்றுதான் சுவிசர்லாந்தில் வாழும் ஈழத்தமிழர்கள் நடத்தும் வாசகர் வட்டம். அதன் "மனிதம்" என்ற பத்திரிக்கையின் 1989 செப்டம்பர் இதழில் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்களின் வாழ்நிலை மற்றும் அவர்களுக்கு எதிரான இயக்கங்கள் குறித்து எழுதியுள்ள பகுதிகளை இங்கே தருகிறோம்:

ஐரோப்பாவின் இயந்திர வாழ்வுடன்; எங்கள் வாழ்வியலுடன் எந்தவிதத்திலும் பொருந்த முடியாத சமூக புவியியல் சூழ்நிலையுடன்; நிர்ப்பந்தமாக எம்மை இணைத்திருக்கிறோம்.

ஓர் சமூகமாக ஒன்றிப்பதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறோம். பல பத்து வருடங்கள் சென்றாலும் அரசியல் தஞ்சம் பெற்றவர்கள் உட்பட அனைவருமே இந்நாடுகளில் அரசியல் அந்தஸ்தை அதற்கான உரிமைகளை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது.

மறுபுறம்; கிட்லரினால் ஆரம்பித்த வழிநடத்தப்பட்ட தேசிய வெறியும், நிறப் பாகுபாடும் கொண்ட நாசிசக் கொள்கை புத்துயிர் பெற்று எம்மைத் துரத்திக் கொண்டிருக்கிறது.

எங்கள் பிள்ளைகளின்; சிறார்களின் நிலைமைகளோ வித்தியாசமானது. மேலும் சிக்கலானது! மேற்கத்திய சமூக வாழ்வுடன் தம்மை முழுமையாக இணைத்துக் கொள்ள முடியாமலும், எங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் சந்தர்ப்பத்தில் எங்கள் சமுதாய வாழ்வை பூரணமாக அங்கீகரிக்க மனமின்றியும், போதிய தமிழ் அறிவைப் பெற்றுக் கொள்ளாமையினாலும் எதிர்காலத்தில் விரக்திக்குட்பட்டுச் சீரழிந்து செல்லக்கூடிய நிலைமைகளில்தான் எங்கள் சிறார்கள் இங்கு வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் அந்நிய மண்ணில் எங்களுக்கு எங்கள் குழந்தைகளுக்கு என்று ஓர் எதிர்காலம் அற்ற திறந்தவெளிச் சிறைக் கைதிகளாகவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேலும் இதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சுவிட்சர்லாந்து அரசு மட்டங்களில் இருந்து வெளிவந்துள்ள கூற்று ஒன்றைப் பாருங்கள்!

"தமிழ் அகதிகளை நாம் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை அங்கு இல்லை. அதேவேளை அவர்களுக்கென்று ஓர் எதிர் காலமும் இங்கில்லை"

ஐரோப்பிய தமிழ் அகதிகள் இன்று ஒரு புதிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். புதிய நாஜிகளினதும் அதிதீவிர வலதுசாரிகளினதும் வளர்ச்சி இன்று அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் பல்வேறுபட்ட புதிய நாஜிக் குழுக்கள் உருவாகியுள்ளன. இங்கு முக்கியமாக நான்கு புதிய நாஜிக் குழுக்கள் உள்ளன.

(1) தாய்நாட்டு முன்னணி - இக்குழு சுவிட்சர்லாந்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றது.

சுவிட்சர்லாந்தில் புதிய நாஜிகளின் இனவெறி ஆர்ப்பாட்டம்; வைகிங்-ஜுகெண்ட் கூட்டமைப்பின் குறியீடு.




படிப்பகம்

www.padippakam.com

(2) புதிய முன்னணி - இக்குழு விண்டர்சர், சூரிச், பாடென், பெர்ன், ஷாஃட்சென், ப்யூலாஷ் போன்ற பகுதிகளில் இயங்கி வருகிறது.
(3) சுவிட்சர்லாந்து தேசிய புரட்சிகரக் கட்சி
(4) மேற்கண்ட மூன்று குழுக்களும் அங்கம் வகிக்கும் வைகிங் ஜூஜெண்ட் என்ற கூட்டமைப்பு. மேலும் இக்குழு துணை இராணுவப் பிரிவுகளையும் வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

''ஜெர்மனியில் இருக்கும் 'தேசிய சோசலிஸ்டுகள்' போலவும் அமெரிக்காவில் இருக்கும் கு குளக்ஸ் கிளான் (அமெரிக்க இனவெறி - வெறி அமைப்பு, புதிய நாஜிக்கள்) போலவும் நாம் இருந்தாலும், நாங்கள் நாஜிக்கள் அல்ல. மாறாக, தேசியவாதிகள்'' எனத் தெரிவித்துள்ளனர், தாய் நாட்டு முன்னணித் தலைவர்களான மார் செல்ப்ரேபெல் மற்றும் ஓட்டோ ரோய்லி ஆகியோர் ''நமது போராட்டம் அகதிகளுக்கு எதிரானதும் வெளிநாட்டவர்களுக்கு எதிரானதும் கம்யூனிசத்துக்கு எதிரானதுமான துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவது'' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சுவிட்சர்லாந்து தேசிய புரட்சிக்கட்சி 1989ம் ஆண்டு மார்ச்சு மாதம் பல்வேறு பட்ட குழுக்களை இணைத்து உருவாக்கப் பட்டது. இக்குழு ப்யூலாஷ், ஷாஃப்சென் போன்ற இடங்களில் தேர்தலில் குதிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

புதிய முன்னணிக்குழு தலைமறைவாக இருப்பதாகவும், தமக்கும் ஜெர்மனியில் இருக்கும் புதிய நாஜிக்களான சுதந்திர ஜெர்மனிய தொழில் கட்சியுடன் தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இக்குழு சென்ற வருடம் நவம்பர் மாதம் ஒன்றுகூடிய போது உருவாக்கப்பட்டதாகவும் பெர்ன் நகரில் வாழும் ஒரு மின் ஊழியர் தெரிவித்துள்ளார். இவர்கள் ''நட்புறவு'' என்ற பத்திரிக்கையை வெளியிடுகின்றனர். நாஜிக்கள் ஆண்டபோது ஒரு யூதக்குடும்பம் ஹாலந்தில் தலைமறைவாய் வாழ்ந்த கதையை நாவலாக எழுதி, சுவிட்சர்லாந்தில் நாடகமாக்கி அரங்கேற்றிய போது இந்தப் புதிய முன்னணிக்குழு அரங்கில் புகுந்து குழப்பம் விளைவித்தது. இதை வரவேற்ற ஜெர்மனிய தொழில் கட்சி, புதிய முன்னணியைத் தனது சகோதர இயக்கமாக அறிவித்துள்ளது. இவை அந்த முன்னணியின் ''நட்புறவு'' ஏட்டிலே வந்த செய்திகள்.

இவ்வகையான புதிய நாஜிக்களின் ஒருங்கிணைந்த கோஷங்கள்: ''சுவிட்சர்லாந்து சுவிஸ் நாட்டவர்களுக்குரியதே'', ''வெளிநாட்டவரே உங்கள் நாடுகளுக்குத் திரும்பிப் போ. தமிழனே வெளியேறு! யூதர்களே இஸ்ரேலுக்குத் திரும்பிப் போ! அங்கு உங்களுக்குப் போதிய இடம் உள்ளது'' ஆகியன.

இக்குழுக்கள் அனைவரும் 1983ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய ஒருங்கிணைப்புக் குழுவில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுவது வழமை. இந்த ஒருங்கிணைப்பில் சுவிட்சர்லாந்து இனவெறிக் கட்சியான தேசிய செயல் கட்சியும் அங்கம் வகிக்கின்றது. இந்த ஒருங்கிணைப்பின் உயர் மட்டக்குழுவில் 68 வயதுடைய காஸ்டன் அரோநோனேல் என்ற பழைய பாசிஸ்





புதிய நாஜிக்கள்: ''மனிதம்'' ஏட்டில் வெளியான படம்.

டும் அங்கம் வகிக்கிறான். (இவன் ஸ்பானிய பாசிச சர்வாதிகார ஆட்சி சார்பாக ஆயுதம் ஏந்தி போராடியவன்) இந்த ஒருங்கிணைப்பு மகாநாடு சுவிஸில் உள்ள ஃரெய்பர்க் நகரில் வழமையாக நடைபெற்று வருகின்றது. மேற்கூறிய புதிய நாஜிக்களின் கருத்துக்களை உத்தியோகபூர்வமாக தேசிய செயல்கட்சி பிரதிபலிப்பு செய்கின்றது. அதன் நிறைவேற்றக்குழு அங்கத்தவரின் தபால்பெட்டி இலக்கமே தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வருடம் மே மாதம் கடைசி வாரத்தில் கண்டோன்ஜூக் என்ற இடத்தில் உள்ள தமிழர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு ஒரு தமிழர் படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சுவிட்சர்லார்ந்திலுள்ள புதிய நாஜிக் குழுக்களும் அதிதீவிர வலதுசாரிகளும் மேலும் மேற்கு ஜெர்மனியிலுள்ள புதிய நாஜிக்களுமாக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களைக் கொண்ட விருந்துபசார விழாவினை 'தாய்நாட்டு முன்னணி' ஒருங்கமைத்திருந்தது. இவ்விழா கண்டோன்ஜூக்கில் உள்ள செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்ட 20 மொட்டையடித்த இராணுவ கவச உடையணிந்தவர்கள் பொலீஸ் நிலையத்திற்கு மிக அண்மையில் தமிழ் அகதிகள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலை புதிய நாஜிக்களின் விருந்துபச்சார

பாசிச முசோலினி பாணியில் மொட்டையடித்து இராணுவ கவச உடையணிந்துள்ள புதிய நாஜி.



விழாவிற்கு வந்தவர்களே செய்ததாக பல பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தியிருந்தன. இரண்டு நாட்களுக்குப்பின் கண்டோன் ஜூக் குற்றத்தடுப்பு பொலீஸ் தலைமை அதிகாரி 'ஜோசஃப் ருஸ்' பத்திரிக்கையாளரின் அபிப்பிராயத்திற்கு எதிராக அறிக்கையொன்றை சமர்ப்பித்தார். தமிழர் மீதான தாக்குதலை புதிய நாஜிக்கள் நடத்தவில்லையெனவும், இதனைத் தாய்நாட்டு முன்னணியின் பேச்சாளர் தமக்கு உறுதியளித்ததாகவும், இத்தாக்குலை சாதாரண குழப்பக்காரர் செய்திருப்பதாகவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இப்போலீஸ் அதிகாரியின் தகவலை பொய்மையாக்கும் விதத்தில் சம்பவம் நடந்த மூன்று நாட்களுக்குப் பின்பு பொலீசாரால் 20 வயதுடைய ''டேனியல் அபெஹார்டு'' என்பவர் கைது செய்யப்பட்டார். இவர் தாய்நாட்டு முன்னணியின் நிறைவேற்றக் குழு அங்கத்தவர் என்பது நிருபணமாகியது. இவரின் வீட்டினை சோதனை செய்த பொலீசாரால் முன்னணியின் பல இனவெறி பிரச்சாரத் துண்டுப் பிரசுரங்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. பொலீசார் கைது செய்த ஆயுதங்களில் தோட்டா செய்யும் கருவியும் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யூலை மாதம் 2ந்தேதி 'சுர்' என்னும் இடத்தில் தமிழர் இருந்த வீடொன்றின் மீது தீ வைக்கப்பட்ட சம்பவம் அனைத்துத் தமிழ் அகதிகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இச்சம்பவத்தில் இரண்டு சிறுவர்கள் உட்பட நான்கு தமிழ் அகதிகள் இறந்துள்ளனர். இக் கோர சம்பவத்தினை புதிய நாஜிக்களே செய்தார்கள் என்பது இப்புதிய நாஜிக்கள் 'சுர்'இல் மேற்கொண்ட நடவடிக்கைகள் உறுதி செய்வதாக அமைகின்றது.

இச்சம்பவம் நிகழ்வதற்கு மூன்று வாரங்களிற்கு முன்பாக தமிழர் எதிர்ப்பியக்கம் என உரிமை கோரியும், சுவிட்சர்லாந்து சிலுவை பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் பரவலாக விநியோகிக்கப்பட்டு இருந்ததும் இதற்கு முன்னரே 'சுர்'இல் உள்ள இன்னோர் அகதி முகாமை தீயிட எடுத்த முயற்சி தோல்வியுற்றுள்ளதும் போன்ற சம்பவங்கள் இவ் வீட்டெரிப்பில் புதிய நாஜிக்கள் சம்பந்தம்


படிப்பகம்

www.padippakam.com

பட்டதனை உறுதி செய்கின்றது. மேலும் இவ்வகையான தீவைப்பு முயற்சிகள் 'கர்' இல் உள்ள இன்னொரு அகதி முகாம் மீது மூன்று முறை நடந்தது. இதுபோன்று 'பொர்ன்' இல் 'ஒஸ்டெர்முண்டிஜென்' என்ற இடத்திலும் தீவைப்பு முயற்சி நடந்தது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய நாஜிக்கள் இந்நாட்டில் வாழும் ஐரோப்பியர்களுக்கெதிராக செயற்படவில்லை. மாறாக வெளிநாட்டவர் என்ற போர்வையில் ஆசிய, லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க மக்களுக்கெதிராகவே கூடுதலான எதிர்ப்புணர்வை காட்டுகின்றனர். இவர்கள் வளர்வதற்கு ஐரோப்பிய அரசுகளும் காரணமாக அமைகின்றன. ஏனெனில் நாட்டில் ஏற்படும் முக்கிய நெருக்கடிகளுக்கு வெளிநாட்டவர்களே முக்கிய காரணம் என போலிக் காரணங்களைக் கூறித் தப்பித்துக் கொள்கின்றனர். இக்காரணங்களைப் புதிய நாஜிக்கள் இலகுவாகப் பயன்படுத்தி வருகின்றனர். (தற்போது தமிழ் அகதிகள் மீதான தாக்குதல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகின்றன) இவர்களுக்கு எதிரான பிரச்சாரங்களை இடதுசாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இவர்களைவிட எண்ணிக்கையில் புதிய நாஜிக்கள் அதிகமாக உள்ளனர். பிரான்ஸ் நாட்டிலிருக்கும் 'தேசிய முன்னணி' எனும் புதிய நாஜிக்கள் குழு அங்குள்ள 'கம்யூனிஸ்டு' கட்சியைவிட 15% பலம் வாய்ந்ததாக உள்ளது. இவர்கள் வளர்ந்துவரும் போக்கில் தாக்குதல்கள் பரவலாக மேற்கொள்ளப்படலாம்.

இந்நிலையில் ஐரோப்பிய தமிழ் அகதிகள் நிரந்தரமாக வாழலாம் என நினைப்பார்களாயின் அது கற்பனையாகவே அமையும். மேலும் இன்று ஐரோப்பாவில் பிறக்கும் தமிழ் குழந்தைகள் இந்நாடுகளிலேயே கல்வி கற்று, தொழில் வாய்ப்புகளில் ஈடுபடலாம் என்று எண்ணுகின்றனர். இவ்வெதிர்பார்ப்பு சாத்தியமற்றதொன்றாகும். இன்று ஐரோப்பிய நாடுகள் தாம் விரும்பாத வேலைகளையே வெளிநாட்டவர் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்படுகின்றது. இதனால் நாம் அவர்களுடன் தொழில் ரீதியாக போட்டியில் நேரடியாக ஈடுபடவில்லை. மாறாக இங்கு வளர்ந்துவரும் தமிழ்க் குழந்தைகள் எதிர்காலத்தில் இந்நாட்டவர்களின் தொழில் வாய்ப்புகளுடன் போட்டி போடும் போது நாஜிகளின் நடவடிக்கை பன்மடங்காக அதிகரிக்கும். ஒரு நாட்டில் வாழும் சமூக அரசியல் உரிமையின்றி வாழ முடியாது. ஏனெனில் அச்சமூகம் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசியல் உரிமை முக்கியமானதாகும். சுவிட்சர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் நீண்டகாலமாக வாழும் வெளிநாட்டவர்களுக்கு இன்றும் வாக்குரிமை கூட கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய தமிழ் அகதிகளாகிய நாம் இந்நாட்டில் பிரச்சினை உண்டாயின் இன்னோர் நாட்டிற்கு செல்லலாம் என்றால், அந்தந்த நாடுகளில் வெவ்வேறுவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவே நேரும். அவைகளைப் பார்க்கும் போது வெளிநாடுகளில் நிரந்தரமாக வாழ முடியாது என்பதை மேற்கூறிய நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ◆



## டான்செம்:

# ஊழலில் அதிகாரிகள்! அடக்குமுறையில் தொழிலாளர்கள்!

நாளொரு தொழில், பொழுதொரு பெருக்கம் என்று வாய்ப்பந்தல் போடும் கருணாநிதியின் ஆட்சியில், கள்ளச்சாராயத் தொழில்தான் பெருகி வருகிறது. தமிழக அரசே நடத்தும் "டான்செம்" எனும் சிமெண்டு - ஆஸ்பெஸ்டாஸ் உற்பத்தி செய்யும் அரசுத் துறை நிறுவனமோ மூடுவிழாவை எதிர்நோக்கி மரணப் படுக்கையில் வீழ்ந்துள்ளது.

குறிப்பாக, மாயனூரில் ஏறத்தாழ ரூ.9 கோடி மதிப்புள்ள குழாய்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. ஆர்டர் இல்லை என்று கூறி ஆண்டு தோறும் இரண்டு மாதம் ஆலையே இயங்குவதில்லை. இதைக் காட்டி, ஆலை நட்டத்தில் இயங்குவதால் எந்த சலுகையும் தரமுடியாது; போனசும் கிடையாது என்று அதிகாரிகள் தொழிலாளிகளை மிரட்டி ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மென்றால் மெமோவும், ஏன் என்றால் சஸ்பெண்டும் என அதிகாரிகளின் கொட்டம் இங்கு தலைவிரித்தாடுகிறது.

மாயனூர் நிறுவனத்தில் உள்ள தொழிற்சங்கங்களோ அப்பட்டமாக துரோகமிழைத்து கருங்காலி வேலை செய்கின்றன. ஒன்றுபட்ட தொழிற்சங்கம் 1986ல் தி.மு.க; அ.தி.மு.க. என பிளவுப்பட்ட பிறகு, அதிகாரவர்க்கம் தொழிலாளிகளை மேலும் கடுமையாக ஒடுக்கத் தொடங்கியது. 1987-ல் கூலி உயர்வு கோரி தி.மு.க. மற்றும் பொது சங்கமும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது, அ.தி.மு.க. கருங்காலிகள் மட்டும் வேலைக்குச் சென்றனர். அப்போது "டான்செம்" நிறுவனத் தலைவராயிருந்த சுலோசனா சம்பத், இவர்களுக்கு சிறந்த ஊழியர்கள் என்ற பட்டமளித்து ஒரு வருட ஊதிய உயர்வும் கொடுத்தார். இப்போது தி.மு.க. ஆட்சி வந்தபிறகு, அ.தி.மு.க. கருங்காலிகளுக்குத் தரப்பட்ட ஊதிய உயர்வை ரத்து செய்ய வேண்டும்; வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு 8 நாள் சம்பளப் பிடித்தம் செய்ததை திருப்பித்தரவேண்டும் முதலான கோரிக்கைகளை மின்துறை அமைச்சர் நேருவிடமும், தொழிலமைச்சர் பொன். முத்துராமலிங்கத்திடமும் முறையிட்டும் கூட இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இப்போது தி.மு.க.வினர் அன்றைய அ.தி.மு.க.வினரைப் போலவே கருங்காலி வேலை செய்து அதிகாரிகளின் செல்லப் பிள்ளைகளாகி விட்டனர். தங்களுக்குத் தேவையான சிறு சிறு சலுகைகளையும் பெற்றுக் கொள்கின்றனர். தட்டிக் கேட்க யாருமில்லாத தைரியத்தில் அதிகாரிகள் ஊழலில் கொழுக்கின்றனர். ஒவ்வொரு அதிகாரியும் தனது பினாமிகளை வைத்து காண்ட்ராக்ட் எடுத்து பல வழிகளிலும் கொள்ளையடித்து ஆலையையே திவாலாக்கி விட்டனர். இந்த காண்ட்ராக்டர்களுக்கு ஆலையிலேயே அனைத்து உபகரணங்களும் வழங்கப்படுவதோடு, நிரந்தரத் தொழிலாளிகளையே காண்ட்ராக்ட் வேலையைச் செய்யுமாறு நிர்பந்திக்கின்றனர். மறுத்தால் சஸ்பெண்டு செய்துவிடுவோமென தொழிலாளிகளை அதிகாரிகள் மிரட்டுகின்றனர்.

நிரந்தரத் தொழிலாளர்கள் ஒருபுறமிருக்க, நிரந்தரமற்ற (என்.எம்.ஆர்) தொழிலாளிகளும், காண்ட்ராக்ட் தொழிலாளிகளும் கொத்தடிமைகளை விடக் கேவலமாக நடத்தப்படுகின்றனர். அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச கூலியான ரூ.15-ஐக் கொடுத்ததாக காண்ட்ராக்ட் தொழிலாளியிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு ரூ.10 தான் கொடுக்கின்றனர். ஏன் என்று கேட்டால் மிரட்டுவதோடு, வேலையில்லை என்று வெளியே தள்ளுகிறார்கள். அதே போல, நிரந்தரமற்ற தொழிலாளிகளை மூன்று மாதத்திற்கொரு முறை இடைவெளி விட்டு மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொண்டு நிரந்தரமாக்காமல் ஆண்டுக்கணக்கில் இழுத்தடிக்கிறார்கள்.

இப்போது மாயனூர் ஆலை கடந்த இரு மாதங்களாக ஆர்டர் இல்லை என்ற பெயரில் மூடிக் கிடக்கிறது. இந்த லட்சணத்தில், "டான்செம்" நிறுவனம் விருத்தாசலத்தில் மூன்றாண்டுகளாக மூடிக்கிடந்த பீங்கான் தொழிற்சாலையை வாங்கி, அதை நல்ல லாபத்துடன் இயக்கப் போவதாக கூறுகிறது. இதற்காக மாயனூர் ஆலையில் பணியாற்றும் ஒரு பிரிவு தொழிலாளர்களை விருத்தாசலத்திற்கு அனுப்பவும் முடிவு செய்துள்ளது. அந்தப் பீங்கான் ஆலை இயங்கினாலும் இயங்காவிட்டாலும் அதிகார வர்க்கத்தின் கொள்ளைக்கு இன்னுமொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதுதான் உண்மை.

போலிக் கம்யூனிஸ்டுகள் பிதற்றுவது போல, அரசுத் துறை நிறுவனங்கள் சோசலிசத்திற்கான கூறுகள் அல்ல; அதிகார வர்க்கத்தின் கொள்ளைக்கும் அடக்குமுறைக்குமான நிறுவனங்களே என்பதை டான்செம் தெளிவாகவே நிரூபித்துள்ளது.

ஆட்குறைப்பு, வேலையின்மை, அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையால் அல்லற்படும் தொழிலாளர்கள் இனியும் ஓட்டுக்கட்சி சங்கங்களை நம்பியிராமல் புதிய, புரட்சிகரமான சங்கத்தைக் கட்டியமைத்து உடனடியாகப் போராட வேண்டும். இல்லையேல், அதிகாரவர்க்கம் இருக்கின்ற கொஞ்சநஞ்ச உரிமைகளையும் பறித்து தொழிலாளிகளைக் கொத்தடிமைகளாக்குவதோடு, வேலையையும் பறித்து வீதியில் வீசியெறிந்து விடும்.

**— வாசகர் வட்டம், மாயனூர்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பா[illegible]சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
[illegible] பிரேம் பிரஸ், 107-எ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

படிப்பகம்

www.padippakam.com



தாழ்த்தப்பட்ட மக்களுக்கான குடியிருப்புகள் கட்ட பீகார் முதல்வர் பத்தாண்டுகளுக்கு முன் நாட்டிய அடிக்கல்.



# இதுதான் இன்றைய இந்தியா

இதோ இங்கு நீங்கள் பார்ப்பது பத்தாண்டுகளுக்கு முன்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக பீகார் முதல்வர் ராம் சுந்தர் தாஸ் பாட்னாவில் நாட்டிய அடிக்கல். இவ்வளவு ஆண்டுகளாகியும் ஒரு கவர்கூட வைக்கப்படவில்லை. இதேபோல பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு மேற்கு சாம்ரானில் பாலம் கட்டுவதற்காக இந்திரா அடிக்கல் நாட்டினார். இன்னமும் ஒரு கல்கூட வைக்கவில்லை. அப்பகுதியிலிருந்து நேபாளத்துக்கு போக 110 கி.மீ. சுற்றிப்போக வேண்டியுள்ளது.

பாட்னா, கங்காபாக்கில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் நினைவு மருத்துவமனைக்கு சஞ்சீவரெட்டி அடிக்கல் நட்டு பத்தாண்டுகளாகிவிட்டன. கமலாபாலன் ஆற்றுப் பாலத்துக்கு லால்பகதூர் சாஸ்திரி போட்ட அடிக்கல்லுக்கு மீண்டும் பீகார் முதல்வர் பிநோதானந்த் பூஜை போட்டார். 15 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய மந்திரி லலித்நாராயண் மிஸ்ரா, அவரது தம்பி பீகார் முதல்வர் ஜகந்நாத் மிஸ்ரா, பீகார் மந்திரி ரமேஷ் ஜா ஆகிய மூவர் சகர்சா என்றரின் சமூகக் கூடத்துக்கு மூன்றுமுறை அடிக்கல்கள் நாட்டினார்கள். 1970ம் ஆண்டுகளில் அடுத்தடுத்து வந்த மூன்று முதல்வர்கள் பீகார் - ம.பி. இடையிலான ஒரு பாலத்துக்கு அடிக்கல்கள் நாட்டினார்கள். இவ்வளவு ஏன்? ராஜீவே அடிக்கல் நாட்டிய ஆசாத் நினைவு மருத்துவமனைக்கான அடிக்கல்லே காணாமற் போய்விட்டது - இப்படி கிடப்பில் போடப்பட்ட பல திட்டங்கள் உங்கள் ஊரிலும் இருக்கலாம்.

ஆனால் இதோ பாருங்கள்! வெறும் உள்ளாடைகள் நிற்கும் விவசாயி பெருநகருக்கு மின்னணுவியல் நேரடி தொடர்பு கொண்ட தொலைபேசியில் பேசுகிறார். காரணம் இது பிரதமர் ராஜீவின் அமேதி தொகுதி. இந்தத் தொகுதியின் 1299 வருவாய்க் கிராமங்களில் 1254க்கு மின் இணைப்பு கிடைத்துவிட்டது. 1146க்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், மீதி கிராமங்களில் 400 ஆழ்கிணறுகள். 36 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 1150 கி.மீ. தார்ச் சாலைகள் ஆலைகளே இல்லாத கிராமப்புறத் தொகுதியான இங்கு 15 பெரிய ஆலைகளும் 1231 நடுத்தர, சிறிய ஆலைகளும் கடந்த 5 ஆண்டுகளில் வந்துவிட்டன.

கிராமங்கள் பின்தங்கி இருக்கவேண்டும் என்பது நமது நோக்கமல்ல. ஆனால் பக்கத்துத் தொகுதிகளிலும், பக்கத்து மாநிலங்களிலும் அடிக்கல் நாட்டப்பட்டு பல ஆண்டுகளாயினும் அவை கிடப்பிலே போடப்படுகின்றன. நினைவுச் சின்னங்களாகிவிட்டன. ஆனால் பிரதமரின் தொகுதி என்பதால் அவரது மனைவி சோனியா, மகன் ராகுல், மகள் பிரியங்கா, எம்.பி. சத்தீஷ் சர்மா ஆகியோர் பலத்த பாதுகாப்புப் படையுடன் மாதம் ஒருமுறை வந்து கலக்கிவிடுகின்றனர். மக்கள் மீதுள்ள கரிசனையாலா? தனது தேர்தல் வெற்றியை உறுதி செய்துகொள்ளும் அக்கறையினாலா? இந்த மாதிரியான ஒட்டுண்ணி, பாசிசக் கும்பலை அடியோடு தூக்கியெறிவது எப்போது?





படிப்பகம்